
# கனிச்சாறு



பாவலரேறு
## பெருஞ்சித்திரனார்
பாடல்கள்

5

குஞ்சுகளுக்கு
பறவைகளுக்கு
மணிமொழிமாலை

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்

(கனிச்சாறு)

படையல்

- எதிர்காலத் தமிழின மீட்பர்களுக்கும்
- தமிழீழ விடுதலைத் தலைவர்களுக்கும் மறவர்களுக்கும்
- அயல்நாடுகளில் வாழும் தமிழின மக்களின் முன்னேற்றத்திற்காக ஆங்காங்கு பாடுபடும் தமிழினத் தலைவர்களுக்கும்

**இந் நூற்றொகுதிகள் படையலாக்கப்படுகின்றன.**

– ஐந்தாம் தொகுதி

| | | |
|---|---|---|
| முழுமையான முதற்பதிப்பு | : | தி.பி. 2043. துலை ( அத்தோபர் 2012 ) |
| நூல் தலைப்பு | : | **பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்**<br>(கனிச்சாறு - ஐந்தாம் தொகுதி) |
| ஆசிரியர் | : | *பாவலரேறு பெருஞ்சித்திரனார்* |
| வெளியீடு | : | *தென்மொழி பதிப்பகம்*<br>செந்தமிழ் அடுக்ககம்<br>(சி.கே. அடுக்ககம்)<br>மேடவாக்கம் கூட்டுச்சாலை,<br>மேடவாக்கம், சென்னை - 600 100<br>94444 40449 |
| அச்சாக்கம் | : | *தென்மொழி அச்சகம்,*<br>சென்னை - 600 100 |
| உரிமை | : | *தாமரை பெருஞ்சித்திரனார்* |
| பக்கங்கள் | : | 32+168 |
| தாள் | : | படத்தாள் (மேப் லித்தோ 18.6) |
| அளவு | : | தெம்மி (1/8) |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. 150.00 |

# முன்னுரை

இயற்கை ஓர் ஒழுங்குடையது. நிலம் நெறியான ஓர் இயல்போட்டத்தை உடையது.கதிரவனும் விண்மீனும் ஓர் ஒழுங்கான அசைவை உடையன. புடவியும் பேரண்டமும் அவற்றுள் இயங்கும் பல்லாயிரங்கோடி இயற்கைக் கோளங்களும் சுடர்த் தொகுதிகளும் சிறிதே ஒழுங்கின்றி இயங்கத் தொடங்கினும் உடனே பேரழிவு நேரும்.

இவ்வியற்கை நிலையினைப்போல், இயற்கையுட்பட்ட அனைத்து நிலைகளிலும் அதனதற்குப் பொருந்திய ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவிக்கும் இவ்வொழுங்கு சிதைவுறின், அச் சிதைவுக்கேற்ப, படிப்படியான அழிவுநிலைகளே நேரும் என்பதில் துளியும் ஐயமின்று.

உயிர்கள் அனைத்தினும் மேம்பட்டு விளங்கும் மாந்த இயக்கமும் அதன் பரும, நுண்ம நிலைகளுக்கு ஏற்ப, ஒழுங்குற இயங்குதல் வேண்டும் என்பதே இயற்கையின் உட்கோளாதல் வேண்டும். ஒழுங்கற்ற பரும இயக்கத்தால் உடல் சிதைவுறுதல்போல் ஒழுங்கற்ற உணர்வியக்கத்தால் உள்ளமும் சிதைவுறும். உள்ளச் சிதைவு மாந்தப் பேரழிவையே தோற்றுவிக்கும்.

உணர்வியக்கத்தின் தலைமைக்கூறு மொழி. மொழியின் படிநிலையுற்ற ஒழுங்கியக்கம் இலக்கணம். எனவே, இலக்கணச் சிதைவு மொழியைச் சிதைப்பதும், மொழிச் சிதைவு கருத்தைச் சிதைப்பதும், கருத்துச் சிதைவு உணர்வைச் சிதைப்பதும், உணர்வுச் சிதைவு உளத்தைச் சிதைப்பதும், உளச்சிதைவு உலகியலைச் சிதைப்பதும் ஒன்றினின்று ஒன்றெழும் தொடர் விளைவுகளாகும்.

மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால்தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில், பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து, உலகியல் கூறுகளினின்றும் விடுவித்து, அவனை மீமிசை மாந்த நிலைக்கு உயர்த்து கிறது. பாட்டுணர்வு தாழ்ச்சியுறுதலால் அவன் உணர்வுயர்ச்சிக்குச் சறுக்கல் ஏற்படுகின்றது; உயிர்மைக்கு அயர்வு ஏற்படுகின்றது. இதனால் இயற்கைத் துய்ப்பு கெடுகிறது. உயிர்மை குன்றுகிறது; உலகியல் உணர்விருள் அவனைப் பற்றி

அலைக்கழிக்கின்றது. இவ் வியற்கைப் பொது நிலைகளை யொட்டி, ஒவ்வொருவரும் சில இன்றியமையாக் கலை, இலக்கியக் கூறுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் கலை புறமும் இலக்கியம் அகமும் ஆகும். இலக்கியத்தின் கொடுமுடி பாடல்! பிற அவற்றினின்று விரிந்து படரும் கொடிகளையும் கிளைகளையும் போன்றவை.

ஒழுங்கற்ற ஓசையைவிட ஒழுங்கான ஒலி உயிர்க்கவர்ச்சி உடையது. ஒலியொழுங்கோடு உணர்வும் சேருமாயின் உயிர்க் கவர்ச்சியுடன் உளக்கவர்ச்சியையும் அஃது உண்டாக்கி, அறிவுணர்வு உயர்ச்சியுடைய மாந்தனை அது தன்வயப்படுகிறது. இனி, உணர்வு சேர்ந்த ஒலியொழுங்குடன் ஏற்ற இறக்க அலைவொலிகள் அளவொத்து இணைதலும், பின் அவற்றுடன் ஏதாமொரு மொழி சேர்தலும், அவற்றைப் பண் என்றும் பாவென்றும் உயர்நிலைப்படுத்துவிக்கும். இப் பண்ணொடு தாளம் சேர்ந்து **இசை**யென்றும், பாவொடு கருத்துச் சேர்ந்து **பாடல்** என்றும் தமிழில் வழங்கும். இனி, பண்ணும் பாடலும் சேர்ந்து நடக்கும் இசைத்தமிழ் என்னும் ஒரு மொழியியல் மரபையே பண்டைத் தமிழ்மொழி முனைவோர் உலகோர் உணர்ந்துய்ய உண்டாக்கித் தந்துள்ளனர். வேற்றுமொழிகளில் இம் மொழியியல் கூறு தோன்றியிருப்பினும் தமிழ்மொழியில் உள்ளதுபோல், அஃது அத்துணையளவு தனித்தோ, சிறந்தோ இயங்கவில்லை யென்பதை அறிவினார் உணர்வர்.

இனி, பாடல் என்பது **பா தழுவிய கருத்துமொழி** என்று பொதுவில் பொருள் தரினும், அதற்கெனப் பல தனிக்கூறுகள் உண்டு. பாடல் இயற்கையாக வெளிப்படுதல் வேண்டும். மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையழுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடலிலேயே இயற்கைச் சாயல் படிந்திருக்கும். **மொத்தத்தில் அஃது ஒரு வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப்படுத்துதலாக இருத்தல் கூடாது**. அவ்வாறு உள்ள நிலையில் அது சிறவாது; நிலைத்து நிற்காது; அதுவன்றிக் காலத்தில் கரைந்து போகும் தன்மையுடையதாக அஃது இருக்கும்.

ஓர் உணர்வு சான்ற இயற்கைப்பாடல் உணர்வுள்ள உள்ளங்களை மட்டுமேயல்லாது, உணர்வற்ற உள்ளங்களையும் அவையளவில் தொடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அஃதால் உயிர்க்கூறு படிப்படியாக மலர்ச்சி எய்துதல் முடியும். பிற உள்ளங்களை

ஆட்கொள்ளும் நிலையில் அஃது ஒரு மண்வெட்டியைப்போல் பயன்படுதல் வேண்டும். மண்வெட்டி பள்ளம் மேடுகள் நிறைந்த நிலத்திற்கே மிகுதியும் பயன்படுவதாகும். சமமான தரையில் அதன் பயன்பாடு மிகவும் குறைவே. வெறும் சுவைக்காக மட்டுமே வெளிப்படும் பாடல்கள் மாந்த உள்ளுணர்வுகளை வளர்த்து வாழ்விக்காமல் அவற்றை மழுங்கடித்துவிடும்.

பாட்டுணர்வு இயற்கையேயாயினும், அதன் புறக்கூறுகள் உலகியல் சான்றனவே. அப் புறக்கூறுகள் அசை படிந்த சொற்களாலும், சொற்களமைந்த சீர்களாலும், சீர்கள் இணைந்தியங்கும் யாப்பாலும், யாப்புடன் கூடிய அணியாலும், அணிபெற்றியங்கும் கருத்தாலும் விளங்கித் தோன்றுனவாகும். அவையே பாடலுக்குரிய தகுதிகளும் ஆகும். அவை பதினான்கு இன்றியமையாக் கூறுகளைக் கொண்டவை. அவை இவை:

**அ. சொற்கள்**

1. கருத்தாழம் நிரம்பிய தேர்ந்த சொற்கள்.
2. சுற்றி வளைக்காத சொல்லாட்சி.
3. வளங்கொழுவிய பொருத்தமான சொற்கள்.
4. குறைவான இடைச் சொற்கள்.

**ஆ. சீர் அமைப்பு:**

1. ஒலிநயத்தால் இணைகின்ற சீர் அமைப்பு.
2. கருத்தின் உணர்வுக்கேற்ற சீர் நீளம்.
3. வகையுளி அல்லது சொற்பிரிப்பால் பாட்டின் ஓட்டத்தையும் அழகையும் குறைக்காமல், முழுச் சொல்லால் அல்லது சொற்களால் அமைந்த சீர்கள்.

**இ. யாப்பு**

1. பிழையற்ற யாப்பு.
2. கூறப்போகும் கருத்தின் உணர்வை மழுங்கடிக்காத யாப்பு வகை.
3. உணர்வுயர்ச்சிக்கும் கருத்தகலத்திற்கும் ஏற்பத் தெரிந்தெடுக்கப் பெற்ற யாப்பு.

**ஈ. அணிகள்**

1. எளிதே விளங்கிப் பாடற் கருத்துடன் உடனே பொருந்துமாறு இருக்கும் உவமைகளும் உருவகங்களும்.

2. பாட்டின் பெருமையைக் குறைக்கும் பிற ஆரவார அணிகள் பெரிதும் தவிர்க்கப் பெறுதல்.

உ. கருத்து

1. மயக்கம் தராது உடனே புலப்படும் தெளிவு நிறைந்த கருத்து.
2. பொது மனத்திற்குப் புலப்படாத உயர்ந்த கருத்து.

இனி, முன்னைக் காலத்து, இயற்கை உணர்வின் ஒலியொழுங்குக் கொத்த மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறைமாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப்பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை. நன்கு வளர்ச்சியுறாத உறுப்பு நிலைகளும், உணர்வு நிலைகளும், அக் குழந்தைகளைக் கவர்ச்சியற்றனவாகவும் நீடிய காலத் தங்குதலற்றனவாகவும் ஆக்கிவிடுகின்றன.

ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல், ஒழுங்கான கட்டுக் கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது.

பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலி யொழுங்கு.

பாடல் மலரிலிருந்தே உரைநடையென்னும் காய் தோன்றிக் கதையாகக் கனிகிறது.

பாடல் உணர்வு சிதைவுறுமானால் உரைநடையாக அது தத்துகிறது. உரைநடையில் பாடல் உண்டு. பாடலில் உரைநடை இல்லை. பாடல் உரைநடையாவது, மலர் தன் மென்மையையும் மணத்தையும் இழந்து பருமையும் வெறுமையும் உறுவது போன்றதே. அத்தகைய பாடற்போலிகள் தேங்காய் மட்டையின் ஊறலின்று அடித்தெடுக்கும் நார் போன்றவை.

இனி, உண்மையான பாடலை வெளிப்படுத்துபவனே உயர்ந்த பாவலன். **பாவலன் பிறக்கிறான்; பாடல் தோன்றுகிறது.** பாவலன் படைப்பாளன். அவன் உண்டாக்கித் தரும் உணர்வுருவாய கற்பனை மாந்தர்களையே இயற்கை பருவுருவாக உலகுக்குப் படைத்துத் தருகிறது. எனவே உலகின் இயற்கைப் படைப்புக்கே அவன் உணர்வுக் கருவைத் தருபவனாகிறான்.

உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை, நுண்ணோக்கு, இயற்கையீடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல், நடுவுநிலைமை, துணிவு என்பனவாகும். இவை ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கிப் பாவலன் ஆற்றலைப் படிப்படியாக மிகுவிக்கின்றன. இத் தகுதிகளின் பொருத்தத்திற்கேற்பவே ஒவ்வொருவனின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்கள் கருத்தினை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்.

**கனிச்சாறு** என்னும் இப்பாடல் தொகுதி பல நூறு கற்பனைத் தோற்றங்களை உங்கட்குக் காட்டுவதாகும். பல வாழ்வியல் கூறுகள் இதில் சொல்லப் பெறுகின்றன. அறிவுநிலை விளக்கங்கள், உரிமை உணர்வுகள், மாந்தநிலை உயிரெழுச்சிக் கூறுகள், உள்ளுணர்வெழுப்பும் மெய்யறிவு நிலைகள், மொழியியல், இனவியல், நாட்டியல் புரட்சிக்கு வித்தூன்றும் அடிப்படை வரலாறுகள் முதலியன இப் பிழிவில் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்து உணரலாம்.

**கனியைப் பிழிந்திட்ட சாறு - எம்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!**

என்றும்,

**கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!**

என்றும், பாவேந்தர் பாரதிதாசன் தமிழையும் தமிழ்ப் பனுவலின் இனிமையையும் உணர்த்தக் கனிச்சாற்றை உவமை பேசுவார்.

எனவே தமிழும் தமிழுணர்வும் செறிந்து விளங்கும் இப்பாடல் தொகுதிக்குக் **கனிச்சாறு** என்று பெயர் தரப்பெற்றது. மிக அரும்பாடுபட்டு இத் தொகுதித் தொடர்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழினம் தன் நிலைப்பாட்டு மேன்மைக்கு இத் தொகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

சென்னை - 5 அன்பன்

14-4-1979 பெருஞ்சித்திரன்

# முதல் பதிப்பு - பதிப்புரை

உலக வரலாற்றிலேயே தலைசிறந்தது மாந்த வரலாறாகும். அதனுள்ளும், நம் முதுபழங் குமரித் தமிழிய வரலாறோ, மூல முதன்மையும், உயர் மாந்தத் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

அத் தென்குமரித் தலைக்கழக(சங்க)க் காலத்து முத்தமிழ் மீமிசை மாந்த வாழ்வியலின் ஏந்திய பண்பு நலன்கள் யாவும், அடுத்து வந்த இடைக்கழகக் காலந்தொட்டே, (பிற்காலக் கீழை) வேத ஆரியத்தின் நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கின. அதுமுதலே, ஆரிய எதிர்ப்பியக்கங்களும், தொடர்ந்து, பரவல் சிதறலாகத் தமிழகத்தில் தோன்றி வரவே செய்தன. ஆனால், அவை எவற்றுக்கும் ஆரியத்தை அடிதுமித்துச் சாய்த்துத் தமிழ் மீட்பினை நிலைநாட்டித் தரும் மொய்ம்புரம் வாய்க்கவில்லை.

இறுதியாக, சென்ற நூற்றாண்டில், மேலைநாட்டு நல்லறிஞரால் விழிப்புறுத்தப் பெற்றும், **மறைமலையடிகளாரின்** தனித்தமிழ்த் தொண்டினாலும், **பெரியாரின்** இனமானத் தொண்டினாலும் இந் நூற்றாண்டில் புத்துரமூட்டப் பெற்றும், பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றலாயின. அவற்றின் ஒட்டுமொத்த முயற்சிகளின் மெய்வருத்தக் கூலியாக, இன்று **மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் மொழிமுதற் புலத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் உரன்வல அறிவாண்மைப் படை கொண்டு முனைந்துழுது, 'தென்மொழி' என்னும் இதழ்வாயிலாக, தேடரிய தெளிவியக்கம் ஒன்று புரட்சிக்கால் ஊன்றி, ஆள்வினையும் ஏற்றுள்ளது.

அத் 'தென்மொழி இயக்க'த்தின், வினை வேளாண்மைக்கென மொழி - இன - நாடு தழுவிய பல்வேறு துறைகளிலும், **பாவலரேறு** அவர்கள், முப்பது ஆண்டுகட்கும் மேலாக, பன்னூற்றுக் கணக்கில் பாடிக் குவித்துள்ள அரும்பாடற் கனிகளையே இங்ஙனம் தொகுத்து, **'கனிச்சாறு'** ஆகப் படைத்துள்ளோம். அவ்வமிழ்தச் சாற்றினை ஆரப் பருகும் எவரும், தமிழியக் குடிசெயலுக்கு வேண்டிய 'வீறெய்தி மாண்ட' வினைத் திட்பம் பெற்று, தொண்டாற்ற முன்வர வேண்டுதலே எமது பெருநோக்கம் ஆகும்.

இப் பாடற் களஞ்சிய வெளியீட்டுத் திட்டம், கோவை மாவட்டத் தமிழன்பர்களின் அருமுயற்சியால் இயல்வதாகி, தி.பி. 2006இல் அறிவிக்கப் பெற்று, தி.பி. 2008 முதல் செயலாக்கங்

கொண்டு, இக்கால் முழுமையாக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை வினைப் படுத்திய **தென்மொழி ந. முத்துக்குமரனார்**, அவர் துணைவர் **தென்மொழி மறை. நித்தலின்பனார்**, ஊக்கப்படுத்திய **திரு.க. ஆகுன்றன்**, கொடை நல்கி வலந்தந்த புரவலன்மார் ஆகிய அனைவரும் தமிழின மீட்பு வரலாற்றில் என்றும் நீங்கா இடம்பெறும் சிறப்புடையர். வெல்க எம் தமிழம்! மலர்க நல்லுலகம்!

பணிவுடன்,

*14.4.1979* **'கனிச்சாறு வெளியீட்டுக் குழு'**

# வெளியீட்டுரை

கனிச்சாறு(பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்) தொகுதி முதற்பதிப்பு 1979இல் வெளிவந்தபின், 1995 இல் பாவலரேறு மறைவுவரை வெளிவந்த அனைத்துப் பாடல்களும் தொகுக்கப் பெற்று முழுமைபெற்ற முதற்பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

முதற்பதிப்பின் முத்தொகுதிகளும் தென்மொழியில் சுவடி : 14; ஓலை : 12 வரையிலும் மற்றுத் தமிழ்ச்சிட்டில் குரல் : 9; இசை: 12 வரையிலும் வெளிவந்த பாடல்கள் அளவிலேயே அமைந்தன. அதன்பின் தொடர்ந்து வந்த இதழ்களின் பாடல்கள் அனைத்தும் துறைவாரியாகப் பிரிக்கப்பெற்று எண்தொகுதிகளாக இப் பதிப்பு நிறைவு செய்யப்பெற்றுள்ளது. மேலும், ஐயா அவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதியனவும் இதுகாறும் அச்சுக்கு வராதனவுமான பாடல்கள் சில, பழைய குறிப்புச் சுவடிகளினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன; அன்றியும் ஐயா அவர்கள் அன்பர்கள் பலருக்குப் பல்வேறு நிகழ்வுகளையொட்டி எழுதியனுப்பிய பாடல்கள் பல, அவ் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டும், சில ஐயா அவர்களின் சுவடிகளிலிருந்து எடுத்தும் இணைக்கப்பட்டுள்ளன. (பழைய பாடல்களில் ஒரோவழி இடம் பெற்றிருந்த அயன்மொழிச்சொற்கள் வரிவடிவில் வேறுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.)

மொத்தத்தில், ஐயா அவர்களின் தனி இலக்கியங்களான கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, நூறாசிரியம், உலகியல் நூறு, கழுதை அழுத கதை, அறுபருவத் திருக்கூத்து ஆகியன அல்லாத பிற பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுப் '**பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் _ அடங்கல்**' என்னுமாறு இப்பதிப்பு முழுமையான பதிப்பாக வெளிவருகிறது. அவ்வகையில் இதுவே முதற் பதிப்பு எனலாம்.

பாடல்கள் அனைத்திற்கும் முன்னைப் பதிப்பின் போக்கிலேயே தொடர்ந்து பாடல்கள் விளக்கக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இயற்றப்பெற்ற அல்லது வெளிவந்த காலத்தையொட்டி ஆண்டு, மாத முறைப்படி பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

பழைய பாடல்கள் சில எழுதப்பெற்ற காலம் தெளிவாகத் தெரியாமையால், அப்பாடற்குரிய ஆண்டையொட்டி **வினாக்குறி யிடப்பட்டுள்ளது.**

இக் கனிச்சாறு தொகுதிகளில், தமிழ்,இந்தி யெதிர்ப்புப் பற்றிய பாடல்கள் முதல் தொகுதியாகவும், இன எழுச்சிப் பாடல்கள் இரண்டாந் தொகுதியாகவும் அமைந்துள்ளன; நாட்டுரிமை பற்றிய மூன்றாந் தொகுதியில் நாட்டுரிமை, தமிழீழம் என்னும் பிரிவுகளிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன; இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம் ஆகியன பற்றிய பாடல்கள் நான்காந் தொகுதியாகவும், குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னுந் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் ஐந்தாந் தொகுதியாகவும் கொள்ளப்பெற்றுள்ளன; ஆறாந் தொகுதியாவது காதல், இயற்கை, இறைமை என்னும் பிரிவுகளைக் கொண்ட பாடல்கள்; தன்னிலை விளக்கம், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள் முதலியனவாகிய பாடல்கள் ஏழாந் தொகுதியில் வைக்கப் பெற்றுள்ளன. பாட்டரங்கப் பாடல்கள் எட்டாந் தொகுதி.

2009இல் தமிழக அரசு, பாவலரேறு அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பெருமை கொண்டது. அதனால் அவர்தம் படைப்புகளைப் பலரும் வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் வெளிவராத பாடல்கள் பலவற்றையும் நாம் வெளியிட்டால் மட்டுமே மற்றவர்கள் வெளியிட வாய்ப்பு ஏற்படும் என்பதால் நாம் முழுமையாக வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது.

எட்டுத் தொகுதிகளையும் ஒரே நேரத்தில் வெளியிடுவதற்குப் பெரும் பொருள் தேவைப்பட்டதால், முன்வெளியீட்டுத் திட்டம் 'தென்மொழி' யில் அறிவிக்கப் பெற்றது.

தென்மொழி அன்பர்கள் பலரும் முனைந்து தொகை அனுப்பி வைத்திருந்தனராயினும், அத் தொகை, தேவையான எல்லைக்கு மிகவும் குறைவான அளவையே நிறைவு செய்தது. நாமும் அந்தக் காலக்கட்டத்திற்குள் வெளியிட இயலாமல் சற்று காத்திருக்கநேர்ந்தது.

அவ்வாறு காத்திருக்கும் காலத்திற்குள்ளும் எதிர்மம், அச்சுக்கூலி, தாள் இவற்றின் விலையேற்றம் அளவு கடந்து உயர்வும் பெற்றன. அவற்றையும் நெருக்கியே வெளியிட வேண்டியதாயிற்று.

இனி, தமிழ்மக்கள் தம் மொழிநலத்தையும் வாழ்வியற் சிறப்புகள் சீரழிவுகள் ஆகியவற்றையும் உணர்ந்து, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து, எழுச்சிபெற்று, இனநலம் பேணி, நாட்டுரிமை பெற்று வாழ்வாங்கு வாழ வகைசெய்யும் கருத்துத் தெளிவும் உணர்வுச் செழுமையும் வாய்ந்த பாடல் திரட்டான இக் கனிச்சாறு தொகுதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பயன்கொண்டு சிறக்கும் என்று நம்புகின்றோம்.

– **தென்மொழி பதிப்பகத்தினர்**

# கனிச்சாறு ஐந்தாம் தொகுதி

(குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை)

## பொருளடக்கம்


| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| **குஞ்சுகளுக்கு** | | |
| 1. | நிறங்கள் ! | 3 |
| 2. | எப்படி? | 4 |
| 3. | வீடு! | 5 |
| 4. | கதிரவன்! | 6 |
| 5. | குழந்தை! | 7 |
| 6. | பாட்டி! | 7 |
| 7. | திருக்குறள் அறிவு! | 8 |
| 8. | அம்மா! | 9 |
| 9. | மலை! | 10 |
| 10. | காற்று! | 11 |
| 11. | சேவல்! | 12 |
| 12. | வானக் கப்பல்! | 13 |
| 13. | வீட்டைக் கட்டினான்! | 14 |
| 14. | பாதையில் நடத்தல்! | 15 |
| 15. | காக்கைப் பள்ளிக்கூடம்! | 16 |
| 16. | பறவை, விலங்குகளைப் பார்! | 17 |
| 17. | மயில்! | 18 |
| 18. | உதவாதவை! | 19 |
| 19. | கடிகாரம்! | 20 |
| 20. | பள்ளிக்குப் போ! | 21 |
| 21. | திருக்குறள்! | 22 |
| 22. | வேண்டும்! | 22 |
| 23. | அன்னை! | 23 |
| 24. | உள்ளத்தூய்மை! | 24 |
| 25. | அறிவும் பயனும்! | 25 |
| 26. | பூனை! | 26 |
| 27. | மின்சாரம்! | 26 |
| 28. | மழையே ஓடிவா! | 27 |
| 29. | குடையும் செருப்பும்! | 28 |
| 30. | முயற்சி! | 29 |
| 31. | மாட்டுவண்டி! | 30 |
| 32. | விளையாட்டு! | 32 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 33. | புகைவண்டி விளையாட்டு! | 32 |
| 34. | தூங்காயோ பாப்பா! | 33 |
| 35. | அப்பா! | 34 |
| 36. | ஆசை! | 35 |
| 37. | பெட்டைக் கோழி! | 35 |
| 38. | பாப்பா, படி! | 36 |
| 39. | யானை! | 36 |
| 40. | விளையாட்டுப் பயிற்சி! | 37 |
| 41. | பட்டினம்! | 38 |
| 42. | குருவி! | 39 |
| 43. | கடல்! | 39 |
| 44. | நல்ல பழக்கங்கள்! | 40 |
| 45. | இழுவை வண்டி! | 41 |
| 46. | ஒலிகள்! | 42 |
| 47. | அணிபொருள்! | 42 |
| 48. | எலிகள்! | 43 |
| 49. | நிலா! | 44 |
| 50. | ஆவே! ஆவே! | 45 |
| 51. | அம்மா! பிடித்துக்கொள்! | 46 |
| 52. | குயிலே கூவாயோ! | 47 |
| 53. | பந்தாடு! | 48 |
| 54. | உடல்நலமே உள்ள நலம்! | 49 |
| 55. | அழகு காட்டு, பாப்பா! | 49 |
| 56. | அம்மும்மா கண்ணாடி அம்முப்பா பொத்தகம்! | 50 |
| 57. | கண்ணாம்பூச்சி பாட்டு! | 51 |
| 58. | கண்கட்டு ஆட்டம்! | 52 |
| 59. | நாய்க்குட்டி! | 53 |
| 60. | சிரிப்பாய் இருக்குதடி! | 54 |
| 61 | அவள் இசை அமுது! | 55 |
| 62. | ஊஞ்சல் ஆடு! | 55 |
| 63. | அண்ணன் பட்டம் விடுகின்றான்! | 56 |
| 64. | மிதமாய் உண்பது மிகுதியும் இன்பமே! | 57 |
| | **பறவைகளுக்கு** | |
| 65. | மலர்த்தோட்டம்! | 61 |
| 66. | பிச்சைக் காரன்! | 62 |
| 67. | காக்கும்! | 62 |
| 68. | நல்ல செயலும் தீய செயலும்! | 63 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 69. | உடல் தூய்மை! | 63 |
| 70. | ஆலமரம்! | 64 |
| 71. | செய்யலாமா? | 64 |
| 72. | இல்லை! | 65 |
| 73. | உண்டு! | 65 |
| 74. | அழிவு! | 66 |
| 75. | காரணம்! | 66 |
| 76. | இரக்கம்! | 67 |
| 77. | குயிலும் பாம்பும்! | 68 |
| 78. | காந்தித் தாத்தா! | 69 |
| 79. | சிற்றெறும்பு! | 70 |
| 80. | இருசொல் அழகு! | 71 |
| 81. | நல்லதும் தீயதும்! | 72 |
| 82. | எழுதம்பி! | 73 |
| 83. | சினம்! | 75 |
| 84. | தொழில்! | 76 |
| 85. | பழகிக்கொள்! | 77 |
| 86. | மலர்! | 78 |
| 87. | சிட்டு! | 79 |
| 88. | புகைவண்டி! | 80 |
| 89. | உடலுறுப்புகளின் சண்டை! | 81 |
| 90. | துன்பத்திற்குத் துவளாதே! | 82 |
| 91. | தமிழ்க் கும்மி! | 83 |
| 92. | பள்ளிக்குத் தாழ்ப்பாள் உண்டு! கல்விக்குத் தாழ்ப்பாள் இல்லை! | 86 |
| 93. | தமிழும் ஆங்கிலமும் தவறாது கற்பாய்! | 88 |
| 94. | பள்ளித் தொடக்கப் பாட்டு! | 90 |
| 95. | ஊனையும் உயிரையும் வளர்ப்பது கல்வியே! | 91 |
| 96. | எச்சரிக்கையாயிரு தம்பி! | 93 |
| 97. | அறிவுப்புரட்சி! | 95 |
| 98. | முன்னேறு! | 97 |
| 99. | ஒய்வும் பயனும்! | 98 |
| 100. | மழை! | 99 |
| 101. | நூலகம்! | 100 |
| 102. | நிலவில் மாந்தர்! | 101 |
| 103. | மூட ஆமை! | 103 |
| 104. | கலைஞர்கள்! | 105 |
| 105. | ஆடுக ஊஞ்சல்! | 106 |
| 106. | ஆடுக தமிழ் ஊஞ்சல் | 107 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 107. | பொன்னன் கதை! | 108 |
| 108. | படிப்படியாக....! | 110 |
| 109. | உழைக்காமல் பயன் இல்லை! | 111 |
| 110. | நன்றிக்கு நாய்! | 112 |
| 111. | நாய்! | 113 |
| 112. | நெறிமுறைகள்! | 114 |
| 113. | உண்மையும் பொய்யும் உருவம் புரியாமல் உலவி வருகுது தம்பி! | 115 |
| 114. | விளையாட்டும் வேடிக்கையும்! | 116 |
| 115. | கையைப் பிடித்துக் கொள் அண்ணா! | 117 |
| 116. | சீராடுவது ஏன்? | 117 |
| 117. | எழுதுக குழந்தாய்! | 118 |
| 118. | மருளாதே தம்பி மருளாதே! | 119 |
| 119. | யார் என்ன செய்தார்கள்? | 120 |
| 120. | நல்லவர் இடத்தில் நீயும் ஓர் இடம்பெறு! | 121 |
| 121. | துள்ளுவாய்! ஆடுவாய்! தூய்தமிழ் பாடுவாய்! | 122 |
| 122. | நம்பிக்கைகள் பல உண்டு! | 123 |
| 123. | பள்ளிக்குச் செல்லும் பயனுள்ள தம்பி, கேள்! | 124 |
| 124. | மென்னீர்க் குமிழிகள்! | 125 |
| 125. | மூடர்கள் வாழ்கின்ற காலமிது! | 126 |
| 126. | எவர்க்கும் பயனாய் இரு! | 126 |
| 127. | புரட்டர் உலகம் இதுவடா! | 127 |
| 128. | பிறப்பினை வரலாறாக்கிடுவாய்! | 127 |
| 129. | பழியன்றோ மிஞ்சும்! | 128 |
| 130. | ஒப்புவித்திடுவாய், உன்னை! | 129 |
| 131. | உலகக் கடமைகள் உடனே தொடங்குக! | 130 |
| 132. | தாத்தா பாருங்கள் தமிழ்ச்சிட்டு! | 131 |
| 133. | தமிழ்நாட்டில் பொதுமை நலம் தழைத்திடச் செய்வோமே! | 132 |
| 134. | பொருள்களை வாங்குவது...! | 133 |
| 135. | அறிவுக்கூறுகள் பல நூறு ! | 134 |
| 136. | அன்றாடம் உடற்பயிற்சி செய்குவீர்! | 135 |
| 137. | அம்மா என்னை அழைத்துச் செல்! | 136 |
| 138. | நீந்திப் பழகு! | 137 |
| 139. | எங்கள் வீட்டுச் சுட்டிப் பையன்! | 138 |
| 140. | பத்துக் கட்டளைகள்! | 140 |
| 141. | மண்டையைக் குழப்பும் மதமும் சாதியும் | 141 |
| 142. | அண்டை அயலை அறிதல்! | 142 |
| 143. | பெறுவதுரிமை! பெறுவது உடைமை! | 143 |
| 144. | தமிழ்த்தாய் பெருமை! | 144 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|

145. மாணவர் எழுச்சிகள், புரட்சிகள் மாந்தரின் நலம்பெற எழுகவே! 145

மணிமொழிமாலை

146. ஒழுங்கிலான்! 149
147. சில பண்பிலக்கணக் கூறுகள்! 149
148. நற்பண்புகள்! 150
149. கனிந்து உதவுங்கள்! 151
150 பெரும்பயன் பெறு! 151
151. உயர்வே கருதுக! 151
152. செம்மை வாழ்வு! 152
153. வாழ்க்கை! 152
154. இழிந்தோரும் உயர்ந்தோரும்! 153
155. நட்பும் பகையும்! 153
156. கல்விக்கு அணிகலன்! 154
157. அறிவும் அறியாமையும்! 154
158. அயர்வு கொள்ளாதே! 154
159. நீயும் பிறரும்! 155
160 உருவைப் பார்த்து வரை! 155
161. நன்கு எண்ணு! தெளிவாய்ச் சொல்! செப்பமாகச் செய்! 156
162. சொல்லினும் செயலே மேல்! 157
163. உள்ளமும் உரையும் செயலும்! 158
164. நாள் ஒழுக்கம்! 159
165. உழைப்புக்கு விளைவுண்டு! 160
166. உண்மை உரம்பெறும், வெண்மை அழிவுறும்! 160
167. மூன்று நல்லுணர்வுகள்! 161
168. அனைத்திலும் உயர்ந்தது! 162
169 உணர்வு, சொல், செயல், பயன்! 162
170. காலத்தால் நிலைப்பதே எல்லை! 163
171 எதிலும் சிறப்பு வேண்டும்! 164
172. பூப்பதெல்லாம் காய்ப்பதில்லை! 165
173. சிறக்கும் வாழ்வே! 166
174. தீர்வு செய்! முனைந்து செல்! 167

# கனிச்சாறு ஐந்தாம் தொகுதி

(குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழிமாலை)

## பாடல் விளக்கக் குறிப்புகள்

### –குஞ்சுகளுக்கு–

1. இயற்கையின் வண்ணங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லும் இசைப்பாடல் இது.
2. அறிவியல் கண்டுபிடிப்பின் வியப்பை எளிமையாய்ச் சொல்லி அறிவார்வத்தைத் தூண்டும் இசைப்பாடல்.
3. நோய் வராமைக்குத் தூய்மையும், வீட்டமைப்பும் கரணியங்கள் என எளிமையாய்க் கூறுகிறது இப்பாடல்.
4. கதிரவனின் சிறப்பைக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லும் இசைப்பாடல் இது.
5. குழந்தையைப் பாடச் சொல்லி ஆடச் சொல்லி உணவையும், தமிழையும் ஊட்டுகிறது இப்பாடல்.
6. பாட்டியின் செயல்களைக் குழந்தைக்குச் சொல்வதான இசைப்பாடல்.
7. திருக்குறள் கருத்துகளுள் ஏழினைக் குழந்தைகட்கு இசையால் ஊட்டுகிற பாடல்.
8. அம்மாவின் அன்புச் செயல்களை 'அ'கர வரிசையில் குழந்தையே சொல்வதுபோன்ற இசைப்பாடல்.
9. மலையின் பிறப்பும் சிறப்பும் விரிந்திருக்கிறது இப்பாடலில்.
10. காற்றின் மென்மை, வன்மை, தன்மைகளை விளக்கும் இசைப்பாட்டு.
11. சேவலின் இயல்புப்போக்குகளை மாந்தப் பண்புகளோடு இணைத்துப் பாடும் இசைப்பாட்டு.
12. வானூர்தி மக்களுக்குப் பயனாவதை மட்டும் சொல்லாமல் போருக்கும் பயன்பட்டுத் தொல்லை தருவதையும் குழந்தைகளுக்கு அழகாய்ச் சொல்லும் பாடல்.
13. வீட்டைக் கட்டுகிற செயலை விளக்கி அதன் ஒட்டத்திலேயே பாட்டும் அழகுறு நடையில் அமைந்திருக்கிறது.
14. நடப்பதில் உள்ள முறைமைகளைக் குழந்தைக்குச் சொல்லும் அழகு இசைப் பாடல்.
15. காக்கையின் இயல்பைச் சொல்லிக் குழந்தைகளுக்கு அறிவூட்டுகிற இசைப்பாடல்.
16. பறவைகள், விலங்குகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டுவனவும், புறந்தள்ள வேண்டுவனவும் எவை எவையென அழகுற விளக்கும் அறிவுப் பாடல்.
17. மயிலின் உடல் அழகையும், ஆடல் அழகையும், நடை அழகையும் குழந்தைகட்கு இசைப்பாட்டில் அழகுற காட்டுகின்றார் பாவலரேறு.

18. ஒன்றின் தேவைக்கிருப்பது இன்னொன்றுக்கு எப்படி உதவாமல் போகிறது என்பதைக் குழந்தைகளுக்கு விளக்கும் அழகுப் பாடல்.

19. கடிகாரம் பற்றிய குழந்தை இசைப்பாடல்.

20. பள்ளிக்குப் போகும் குழந்தை பயில வேண்டியதைச் சொல்லும் மழலைப்பாடல்.

21.. உண்மை பேசும் திருக்குறளைப் பற்றிக் குழந்தைகளுக்கு கூறும் இசைப்பாட்டு.

22. வேண்டும் பொருள் எவையெவை எனக் குழந்தையிடம் சொல்லி அதன் சிந்தனையைத் தூண்டும் பாடல்.

23. அன்னையின் சிறப்பைச் சொல்லி அவர் யார்? என ஆசிரியர் கேட்கவும், அச்சிறப்பு கொண்டவர் 'அன்னை' எனக் குழந்தைகள் சொல்வது போலவுமான அழகார்ந்த இசைப்பாடல்.

24. உடலின் புறத்தூய்மைக்கான நம் முயற்சி உள்ளத்தூய்மைக்காகவும் இருக்க வேண்டும் என எளிமையாய்ச் சொல்லும் பாடல்.

25. ஒருவர்க்குப் பயன்படாத ஒருபொருள் – வேறொருவர்க்கு எந்த அளவில் பயன்படுகின்றது என்று அறிவூட்டும் குழந்தைப்பாடல்.

26. பூனை என்னவெல்லாம் செய்கிறது என்பது பற்றிய – இசைப்பாட்டு.

27. மின்சாரத்தின் பயன்களை அழகுறச்சொல்லும் இசைப்பாடல்.

28. மழையின் சிறப்பை உணர்த்தி அதை ஓடிவரச் சொல்லும் குழந்தைப் பாடல்.

29. குடையும் செருப்பும் தம்மில் எவர் உயர்ந்தவர் எனத் தத்தம் பெருமைகளையும் மற்றதன் சிறுமைகளையும் சொல்லிய பிறகு ஒற்றுமைகாணும் சுவையான கற்பனைப்பாடல்.

30. சிலந்தி, தேனீ, எறும்பு, குருவி இவற்றின் முயற்சி வினைகளைச் சொல்லி முயற்சி என்றும் வேண்டும் எனக் குழந்தைகளுக்கு எடுத்துக்கூறும் பாடல்.

31. சிற்றூர்ப்புறத்திலுள்ள மாட்டு வண்டியின் பயன்பாட்டையும், அதன் வடிவமைப்பையும் அழகுற விளக்கும் பாடல்.

32. ஒவ்வொரு விளையாட்டையும், அதன் பயனையும் விளக்குகிற குழந்தைப்பாடல்.

33. தொடர்வண்டிபோல் தொடர்ந்து சென்று விளையாடும் குழந்தைகளின் தொடர்வண்டி விளையாட்டின் அழகை விளக்கும் பாடல்.

34. அம்மா வராமையால் அழும் குழந்தைக்கு அதன் அழகை வண்ணனை செய்து பாடும் தாலாட்டுப் பாட்டு.

35. அப்பாவின் செயல்களைப் பற்றிக் குழந்தை சொல்வது போன்ற இசைப்பாடல்.

36. குடும்பத்துள் யார் யாருக்கு எதன் மீது எவர் மீது ஆசை எனச்சொல்லும் இசைப்பாட்டு.

37. பெட்டைக் கோழியையும் அதன் குஞ்சுகளின் அழகையும் காட்டும் கவினுறு காட்சியுள்ள பாடல்.

38. ஆசையைப் படிப்பின்மீது வைத்தால் அக் கல்விஒளி இருளைப் போக்கும் எனப் பாப்பாவைப் படிக்கச் சொல்லும் இசைப்பாட்டு.

39. யானையைப் பார்க்கத் தம்பியை அழைத்துக் காட்டுகிறது இவ் இசைப்பாடல்.

40. எண்ணிக்கை பயிற்சி செய்விப்பதைப் போலவே பாட்டின் இசை அமைய விளையாட்டையும் சொல்லித் தருகிறது பாடல்.

41. வானைமுட்டும் கட்டடங்கள் இருந்தாலும் பட்டினத்தின் கெடுதல்களையும், தொல்லைகளையும் விளக்கும் அழகான பாடல்.

42. குருவியைக் குழந்தை கொஞ்சி அழைப்பதான மழலைப் பாடல்.

43. கடலின் அழகைத் தம்பிக்குக் காட்டுகிறது இவ் இசைப்பாடல்.

44. தூய்மையிலும், உணவு உண்பதிலும் உள்ள ஒழுங்குணர்ச்சிகளைப் பாப்பாவிற்குச் சொல்கிறது இப்பாடல்.

45. எந்திரத்தால் வண்டிகள் ஒடுகிறபோது, மாந்தரே வண்டிகளை இழுத்துச் செல்லல் சரியாகுமோ? – 'தக்கவற்றையே செய்வாய், தகாதவற்றைத் தவிர்ப்பாய்' எனத் தம்பிக்கு எடுத்துரைக்கிறது இப்பாடல்.

46. பறவைகள் எழுப்பும் ஒலிகளில் உள்ள எழுத்தமைவுகளைக் குழந்தைகளுக்குக் கூறுகிற மழலைப்பாடல்.

47. அணிமணி வகைகள் எப்படி எங்கு கிடைக்கின்றன என்பதைக் குழந்தைகட்குச் சொல்லும் எளிய இசைப் பாடல்.

48. வீட்டில் எலிகள் செய்யும் தொல்லைகள் அனைத்தையும் அழுகுறச் சொல்லும் பாடல்.

49. வானக் கடலில் தனியாய் நிலா போவதாய் எண்ணி அதனை அழைத்து, குழந்தை பாடுவதான இசைப்பாடல்.

50. ஆவை( பசு மாட்டினை)ப் பேணி வளர்க்கும், வளர்ப்பு முறையை முழுமையாய்ச் சொல்லும் அழகுப்பாடல்.

51. அம்மாவின் சுட்டுவிரலைப் பிடித்து நடக்கும் மழலை பாடுவதான அழகுப்பாடல்.

52. கருங்குயில், சின்னக்குயில், சோலைக்குயில், தனிமைக்குயில், பாடற்குயில் என்றெல்லாம் குயிலை விளித்து இனிமைத் தன்மை வாய்ந்த தமிழ் சிறக்கக் கூவச் சொல்லுவதான குழந்தைப்பாடல்.

53. குழந்தைகளைப் பந்தாட்டம் ஆடச் சொல்லும் இசைப்பாட்டு.

54. அண்ணன் உடற்பயிற்சி செய்து உடலைப் பேணுவதையும் அதன்வழி உள்ளத்தைப் பேணுவதையும் தம்பிக்குக் கூறுவதான குழந்தைப்பாடல்.

55. பாப்பாவை அப்பாவிற்கு அழகு காட்டச் சொல்லுகிறது இப்பாடல். 'தமிழ்ச்சிட்டில்' குழந்தைகளின் அட்டைப்பட வரிசையில் வெளிவந்த படத்திற்கு என எழுதப் பெற்றது. தென்மொழி மறை. நித்தலின்பனாரின் குழந்தை எயினி இளம்பிறையின் படத்திற்கு எழுதப்பெற்றது.

56. அம்மும்மாவின் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு, அம்முப்பா பொத்தகத்தைப் படிக்கும் குழந்தை (இறை – பொற்கொடியின் மகள்) இசைமொழியின் தோற்றப் படத்திற்கான பாடல் இது. தம்பி செம்மலையும் தங்கை கயலையும் அழைத்துத் தன்னைக் கவனிக்கச் சொல்வதாகக் கூறும் இசைப்பாட்டு.

57. அப்பாவின் துண்டை எடுத்துப் புடவை போல் கட்டிக் கொண்ட குழந்தை அங்கயற்கண்ணி (இறை – பொற்கொடியின் மகள்) யின் படத்திற்கான கண்ணாம்பூச்சி பாட்டு.

58. குழந்தைகளின் கண்கட்டு ஆட்டத்தின் அட்டைப்படத்திற்கானபாடல். (ஆண், பெண் குழந்தைகள் பாடும் கண்கட்டு விளையாட்டின் அழகுப்பாடல்.)

59. பாப்பாவுடன் நாய்க்குட்டி இருக்கும் ஓவிய அட்டைப்படத்திற்கான குழந்தைப்பாடல்.

60. தென்மொழி நாரா. மகிழ்நன் குழந்தைகளின் ஒளிப்படத்திற்குரிய அழகு இசைப்பாடல்.

61. 'கவின்'மருத்துவமனை மருத்துவர் இளங்கோ அவர்களின் 'இசையமுது'–எனும் பெண் குழந்தையின் ஒளிப்படத்திற்கான பாடல்இது.

62. பெண்குழந்தை ஊஞ்சலாடும் 'தமிழ்ச்சிட்டு' அட்டைப்படத்திற்கான ஊஞ்சல்பாட்டு.

63. அண்ணன் பட்டம் விடும் அழகைத் தம்பி வண்ணித்துப் பாடும் பாடல்.

64. அதிகமாய் உண்பது அனைவர்க்கும் துன்பம்; மிதமாய் உண்பதே மிகுதியும் இன்பம் – என்பதைக் குழந்தைகளுக்கு விளக்கிச் சொல்லும் எளிமைப்பாடல்.

–பறவைகளுக்கு–

65. மலர்த் தோட்ட அழகைப் பள்ளிக் குழந்தைகள் பாடுவது போன்றதான இசைப்பாடல்.

66. இரவல் கேட்போனைப் 'போ! போ!' என்று ஒட்டாமல் அன்பைக்காட்டவும் இருப்பதில் கொடுக்கவும் சிறுவர்களுக்குச் சொல்லுகிறார் பாவலரேறு.

67. எவை, எவை, எதனால் காக்கப்பெறுகின்றன? என்று இசைப்பாடலாய் விளக்குகிறார் பாவலரேறு.

68. கத்தியினால் பல நல்ல செயல்கள் செய்கிற வேளையில், தீச் செயல்களைச் செய்யலாமோ – என்று சிறுவர்களிடம் கேள்வி எழுப்பி உணர்த்துகிறது பாடல்.

69. ஒவ்வொரு உறுப்பையும் தூய்மை செய்வதால் ஏற்படும் நன்மைகளைச் சொல்லி ஒருவன் தன்னைத் தூய்மை செய்துகொள்வதால் ஒழுங்கை எங்கும் காட்டலாம் எனச் சிறுவர்க்குக் கூறுகிறது பாடல்.

70. ஆலமரத்தின் சிறப்பையும், வியப்பையும் உணர்த்துகிறது பாடல். (இப் பாடலின் எழுத்துகள் சில அழிந்தமையால் அவற்றை நிறைவு செய்ய இயலவில்லை)

71. ஈட்டம் கொடுக்கிற செடி, கொடி வகைகளை அழித்திடாததுபோல் ஆட்டையும், மாட்டையும் வெட்டி உணவாக உண்ணலாமோ – எனக் கேள்வியாய் எழுப்புகிறது இப்பாடல்.

72. இயற்கையாய் நடக்கின்ற நிகழ்வுகள் அனைத்தும் எதிராய் மாறுவதில்லை. அதுபோல் பொய் நெஞ்சினர் பிழைப்பதில்லை; மெய்யாய்யுள்ள நல்லோர் மாள்வதில்லை என்கிறார் பாவலரேறு.

73. வேல் பிடிக்கும் கையில் வீரம் உண்டு போரிட என வரிசைப்படுத்துகிற பாடலில் அன்பிருக்கும் ஒருவர்க்கு அறிவு உண்டு தெரியவே என்கிறார் பாவலரேறு.

74. விலங்குகள் ஒவ்வொன்றும் எப்படி மற்றதை அழிக்கிறது என்கிற சுழற்சியைச் சிறுவர்க்கு எளிமையாய் உணர்த்தும் பாடல்.

75. தவளை, வெளவால், குதிரை, நத்தை, வாழை, கட்டிடம் இவற்றின் பெயர்க் காரணங்கள் இவற்றின் செயல்பாடுகளிலிருந்தே வருகிறது – என்று எளிமையாய்ச் சிறுவர்க்குச் சொல்லுகிறது பாடல்.

76. விலங்குகளில் நோய்ப்பட்ட ஒன்றினை மற்றவைக் கடித்துக் குதறிவிடுவதுபோல் மாந்தன் இருப்பதில்லை. அப்படிச் செய்யாமல் இரக்கமாய் இருத்தல் வேண்டும் என்கிறது இப்பாடல்.

77. கூடு கட்டத் தெரியாத குயில் போன்றும், புற்று கட்டத் தெரியாத பாம்பு போன்றும் நாம் இருந்திடல் கூடாது எனச் சிறுவர்க்கு உணர்த்துகிறார் பாவலரேறு.

78. காந்தியிடம் கொள்கையினால் நிறைய முரண்களும் எதிர்நிலைகளும் இருந்தாலும், அவரின் எளிமையையும், பழகும் தன்மையையும் சிறுவர்கள் கடைப்பிடியாய்க் கொள்ள வேண்டி பாடல் கூறுகிறது.

79 சிற்றெறும்பிடம் அதன் செயல்ஒழுங்கை வியந்து பையன் ஒருவன் கேட்பது போலவும் அதற்குச் சிற்றெறும்பு விடை சொல்வது போலவும் அமைந்த சிறப்புப்பாடல். மாந்தரிடையே உள்ள பகைமைபோல் அவற்றிடையே இல்லை என்கிற கருத்தைச் சிறுவர்க்கு உணர்த்துகிறது பாடல்.

80. விடுகதை போன்று ஒற்றைச் சொல் விடைக்கு இரட்டைக் கேள்வியாகச் சிறுவர்களிடம் கேட்கப் பெறுகிறது இப்பாடலில்.

81.. கனி இருக்கக் காயைத் தின்பதுபோல், சரியானவற்றைத் தவிர்த்து, தவறுகளைச் செய்யலாகாது எனப் பல சான்றுகளோடு கூறும் எளிமை இசைப் பாடல்.

82. தூங்கிக் கொண்டிருக்கும் தம்பியைத் தட்டி எழுப்பி – அவன் என்ன செய்யவேண்டும் என உணர்த்துகிறார் பாவலரேறு. இப்பாடல் தமிழ்ச்சிட்டு முதல் இதழின் (ஆகத்து 1966) முதல் பாடல் எனும் சிறப்புடையது மட்டுமல்லாமல், 1965– திசம்பர்த் திங்கள் 25ஆம் நாள் கீழ்வெண்மணியில் நடந்த சாதிவெறிக் கொடுமை நிகழ்ச்சியினைச் சுட்டிக் காட்டியுள்ளார் பாவலரேறு. மேலும் இம்முதல் பாடலிலே பயிலப்பெற்ற 'பள்ளிப் பறவை' எனும் சொற்றொடராலேயே 'பள்ளிப் பறவைகள்' – எனும் குழந்தைப்பாடல் நூலும் வெளியிடப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

83. சினத்தைப் பழகாதே தம்பி! – என்று சினத்தால் நேர்ந்திடும் தீமைகளை விளக்குகிறது இப்பாடல்.

84. தொழிலில் இழிவு, சிறப்பு என்றில்லாமல் எத்தொழில் செய்யினும் மேன்மை என்றே எண்ணவும், அதனால் எவர் வெறுத்தாலும் வருந்தக்கூடாது என்றும் பண்படுத்துகிறார் பாவலரேறு.

85. நல்லொழுக்கங்கள் பலவற்றையும் பட்டியலிட்டு ஒன்றொன்றாய்ப் பழகிக்கொள்ளச் சிறுவர்களுக்கு அறிவுறுத்துகிறது பாடல்.

86. மலர்களின் அழகை வியந்தும் அதை நாடுவோர் ஒவ்வொருவரின் உணர்வையும் சொல்லும் எளிமையான இசைப்பாடல்.

87. சிட்டுக்குருவியின் வாழ்க்கை ஒழுங்கை வியந்து பாடியது. அது கல்வி பயிலாமலேயே வியப்பான வாழ்க்கை கொண்டுள்ளதை விளக்கும் பாடல்.

88. நிலக்கரியால் ஓடுகிற புகைவண்டியின் ஓட்டத்தைக் குழந்தைகளுக்கு அழகுற விளக்கும் எளிய இசைப் பாடல்.

89. உடலுறுப்புகளுக்குள் தங்களில் யார் பெரியவன் என்ற சண்டை ஒருநாள் மூண்டது. அவை ஒவ்வொன்றும் தானே பெரியவன் என்று வழக்காடின. இறுதியில் வயிறு அவற்றிற்கு அறிவுரை கூறி அமைதியை உண்டாக்கியது–போன்ற கற்பனையில் விளைந்த – நல்ல கருத்துள்ள அழகுப்பாடல்.

90. துன்பத்திற்குத் துவளாமல் இரு; கல்விநலன் உன்னைக் காத்து வரும் தம்பி – என்று சிறுவர்க்குத் துணிவாய்ச் செயல்படப் பழக்குகிறது இப்பாடல்.

91. செந்தமிழின் சிறப்பை யெல்லாம் ஒவ்வொன்றாய்ச் சொல்லி எட்டுத்திசையிலும் அதன் சுடரை ஏற்றிடத் தமிழ்க்கும்மி கொட்டிடும் கும்மியடி இசைப்பாடல்.

92. அடித்துக் கொண்டேயிருக்கும் காற்றுபோல், படித்துக்கொண்டேயிருக்கும் உள்ளத்தின் இயல்பைக் கொண்டு இயற்கையின் பேரறிவை வாரி உண்ணச் சொல்லும் இந்த உயர்ந்த பாடலில் கல்விக்குத் தாழ்ப்பாள் இல்லை எனச் சுட்டுகிறார் பாவலரேறு.

93. தமிழின் பெருஞ்சிறப்பையும், தமிழும் ஆங்கிலமும் கற்க வேண்டிய தேவையையும் விரித்துரைக்கும் பாடல். ஆங்கிலர் வரவால் தீங்குசெய் சாதியின் இழிவு தீய்க்கப்பட்டதைச் சுட்டி ஆங்கிலத்தை இணைந்து கற்கக் கூறும் பாடல் இது.

94. புதியதாய்ப் பள்ளிக்கு வந்த சிறுமலர் நெஞ்சினரின் தோற்றங்களையும், உணர்வுகளையும் சொல்லி வியக்கிறார் பாவலரேறு.

95. பள்ளியில் வெற்றி, தோல்வி அடைந்த மாணவர்களின் மனநிலையையும், அதனால் செருக்கு கொள்ளவோ துவளவோ வேண்டாவென்றும் கூறிக் கல்வியின் சிறப்பை விரித்துரைக்கிறது இப்பாடல்.

96. புறநிலையில் இனிக்கப் பேசுவோர் – அகநிலையில் வேறுபாடாக இருக்கின்றனர். புறத்தே சிறப்பாக இருப்பதை மட்டும் பார்த்து ஏமாற்றமடைந்திட வேண்டாவென்பதைத் தம்பிக்கு அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

97. பள்ளியில் குறும்பு செய்யாமல், பொதுமை உணர்வொடு எப்படி இருந்திடல் வேண்டும் எனச் சிறுவர்க்கு அறிவு புகட்டுகிறது இப்பாடல்.

98. எவ்வெவற்றையெல்லாம் அறிந்து முன்னேற வேண்டும் என்றும், எவ்வெவற்றையெல்லாம் புறந்தள்ளி முன்னேற வேண்டுமென்றும் பட்டியலிட்டு விளக்குகிறார் பாவலரேறு.

99. பள்ளிப்பாடநூல்கள் என்று மட்டுமே இல்லாமல் ஓய்வாக இருக்கையில் என்னென்ன பயில வேண்டும்; அவற்றால் என்னென்ன பயன் பெறலாம் என விளக்குகிறது பாடல்.

100. மழையின் அழகையும் சிறப்பையும் உவமையுடன் விளக்கும் இசைப்பாடல்.

101. நூலகத்தின் தேவையையும், அதன் பயன்களையும் பாங்காக விளக்குகிற பாடல்.

102. நிலவில் முதன்முதலில் மாந்தன் சென்று இறங்கிய நிகழ்ச்சியினை அழகுற எடுத்துரைப்பதுடன் அவர்களின் அறிவியல் வளர்ச்சியை வியந்து, நாம் என்ன செய்கிறோம் – என்கிற கேள்வியை மாணவர்களிடையே எழுப்பிச் சிந்திக்க வைக்கிறது இப்பாடல்.

103. மூத்தோர் அறிவுரைப்படி நடவாமையால் வாழ்க்கை முடிவுற்ற ஆமையின் கதையை அழகுறச் சொல்லி மாணவர்க்கு அறிவூட்டுகிறது இப்பாடல்.

104. சிற்பிகள், ஓவியர், கூத்தர், இசைவாணர் ஆகிய கலைஞர்களின் கலையியல் சிறப்பைச் சொல்லும் சிறப்புப்பாடல்.

105. சிறுவர்களையும் குழந்தையைக் கொஞ்சி ஆடுமாறு ஊஞ்சல் பாடுகிறார் பாவலரேறு.

106. இன்பத் தமிழ்மொழிக்கு ஏற்றமும் ஆக்கமும் பிறந்ததெனச் சொல்லி ஊஞ்சல் ஆடச் சொல்லுகிறது இப்பாடல்.

107. படிப்பறிவு இருந்தால் மட்டும் போதாது, பட்டறிவோடு உலகறிவும் தேவை என்பதை உணர்த்துகிற சிறுகதைப் பாடல்.

108. அடியை எடுத்து வைத்து முடிவு வரைக்கும் நடக்குமாறு பாப்பாவுக்குச் சொல்லுவது போன்றமைந்த பாடல் இது. அங்ஙனம் நடக்கையில் கவனிக்க வேண்டிய எச்சரிக்கை குறித்தும் விளக்குகிறது இப்பாடல்.

109. எந்தச் செயலை எடுத்துக் கொண்டாலும் அதற்கென்று உழைக்காமல் பயன் இல்லை; ஆழப்படுத்தாமல் நீர் ஊறாது – என்று சிறுவர்க்கு அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

110. நாயின் நன்றி உணர்ச்சியையும் கடமையையும் சொல்லி நாமும் அதுபோல் வாழ்ந்து காட்டவேண்டுமென்று தம்பி, தங்கைகளுக்குக் கூறுகிறது இப்பாடல்.

111. நாய் எவ்வாறு குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவர்க்கும் நன்றியுடையதாய் இருக்கிறது என்று கூறி, அதே நாய் தன்னின நாய்களுக்குப் பகையானதாகவும் தன் குட்டிக்குத் தந்தையாகவும், குட்டிகளின் தாய் நாய்க்குக் கணவனாகவும் இருப்பதை விளக்குகிறது பாடல்.

112. பொதுமை உணர்வு கொள்ளுதல் வேண்டி சிறுவர்க்கு உணர்த்துவதாய் அமைந்த பாடல். அப் பொதுமை உணர்வோடுதான் இனநல உரிமை உணர்வு நெறியுடையது என்று சிறுவர்க்கு விளக்குகிறார் பாவலரேறு.

113. பேச்சிலோ மூச்சிலோ விளங்காதபடி உண்மையும், பொய்யும் உலவி வருகையில் ஏச்சில் மயங்காமல் எதிர்ப்பில் தயங்காமல் செயல் முடிக்குமாறு தம்பிக்கு அறிவுறுத்துகிற பாடல்.

114. விளையாட்டு, வேடிக்கையில் பொழுதை வீணாக்காமல் உள்ளத்தையும், உடலையும் பயிற்றுவித்து மனக்கலத்தை உழுதுக் கருத்தைப் பயிர்செய்யச் சொல்லுகிறார் பாவலரேறு.

115. மருத்துவர் இளங்கோ அவர்களின் ஆண் குழந்தைகள் இருவரின் விளையாட்டுப் படம் கொண்ட தமிழ்ச்சிட்டு அட்டைப்படப் பாடல். அண்ணன் தன்னைக் கவனித்துக்கொள்ள வேண்டும் எனத் தம்பி கேட்பது போன்றதான பாடல்.

116. தலைவாராமல் பள்ளி செல்லாமல் வருந்தும் குழந்தையைத் தந்தை தேற்றுவதான பாடல். பொன்முகிலன் – கோமதி இணையரின் குழந்தை பூவிழியின் படம் வந்த தமிழ்ச்சிட்டு அட்டைப் பாடல்.

117. எழுதுகிறபடி புகைப்படமுள்ள குழந்தைக்குத் தமிழும் அறிவியலும் வாழ்வியலும் எழுதச் சொல்கிறது இப் பாடல்.

118. மருள்கின்ற குழந்தையை, எதனைக்கண்டும் மருளவேண்டா; மயங்கவேண்டா என அறிவுறுத்தும் தமிழ்ச்சிட்டு அட்டைப்படத்திற்கான பாடல்.

119. வருத்தப்பட்டு முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டிருக்கும் மூன்று குழந்தைகளின் படத்தினை அட்டைப்படமாகக் கொண்ட தமிழ்ச்சிட்டு இதழின் பாடல். அக்குழந்தைகள் ஏன் ஏதும் பேசாமல் நிற்கின்றார்கள். அவர்கள் செய்யும் குறும்புகளுக்காகத் தந்தை சினந்தாரா? என்று குழந்தைகளைக் கேட்கிறது பாடல்.

120. "தமிழ்மகனாய் உள்ள தம்பியே, உன்னைநம்பி நாடு உள்ளது. நீ குள்ள மனத்தினன் இல்லை; நாட்டுக்குழைத்திடும் நல்லோனாய் நீ வாழ்ந்து புகழ்பெறு! நல்லார் இடத்தில் நீயும் ஓர் இடம்பெறு" – என்கிறார் பாவலரேறு !

121. தமிழ்ச்சிட்டு அட்டைப்படப் பாடல். பள்ளிப்பிள்ளையைத் தூயதமிழ் பாடித் துள்ளி ஆடச் சொல்லுவதாய் உள்ள பாடல் இது.

122. மூட நம்பிக்கையாய் எதையும் நம்பிக் கெடாதே என அறிவுறுத்தும் இசைப்பாடல். நாடு மொழி இனம் நாடு என்று நயந்துரைக்கிற பாடல்.

123. பள்ளி செல்லும் தம்பி புன்செயல்களில் அழிந்தொழிந்து போகாமல் சாய்ந்த தமிழினத்தைச் சாகாமல் காத்துநிற்க உணர்த்துகிறார் பாவலரேறு.

124. வழலை நீரில் குழலைத் தோய்த்து ஊதி விளையாடும் குழந்தைகளிடம், வாழ்க்கையை அதனோடு ஒப்பிட்டு அறிவூட்டுகிறார் பாவலரேறு. தமிழ்ச்சிட்டு அட்டை ஓவியத்திற்கான பாடல் இது.

125. ஆரவாரங்களுடனும், இழிவு – சிறப்புப் பார்க்காமலும் கேடர்களாகவே உலவுகின்ற மூடர்கள் வாழ்கின்ற காலத்தில் – தம்பி நீ விழிப்பாய் இரு ! என்று எச்சரிக்கை செய்கிறது – இப்பாடல்.

126. ''இறந்தோர் பலபேர் முகவரி இல்லை– இறந்த பின்னும் எவர்க்கும் பயனாய் இருப்பாய் தம்பி'' – என்று அறிவுறுத்துகிறது பாடல்.

127. பொய்ம்மையும், புனைவும் கொண்டதாய் இருக்கும் உலகில் மெய்யும், ஒழுங்கும் மேன்மையுறல் கடினம் – என உணர்த்துகிறார் பாவலரேறு.

128. ''ஊர் உலகில் நடக்கும் இழிவுகளோடு கலந்து இழிந்துவிடாமல் – பிழையெனக் கண்டதை நீக்கி, உன் பிறப்பினை வரலாறாக்கிடுவாய்'' – என உணர்த்துகிறது இப்பாடல்.

129.. ''தமிழைவிடுத்து ஆங்கிலம் பேசுவதாலும் தமிழில் ஆங்கிலம் கலந்து பேசுவதாலும் பழியன்றோ மிஞ்சும்?'' என்று குழந்தைக்கு அறிவூட்டுகிறார் பாவலரேறு.

130. ''தாய்மொழி, இனம், நாடு நினைத்துழைத்திடுவதோடு, உடை, மனை, உணவு ஆகியன மக்கட்கு ஒப்பவே கிடைத்திட ஒப்புவித்திடுவாய்த் தம்பி உன்னையே!'' – என்று உணர்த்துகின்றது இப்பாடல்.

131. '' இன்னும் தயங்கிக் கொண்டும், உறங்கிக் கொண்டுமிராமல் எழுந்து உன் உலகக் கடமையைத் தொடங்கிடுவாய்'' – எனத் தம்பிக்கு அறிவுறுத்துகிறது இப்பாடல்.

132. தாத்தாவுக்குத் 'தமிழ்ச்சிட்டு' இதழைக் காட்டி இதழின் சிறப்பைச் சிறுவன் விளக்குவதான – அட்டைப்படத்திற்கேற்ற பாடல் இது.

133. தமிழ்ச்சிட்டுக் குழந்தைகளுக்கு, நம் தமிழ்த்தேசம் குறித்தும், நம் மொழி, இன, நாட்டுரிமை குறித்தும் நாம் மேற்கொள்ள வேண்டிய பொதுமை நலம் குறித்தும் கூறுகின்றார் பாவலரேறு.

134. கடைத் தெருவில் பொருள்கள் வாங்குவதில் எந்த அளவு எச்சரிக்கை வேண்டும் என்று பயிற்றுவிக்கிறது இப்பாடல்.

135. ''பல்வேறு அறிவுக் கூறுகளையும், வாழ்க்கைப் பாதைகளையும், உள்ளத்துணர்வையும் அறிந்து விளைவுகள் செய்வாய் புகழ்சூடி'' – என்று சிறுவர்க்கு உணர்த்துகிறார் பாவலரேறு.

136. தம்பி தங்கைகள் அன்றாடம் உடற்பயிற்சி செய்வதால் எந்த அளவு உடலும் உணர்வும் வலுப்பெறும் என உணர்த்துகிறது இப்பாடல்.

137. கைபிடித்து அழைத்துச் செல்லுமாறுக் கேட்கும் அம்மாவைப் பார்த்துப் பிள்ளை "தான் என்னவெல்லாம் செய்வேன்" – என்று அம்மாவுக்குச் சொல்லுவதான குழந்தைப் பாடல்.

138. நீந்துவதால் உடல் எந்த அளவு உரமேறும் எனச் சிறுவர்க்கு உணர்த்துகிறது இப்பாடல்.

139. செந்தாழை மகன் செந்தணல் சிறியவனாய்ச் செய்த குறும்புகளின் அழகான படப்பிடிப்பாய்ப் பாடல்.

140. சிறுவர்கள் பின்பற்ற வேண்டிய பத்துக் கட்டளைகளைக் கூறுகிறது இப்பாடல்.

141. சிட்டுக் குருவியைப் பார்த்து, உன் இனத்தில் மதமும் சாதியும் உண்டா? என வினா எழுப்பிச் சிறுவர்களைச் சிந்திக்க வைக்கிறது இப்பாடல்.

142. நம்மைச் சுற்றியுள்ள இயக்கம் முழுவதையும் அறிதலே நம் வாழ்வின் நலனைப் பேணும் – என்கிறது இப்பாடல்.

143. நாட்டமின்றி இருந்ததால் நலமிழந்ததைக் கூறி நாட்டுரிமை நிலைநாட்ட வேண்டி அறிவுறுத்தும் பாடல்.

144. "தமிழ்த்தாயின் பெருமைகளைச் சொல்லி ஆடிப்பாடுவீர் குழந்தைகளே" எனத் தமிழ்த்தாயின் பெருமைகளை நிரல்படுத்துகிறார் பாவலரேறு.

145. மாணவப் பருவமே அடித்தளம் அமைத்திடும் பருவம். அப் பருவத்தில் பல்துறை அறிவினையும் முழுமையாய்ப் பெறுவதே கடமை. அம் மாணவரின் எழுச்சிகளும் புரட்சிகளும் பெரும் பயன் நல்கும்படி அமையுமாறு பாடுகிறார் பாவலரேறு.

**–மணிமொழிமாலை–**

146. கல்வி, கேள்வியில் சிறந்தோனாயினும் ஒழுங்கிலான் விலங்கினையொத்தவனே என்கிறார் பாவலரேறு.

147. வாழ்க்கை பற்றியும் வாழ்வியல் கூறுகளுக்குமான பண்பிலக்கணங்களை மணிமொழிகளாகவும் வரையறுக்கிறது இப்பாடல்.

148. வாழ்க்கையின் நற்பண்புகளை மிகச் சுருக்கமாக வரையறுத்துச் சொல்கிறது இப்பாடல்.

149. காய் கனியாமல் வெம்பிப் போனால் பயனில்லை. ஆகவே அரும் பணி புரிந்து கனிபோல் பயன் தருவோம் என அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

150. "ஒரு நொடிப்பொழுதும் ஓயாமல் உலக விரிவில் உன்னை விரித்துக்கொண்டு பெரும்பயன் பெறுவாய்" – என்கிறது பாடல்.

151. மக்களின்ஏற்றம் கருதிப் பேசிடவும், கடமை, ஒழுங்கைக் கைக்கொண்டிடவும் கூறுகிறது இப்பாடல்.

152. கூர்மையுடன், சீர்மைகண்டு நேர்மையாய் முனைவதே செம்மை வாழ்வென நிறைவுகொள்ளுமாறு அறிவுறுத்துகிறது பாடல்.

153. முதியவர் அறிவுரைகேட்டும் மதியை, உளத்தை மலர்துவதே வாழ்க்கை என்கிறார் பாவலரேறு..

154. கழிவுக் குப்பைகளைச் சுவைக்கும் ஈக்கள்போல் இல்லாமல், தேனீக்களைப்போல் நல்லன உண்டு மகிழ்ந்திடும் தன்மையே உயர்ந்ததும் மகிழத்தக்கதுமாகும் என்றுரைக்கிறார் பாவலரேறு இப்பாடலில்.

155. நட்பு – பகை குறித்துச் சுருங்கச் சொல்லும் அறிவுரைப் பாடல்.

156. கடமையும் ஒழுக்கமுமே கல்விக்கு அணிகலன் என்றும் செப்பமும் முயற்சியும் தேவை என்றும் கூறுகிறது இப்பாடல்.

157. ஆர்ப்பரிக்கும் வாய்ச்சொல் அறிவுடைமை யாகாது அரும்பணி ஒன்றே அறிவைக் காட்டும் அளவு – என்கிறது இப்பாடல்.

158. அழுவது கோழைமை அயர்வு கொள்ளாதே – என்றும் முழுவதும் அறிந்து கொள்ளும் முன்முடிவு செய்யாதே" என்றும் பலவாறு அறிவுறுத்துகிறது இப்பாடல்.

159. பிறரை என்னவாறெல்லாம் எண்ணுகிறோமோ அவ்வாறெல்லாம் நாமும் இருந்திட வேண்டும் என்கிறார் பாவலரேறு.

160. உருவைப் பார்த்தல்லாமல் உள்ளத்தைப் பார்த்து நட! தீய தொடர்பே இகழ்ச்சி – என்று பலவாறாய் அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

161. நன்கு எண்ணவும், தெளிவாய்ச் சொல்லவும், செப்பமாய்ச் செய்யவும் தெரிந்து கொள்ளுமாறு பிள்ளைகளுக்கு அறிவூட்டுகிறார் பாவலரேறு.

162. அறிவுரை, செறிவுரை, தென்புரை அன்புரை, எழுத்துரை, என்றனைத்தைக் காட்டிலும் செயலே சிறந்தது – என விளக்குகிறார் பாவலரேறு.

163. உள்ளம் தெளிந்திருந்தாலே செயலும் தெளிவுறும்; கோணல் உள்ளமோ குழம்பிய உரைதரும் நாணுறும் செயல்களை விளைவிக்கும் என்கிறார் இப் பாடலில்.

164. ஒவ்வொரு நாளிலும் செய்ய வேண்டிய ஒழுக்க நடைமுறைகளை அழகுற விளக்குகிறது பாடல்.

165. இப்பாடலில் 'உழைப்புக்கு விளைவுண்டு; நல்ல விளைவுக்குப் புகழுண்டு' என்று பாவலரேறு எடுத்தியம்புகிறார்.

166. உண்மைக்கு மாறாக உரைக்கப் படுபவை தீமைக்குள் அழியும் என்றுரைக்கும் பாடல்.

167. "பொய் என்னும் தீங்குணர்வைக் கொள்ள வேண்டா; திருட்டென்னும் புன்செயலைச் செய்ய வேண்டா; ஒய்வில்லா உழைப்பால் உயர்கடமை செய்க!" என்றுரைக்கும் பாடல்.

168. உள்ளமே ஆற்றல் பொருந்தியது. எனவே அதை உயர்த்தி நிறுத்திச் செயல்படச் சொல்கிறது பாடல்.

169. உணர்வு தோன்றி, சொல்வடிவாகி, எழில் செயலுமாகி உலகோர்க்கு இன்பம் கொடுப்பதே பயன் – என்கிறது இப்பாடல்.

170. எவ்வளவு உழைத்தாலும் ஆவதே விளைவாகும். எண்ணமானது செயலாய் விளைந்திடத் திட்டம், ஆள், பொருள் என்று பல தேவை என்கிறார், பாவலரேறு.

171. கல்விக்குரியது மட்டும் படித்திடாமல் அறிவு நூல்களையும் தேர்ந்து பயில வேண்டும். ஏதோ வாழ்ந்தோம் என்றிருக்காமல் தெளிவாய் வாழத் திறனைப் பெறுதல் வேண்டும் என்று அறிவுறுத்தும் பாடல்.

172. பூப்பவையெல்லாம் காய்ப்பதில்லை. நினைப்பனவெல்லாம் நிகழ்த்தியது என உலகியல் நிலையை விளக்குகிறது பாடல்.

173. சொன்னபடி செய்வது பெரிது. மக்களுக்குத் தொண்டாற்றுவது பெரிது; பெரிது; செல்லும் வழியைத் தீர்மானித்துக் கொண்டு நடந்தால்தான் சிறப்பு என்றுரைக்கிறது இப்பாடல்.

174. “சோர்வும் சோம்பலும் உனை மென்று தின்பன! சுறுசுறுப்பே உனை உயர்த்திடும். தீர்வுசெய்! முனைந்து செல்!” என்று அறிவூட்டும் பாடல்.

## கனிச்சாறு ஐந்தாம் தொகுதி

(குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை)

### பாடல் முதல் குறிப்பு அகர வரிசை


| பாடல்முதற் குறிப்பு | பாடல் எண் |
|---|---|
| அங்கயற் கண்ணி | 57 |
| அண்டை அயலில் | 142 |
| அண்ணன் தாண்டு | 54 |
| அண்ணன் பட்டம் | 63 |
| அம்மா உங்களை | 119 |
| அம்மா என்னை | 137 |
| அம்மா! என்னைப் | 51 |
| அம்மா மிகவும் | 8 |
| அம்முமா கண்ணாடி! | 56 |
| அருமைத் தம்பியே! | 93 |
| அவள் ‘இசை | 61 |
| அழகு காட்டுப், | 55 |
| அழாதே பாப்பா | 34 |
| அறிவிலரும் சிற்சிலகால் | 157 |
| அறிவுக் கூறுகள் | 135 |
| அறிவுரை மட்டிலும் | 162 |
| அன்புத் தம்பியே | 136 |
| அன்புப் பாப்பா | 105 |
| ஆங்கிலத்தைக் கற்பதுதான் | 129 |
| ஆடிப் பாடுவீர் | 144 |
| ஆடு ஊஞ்சல் | 62 |
| ஆல மரத்தின் | 70 |
| ஆவே! ஆவே! | 50 |
| இரும்புத் துண்டு | 25 |
| இரும்பு வண்டி | 88 |
| இன்பத் தமிழ் | 106 |
| இன்னுமேன் உறக்கம் | 131 |
| உடலைக் காக்கும் | 67 |
| உண்மைக் கென்றும் | 165 |
| உண்மைக்குப் புறம்பாய் உரைகள் | 140 |
| உண்மைக்குப் புறம்பாய் உரைப்பன | 166 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| உண்மையும் பொய்யும் | 113 |
| உண்மையும் நேர்மையும் | 174 |
| உருவைப் பார்த்து | 160 |
| உலகம் பெரிது; | 150 |
| உள்ளத்தில் உணர்வாய்த் | 169 |
| உள்ளம், நன் றானால், | 163 |
| உற்ற கல்வியும் | 146 |
| உன்னால் உலகம் | 126 |
| உன்னைக் கொண்டு | 23 |
| ஊரில் உலகில் | 128 |
| ஊருக் கெல்லாம் | 78 |
| எங்களது வீட்டில்ஒரு | 139 |
| எண்ணத் தெரிந்துகொள்! | 161 |
| எண்ணிப் பேசுக | 151 |
| எத்தனை அணுக்கள் | 168 |
| எத்தனை நினைக்கினும், | 170 |
| எத்தொழில் செய்யினும் | 84 |
| எப்பொழுதும் பாதையில் | 14 |
| எருதில் லாத | 18 |
| எவர் பேச்சைக் | 96 |
| எழுதுக குழந்தாய்! | 117 |
| ஒப்புவித் திடுவாய், | 130 |
| ஒருவன்உனை மேய்த்தாலும், | 167 |
| ஒற்றைக் காலைத் | 17 |
| ஒன்று இரண்டு | 40 |
| ஒன்று இரண்டு பனிரண்டு | 19 |
| ஓடிவாடா! ஓடிவாடா! | 39 |
| ஓய்வாக இருக்கையில் | 99 |
| 'க, கா' என்றே | 46 |
| கட்டுச் சோற்றைக் | 31 |
| கடைத்தெருவில் கண்டதெல்லாம் | 134 |
| கண்கள் விழித்தன; | 94 |
| கண்டன வெல்லாம் | 172 |
| கண்ணைக் கண்ணைக் | 58 |
| கத்தி ஒன்றின் | 68 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| கதிரவனே! கதிரவனே! | 4 |
| கதிருக்கு முன்னெழு! | 164 |
| கருங்கல்லாலும் | 104 |
| கல்விக் கணிகலன் | 156 |
| கல்விக் குரிய | 171 |
| கல்விநலம் பெரி(து); | 173 |
| கற்க! கற்க! | 7 |
| கனி இருக்கக் | 81 |
| காக்கைக்கு 'வேம்பு' | 154 |
| காய் பருத் | 149 |
| கால்: "உடலைத் | 89 |
| காலையிலே கண் | 11 |
| காலொடிந்த காக்கையைக் | 76 |
| காற்றே! உன்னைப் | 10 |
| குடி இருக்க | 3 |
| குடியிருக்கும் வீட்டை, | 48 |
| குடையும் செருப்பும் | 29 |
| குயிலே குயிலே | 52 |
| குருவி! குருவி! | 42 |
| குழந்தை இங்கே | 5 |
| குளம் ஒன்றில் | 103 |
| கூட்டம் கூடிக் | 143 |
| கூடி வாழ்தலே | 148 |
| கூன் விழுந்த | 6 |
| கையிலே ஒரு | 35 |
| கையைப் | 115 |
| கொட்டுங்கடி கும்மி | 91 |
| கொள்ளைத் தின்னும் | 45 |
| கோடை வெயிலில் | 138 |
| சிட்டுக் குருவிபோல் | 16 |
| சிட்டுக் குருவியே! | 141 |
| சிரிப்பாய் இருக்குதடி | 60 |
| சிலந்தி வலையைப் | 30 |
| சிற்றெறும்புக் கூட்டத் | 72 |
| சிற்றெறும்பே! சிற்றெறும்பே! | 79 |
| சினத்தைப் பழகாதே | 83 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| செடியில், கொடியில் | 86 |
| தம்பி, தம்பி | 43 |
| தம்பி, நீ ஒரு | 120 |
| தமிழ்ச்சிட்டுக் குழந்தைகளே! | 133 |
| தலைமாலை சூட்டித் | 121 |
| தலைவாராமல் பூச்சூடாமல் | 116 |
| தவ்வித் தவ்விப் | 75 |
| தாத்தா பாருங்கள் | 132 |
| துன்பம் வரும்போழ்தில் | 90 |
| தூங்கி இருந்தது | 82 |
| தோட்டம் நல்ல | 65 |
| நகைப்பவர் யாவரும் | 155 |
| நம்பிக்கைகள் பல உண்டு | 122 |
| நாய்க்குட்டி நாய்க்குட்டி | 59 |
| நாயி னிடத்தும் | 110 |
| நாளும் நாளும் | 24 |
| நீள மான வீதிகள்; | 41 |
| நூலகம் இலாதது | 101 |
| நொண்டிப் பிச்சைக் | 66 |
| பச்சைக் கிளியே! | 53 |
| பசிக்கு வேண்டும் | 22 |
| பசித்திடும் ஒருவன் | 112 |
| பசுவை வீட்டில் | 80 |
| படிப்படி யாகத் | 108 |
| பதியவை மனத்தில்; | 153 |
| பந்தைத் தூக்கிப் | 32 |
| பயற்றங்காய்க் | 64 |
| பல்லைத் தூய்மை | 69 |
| பள்ளிக்குச் செல்லும் | 123 |
| பள்ளிக்கூடம் | 20 |
| பள்ளிப் பிள்ளையே! | 92 |
| பள்ளியிற் குறும்பு | 97 |
| பள்ளியை நோக்கி | 109 |
| பறந்து வந்த | 15 |
| பாடிக் கொண்டே | 77 |
| பாப்பா பாப்பா | 38 |

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| பாப்பா வுக்குப் | 36 |
| பார்வையில் கூர்மை | 152 |
| பிழைக்கும் உயிர்கள் | 28 |
| பிறரைப் புகழ்கையில் | 159 |
| புகையில் லாமல் | 33 |
| புழுவைக் கொல்லப் | 74 |
| பூக் கொடுக்கும் | 71 |
| பெரிய வர்க்குப் | 21 |
| பொட்டு நிலா ! | 49 |
| பொய்யும் புளுகும் | 127 |
| பொன்னன் ஒருநாள் | 107 |
| மண்ணில் விளைவது | 47 |
| மண்ணைப் பிசைந்தான்; | 13 |
| மணியுடல் சிறிய | 87 |
| மருளாதே தம்பி | 118 |
| மல்லிகைப் பூ | 1 |
| மாணவர் மனங்களோ | 145 |
| மாந்தர் மூவர் | 102 |
| மிகவும் சிறிய | 2 |
| மியாவ் மியாவ் | 26 |
| முட்டைக்குக் கால் | 37 |
| முழுவதும் அறிந்துகொள் ! | 158 |
| முன்னேறு முன்னேறு | 98 |
| மூடர்கள் வாழ்கின்ற | 125 |
| வழலை நீரில் | 124 |
| வாழ்க்கை ஒன்ற ! | 147 |
| வானங் கிழிய | 12 |
| வானம் கருத்தது; | 100 |
| வானைத் தொட்டு | 9 |
| விசையைத் தட்டி | 27 |
| விடியலில் எழுநீ | 85 |
| விருந்தினர் வந்தால் | 111 |
| விளையாட் டென்றும் | 114 |
| வெளியில் விற்கும் | 44 |
| வேல் பிடிக்கும் | 73 |
| வேனில் கழிந்தது; | 95 |

குஞ்சுகளுக்கு

## 1 நிறங்கள்!

மல்லிகைப் பூ வெள்ளை நிறம்
மாலை கட்ட உதவுமாம்!
புல்லும் இலையும் பச்சை வண்ணம்;
ஆ விரும்பி உண்ணுமாம்!

வானம் எங்கும் நீல வண்ணம்;
வட்ட நிலா நீந்துமாம்!
கானக் கிளியின் மூக்குச் சிவப்பு;
கனியைக் கடித்துத் தின்னுமாம்!

எலுமிச் சம்பழம் மஞ்சள் நிறம்;
எங்கும் பழுத்துத் தொங்குதாம்!
உலவும் காக்கை கறுப்பு வண்ணம்;
ஒளிந்து திருடித் தின்னுமாம்!

-1960

## 2 எப்படி?

மிகவும் சிறிய கல்லையே
மிதக்க வைப்ப தெப்படி?
மிகவும் பெரிய கப்பலோ
மிதந்து செல்வ தெப்படி?

'ஈனத்' துரும்பை வானிலே
எடுத்து வீசப் பறக்குமோ?
வானக் கப்பல் தரையிலே
விழாமல் பறப்ப தெப்படி?

சிறிது தொலைவில் நின்றவன்
சொல்லும் சொற்கள் கேட்குமோ?
ஒருவன் பேசும் ஒலியினை
உலகம் கேட்ப தெப்படி?
சொன்ன பாட்டை முழுவதும்
திருப்பிச் சொல்ல முடியுமோ?
பண்ணும் இசையும் தட்டிலே
பதித்து வைப்ப தெப்படி?

இரவும் பகலும் அறிஞர்தாம்
எண்ணிக் கண்டு பிடித்தனர்!
இரவும் பகலும் படிக்கிறோம்;
என்ன கண்டு பிடிக்கிறோம்!

-1960

## 3 வீடு !

குடி இருக்க வீடு
கூரை மேலே ஓடு!

படிப்ப தற்கோர் அறை;
படுத்துத் தூங்க ஒன்று!

சமையல் செய்ய ஒன்று;
தட்டு முட்டுக் கொன்று!

குளிப்ப தற்கோர் அறை;
கூடிப் பேச முற்றம்!

தூய்மைக் காற்று வீசும்,
தோட்டம் ஒன்றும் உண்டு!

நோய்கள் வந்த தில்லை;
நொடிகள் வந்த தில்லை!

-1960

## 4 கதிரவன்!

கதிரவனே! கதிரவனே!
கடலில்வந்த கதிரவனே!
உதிராத நெருப்பாகி
உடல் கொளுத்தும் கதிரவனே!

காலையிலே தோன்றுவதேன்?
கருவானம் நீந்துவதேன்?
மாலையிலே மறைகுவதேன்?
மக்களினம் வாழ்வதற்கோ?

காயாத ஈர மெல்லாம்
கை நீட்டித் துடைக்கின்றாய்!
ஓயாமல் ஒளி கொடுத்தே
உயிர் வாழச் செய்கின்றாய்!

கடல்நீரைக் காய்ச்சுகின்றாய்!
கருமுகிலை எழுப்புகின்றாய்!
உடல்குளிர மழை பொழிந்தே
உயிர் வாழச் செய்கின்றாய்!

உலகில் உள்ள இருள் விரட்ட
ஓடோடி வருகின்றாய்!
பலவகையாய் உதவுகின்றாய்!
பயன்கருதா துழைக்கின்றாய்!

எவ்வுயிர்க்கும் நல்லவனே!
இணையில்லா வல்லவனே!
இவ்வுலகம் தழைப்பதற்கே
ஈடில்லா துழைப்பவனே!

-1960

## 5 குழந்தை!

குழந்தை இங்கே வா!
கொஞ்சி முத்தம் தா!

பாலுஞ் சோறும் உண்ணு!
பத்து வரையில் எண்ணு!

அஆ இஈ என்றே
அப்பா வந்தால் சொல்லு!

பட்டுச் சட்டை தைப்பார்!
பதக்கம் வாங்கி வைப்பார்!

முத்துப் பல்லைக் காட்டு!
முன்னங் கையை நீட்டு!

சோற்றை வாயில் போடு!
சுவையாய்ப் பாடி ஆடு!

-1960

## 6 பாட்டி!

கூன் விழுந்த பாட்டி,
குட்டைக் காலை நீட்டிப்
பாலுஞ் சோறும் ஊட்டிப்
படுக்க வைப்பாள் ஆட்டி!

ஈரும் பேனும் பார்ப்பாள்!
எங்கும் தூய்மை சேர்ப்பாள்!
நோயை நன்கு தீர்ப்பாள்!
நாளும் அன்பை வார்ப்பாள்!

அண்டை வீடு செல்வாள்!
அரட்டை பேசி வெல்வாள்!
கொசுவை ஈயைக் கொல்வாள்!
கோடிக் கதைகள் சொல்வாள்!

-1960

## 7 திருக்குறள் அறிவு!

கற்க! கற்க! கற்க!
கற்பன வற்றைக் கற்றவை வழியில்
நிற்க! நிற்க! நிற்க!

சொல்க! சொல்க! சொல்க!
சொல்லுஞ் சொல்லால் மற்றவர் சொல்லை
வெல்க! வெல்க! வெல்க!

பணிக! பணிக! பணிக!
பணிவாய் நின்றே பலவுஞ் செய்யத்
துணிக! துணிக! துணிக!

விருந்து! விருந்து! விருந்து!
விருந்துக் கிட்டு மிகுந்ததை என்றும்
அருந்து! அருந்து! அருந்து!

பொறுக்க! பொறுக்க! பொறுக்க!
பொறுத்துக் கொண்ட தீமையை உடனே
மறக்க! மறக்க! மறக்க!

எண்ணு! எண்ணு! எண்ணு!
எண்ணிய வற்றுள் ஏற்றதை உடனே
பண்ணு! பண்ணு! பண்ணு!

ஒழுகு! ஒழுகு! ஒழுகு!
ஒழுக்கம் ஒன்றே கற்றவர்க் கென்றும்
அழகு! அழகு! அழகு!

-1960

## 8 அம்மா!

அம்மா மிகவும் நல்லவள்!
ஆட்டித் தூங்கச் செய்தவள்!

இளைக்கக் கண்டு அழுதவள்!
ஈயை ஓட்டி நின்றவள்!

உழக்கு நெய்யைச் சோற்றிலே,
ஊற்றிப் பிசைந்து கொடுத்தவள்!

எடுத்துத் தூக்கி அணைத்தவள்!
ஏணை கட்டிப் போட்டவள்!

ஐயன் அப்பன் என்றவள்!
ஔவைக் கதையைச் சொன்னவள்!

ஒப்ப னைகள் செய்தவள்!
ஓயா தென்னை காப்பவள்!

-1960

## 9 மலை !

வானைத் தொட்டு நிற்கின்றாயே மலையே - நீ
வளர்ந்த வகை என்ன வென்றே உரையே!
தூணைப் போல வானக் கூரை தாங்க - உன்னைத்
தூக்கி நிற்க வைத்த வர்கள் யாரோ?

கடலைத் தோண்டிப் போட்ட கல்லு மண்ணோ? - நீ
காற்றடித்துச் சேர்ந்த குவியல் தானோ?
இடம் பெயரா திருந்த விடத்தில் இருப்பாய்! - மேல்
ஏறிப் போகும் மாந்தர் நிலையைப் பொறுப்பாய்!

பறந்து திரியும் முகில்கள் உன்றன் மடியில் - வந்து
படுத்துத் தூங்கும் அழகு நல்ல அழகே!
இறங்கி வழியும் அருவி என்னும் குழந்தை - நீ
ஏந்திப் பெற்ற இன்பக் குழந்தை தானோ?

தேனிருக்கும்; கனியிருக்கும்; உம் மேல்! - நல்ல
தேக்கிருக்கும்; பாக்கிருக்கும்; துள்ளும்
மானிருக்கும்; மருந்திருக்கும்; உன்னால் - என்
மனத்திருக்கும் துன்பம் நீங்கும் மலையே!

-1966

## 10 காற்று !

காற்றே! உன்னைப் பெற்றது யார்!
காட்டில் மேட்டில் விட்டது யார்?
ஊற்றைப் போலப் பெருக்கெடுத்தே
உலாவப் போகும் கதை என்ன?

தேக்கம் இன்றித் திரிகின்றாய்;
தெரியா தெங்கும் நுழைகின்றாய்;
தூக்கம் என்போல் கொள்வாயோ?
தூங்கா தெங்கும் செல்வாயோ?

குழந்தை கண்ணில் குளிர் செய்வாய்;
குன்றைப் பிய்த்தே தூள் செய்வாய்;
பழங்கள் உலுக்கி உதிர்க்கின்றாய்!
பாட்டியைத் தள்ளிச் சிரிக்கின்றாய்?

முகிலாம் பஞ்சின் மூட்டைகளை
மேலே உருட்டிப் போகின்றாய்!
தவிக்கும் உலக உயிர்களுக்குத்
தண்ணீர் பிழிந்தே தருகின்றாய்!

உலகில் மென்மை நீயேதான்!
உலகில் வன்மை நீயேதான்!
உலகின் மூச்சே! உருவற்ற
உயிரே! காற்றே! பழம் பொருளே!

-1966

## 11 சேவல்!

காலையிலே கண் விழிப்பாய் சேவலே! - நீ
கதிரவனை நின்றழைப்பாய் சேவலே!
வேலை யிதோ எந்தநாளும் சேவலே? - நீ
வேறு வேலை என்ன செய்வாய் சேவலே?

குப்பை மேட்டில் ஏறி நின்று சேவலே! - நீ
கொக்கரக்கோ கொக்கரக்கோ என்கிறாய்!
செப்பு வதற் கென்ன பொருள் சேவலே! - வந்து
சேர்ந்த இன்பம் என்ன கண்டாய் சேவலே!

அரும் பரும்பாய் அழகு மிக்க கொண்டையும் - கூர்
ஆணி போல வன்மை சேர்ந்த மூக்கையும்,
திரும்பு கையில் ஆடுகின்ற தாடியும் - எங்குத்
தேடிப் பெற்றாய் என்று சொல்வாய் சேவலே!

-1967

## 12 வானக் கப்பல் !

வானங் கிழிய இரைச்சல் போட்டு
 வானக்கப்பல் பறக்குமாம்! - அதில்
நானும் நீயும் ஏறிக் கொண்டால்
 இலண்டனில் போய் இறக்குமாம்!

முகிலுக் குள்ளே பாய்ந்து விண்ணில்
 முன்னும் பின்னும் சாயுமாம்! - அது
பகலில் இரவில் வானக் கடலில்
 பறந்து திரிந்தே ஓயுமாம்!

இறக்கைக் குள்ளே ஏறிக் கொண்டால்
 எட்டுத் திக்கும் செல்லுமாம்! - அது
பறக்கும் போதே குண்டைப் போட்டுப்
 பலபேர் உயிரைக் கொல்லுமாம்!

காட்டைக் கடந்து, மலையைத் தாவிக்
 கடலைத் தாண்டி ஓடுமாம்! - அது
நாட்டைக் கண்டால் வந்து நிற்க
 நல்ல இடத்தைத் தேடுமாம்!

பாட்டன் பாட்டி கண்ட தில்லை
 பறவை போன்ற கப்பலாம்! - குண்டு
போட்டால் தெரியும்! நானும் நீயும்
 குழிக்குள் புகுந்தால் தப்பலாம்!

-1967

## 13 வீட்டைக் கட்டினான்!

மண்ணைப் பிசைந்தான்;
கல்லை உடைத்தான்;
'மள மள'வென்றே சுவர் வைத்தான்!

திண்ணை அமைத்தான்;
படிகள் வைத்தான்;
தண்ணீர்த் தொட்டி ஒன்றமைத்தான்!

மரத்தைப் பிளந்தான்!
பலகை அறுத்தான்!
'மழ மழ'வென்றே அதை இழைத்தான்!

அரத்தைக் கொண்டும்,
ஆணிகள் கொண்டும்
அழகுக் கதவுகள் பல செய்தான்!

கம்பியை வளைத்தான்;
பலகணி செய்தான்!
கட்டி முடித்தான் ஒரு வீட்டை!

தம்பியும் மகிழ்ந்தான்!
தங்கையும் மகிழ்ந்தாள்!
தாயும் தந்தையும் மகிழ்ந்தனரே!

-1967

## 14 பாதையில் நடத்தல்!

எப்பொழுதும் பாதையில்
இடது பக்கம் நடந்து போ!
தப்பில் லாமல் நடப்பதால்,
தடைகள் வாய்ப்ப தில்லையே!

நடந்து போகும் மேடையில்
நடந்து செல்லல் நல்லது!
கடந்து போக, இரு புறம்
கவனி; பின்பு விரைந்து போ!

படித்துக் கொண்டு நடப்பதும்,
பந்து தட்டிப் போவதும்,
இடித்துக் கொண்டு செல்வதும்,
என்றும் தீங்கு செய்யுமே!

-1968

## 15 காக்கைப் பள்ளிக்கூடம்!

பறந்து வந்த காக்கை யெல்லாம்
பள்ளிக் கூடம் போட்டதாம்!
மறந்து போன பாட்டை எல்லாம்
மீண்டும் மீண்டும் கேட்டதாம்!

கழுத்தைச் சாய்த்துக் காதை வளைத்துக்
கவனத் தோடு நின்றதாம்!
எழுத்தில்லாமல் ஏடில்லாமல்
எல்லாம் கற்றுக் கொண்டதாம்!

நந்தன் வீட்டுக் கூரை மேலே
நாளும் வந்து கூடுமாம்!
குந்தி யிருந்து பாடம் படித்துக்
கூடிப் பறந்தே ஓடுமாம்!

இரையைக் கண்டால் ‘கா...கா’ வென்றே
இனத்தைக் கூவி அழைக்குமாம்!
உரையைக் கேட்டே காக்கை எல்லாம்
ஒன்றாய் உண்டு பிழைக்குமாம்!

-1968

## 16 பறவை, விலங்குகளைப் பார்....!

*சிட்டுக் குருவிபோல் சுறுசுறுப் பாயிரு!*
*பட்டாம் பூச்சிபோல் அழகாய்ப் புனைந்துகொள்!*
*குரங்குக் குட்டிபோல் குறும்புசெய் யாதே!*
*வேங்கைக் குருளைபோல் வீறுகொள், வாழ்வில்!*
*நாய்போல் பிறர்செய் நன்றி நினைந்திடு!*
*எலிபோல் பிறரின் ஈட்டம்உண் ணாதே!*
*காக்கை போலக் கலந்துண்ணக் கற்பாய்!*
*சிற்றெ றும்புபோல் சிறுகச் சேமி!*
*பூனைபோல் பதுங்கிப் பொருள்கவ ராதே!*
*ஆனைபோல் பெருமித மாக நடையிடு!*
*தேனீ போல நல்லன நாடு!*
*குயில்போல் பாடு!மயிலென ஆடு!*
*குயில்போல் பேசு! புறவுபோல் இணைந்திரு!*
*மீன்போல் நீந்து! கன்றுபோல் துள்ளு!*
*எருமை போலக் கலக்கிஉண் ணாதே!*
*காளை போலத் தோளை உயர்த்து!*
*கோழி போலக் குழந்தைகள் பேணு!*
*சேவலைப் போலச் செம்மாந்து நிற்பாய்!*
*பாம்பைப் போலப் பதுங்கி இராதே!*
*முழுநிலா போல முகத்தில் ஒளிசேர்!*
*கதிரவன் போலக் கண்ணொளி ஏற்று!*

-1968

## 17 மயில்!

ஒற்றைக் காலைத் தூக்கி ஆடும்
வண்ண மயிலே! - உன்
உடல் முழுதும் கண்கள் ஏனோ?
வண்ண மயிலே!

சுற்றும் முற்றும் பார்ப்ப தேனோ
வண்ண மயிலே! - உன்
சின்னக் கொண்டை ஆட்டு தற்கோ,
வண்ண மயிலே?

தொங்குந் தோகை விரிப்ப தென்னே,
வண்ண மயிலே? - இன்பம்
தோன்று வதைக் காட்டத் தானோ
வண்ண மயிலே?

கங்குல் வான முகிலைக் கண்டு
வண்ண மயிலே! - நீ
காலைத் தூக்கி ஆடு வதேன்?
வண்ண மயிலே!

நெட்டைக் காலும் நீள் கழுத்தும்
வண்ண மயிலே! - நீ
நீட்டி நீட்டி நடந்தால் இன்பம்
வண்ண மயிலே!

முட்டை யிட்டோ குஞ்சு பொரிப்பாய்
வண்ண மயிலே! - உன்
முழவுக் குரலால் அகவல் செய்வாய்
வண்ண மயிலே!

பச்சை நீலம் மஞ்சள் சிவப்பு
வண்ண மயிலே - ஒளி
பளபளக்கும் பட்டுடலாம்
வண்ண மயிலே!

குச்சிகள் போல் நீலக் கொண்டை
வண்ண மயிலே - நீ
குலுக்குகையில் கோடி இன்பம்!
வண்ண மயிலே!

-1968

## 18 உதவாதவை!

எருதில் லாத மொட்டை வண்டி
ஏறிச் செல்ல உதவாது!
எருவில் லாத வெறுமை நிலமோ
எதுவும் விதைக்க உதவாது!

வெட்டு கின்ற கிணற்றுத் தண்ணீர்
வேகும் வீட்டிற் குதவாது!
கொட்டு கின்ற மழையோ என்றும்
குளித்துக் கொள்ள உதவாது!

கரையில் லாத ஏரித் தண்ணீர்
கழனிக் கென்றும் உதவாது!
உரையில் லாத செய்யுள் நூலோ
உணரார்க் கென்றும் உதவாது!

-1968

## 19 கடிகாரம்!

ஒன்று இரண்டு பனிரண்டு!
ஓடும்; பாடும் மணி உண்டு!

பெரிதாய்ச் சிறிதாய்க் கை உண்டு;
பேசும் 'டிக் டிக்' மொழி உண்டு!

முன்னங் கையில் கட்டிடலாம்!
மிசையின் மீதே வைத்திடலாம்!

சுவரில் தொங்கப் போட்டிடலாம்!
சொல்லும் மணியைக் கேட்டிடலாம்!

முணகிக் கொண்டே ஓடிடுமாம்!
முறுக்கா விட்டால் நின்றிடுமாம்!

அம்மா சுட்டாள் பணிகாரம்!
ஆனால் இதன்பேர் கடிகாரம்!

-1968

## 20 பள்ளிக்குப் போ!

பள்ளிக் கூடம் திறந்தது!
    பையைத் தூக்கிக் கொள்ளுவாய்!
வெள்ளைச் சட்டை போடுவாய்!
    விரைந்து சென்று கூடுவாய்!

கன்று போல ஆடிப் போ!
    காக்கைப் பாட்டுப் பாடி வா!
ஒன்று இரண்டு கற்று வா!
    உரல் ஊஞ்சல் எழுதி வா!

ஒழுக்கம் அன்பு கற்று வா!
    உடற் பயிற்சி பெற்று வா!
அழுக்கு நெஞ்சைத் தூய்மை செய்!
    அடக்கம், அமைதி வாய்மை வை!

பாட்டும் கதையும் படித்து வா!
    பண்பைக் கடைப் பிடித்து வா!
நாட்டுப் பற்றை வளர்த்து வா!
    நமது மொழியைக் கற்று வா!

-1969

## 21 திருக்குறள்!

பெரிய வர்க்குப் பெரியநூல்!
சிறிய வர்க்கோர் அரியநூல்!
உரிய வர்க்கும் உரிய நூல்!
உலகில் யார்க்கும் உயர்ந்த நூல்!

அன்பைப் பற்றிச் சொல்லுமே!
அறத்தை விளக்கிக் கூறுமே!
பண்பை எடுத்துக் காட்டுமே!
பணிவை உயர்வை ஊட்டுமே!

உலகில் யார்க்கும் ஒருகுரல்!
உண்மை பேசும் திருக்குறள்!
பலவும் அறிந்து கொள்ளலாம்!
படித்து மடமை தள்ளலாம்!

-1969

## 22 வேண்டும்!

பசிக்கு வேண்டும் சோறு!
பயிர் செழிக்க ஆறு!
வசிக்க நல்ல வீடு!
வாய் மணக்கப் பாடு!

கனி கொடுக்க மரம்!
கொண்டைக்குப் பூச் சரம்
துணி எடுக்கக் காசு!
தூக்கி முன்னால் வீசு!

பள்ளிக் கூடம் போவேன்!
பாடம் நன்றாய்க் கேட்பேன்!
வெள்ளிப் பணம் பார்ப்பேன்!
வேண்டும் பொருளைச் சேர்ப்பேன்!

-1969

## 23 அன்னை!

*உன்னைக் கொண்டு வந்தே, இவ்*
*உலகில் விட்டது யார் சொல்?*
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

*கண்ணைப் போல உன்னையே*
*காத்து வருவது யார் சொல்?*
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

*எண்ணெய் இட்ட விளக்குப் போல்*
*இரவில் காத்தது யார் சொல்?*
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

*உண்ண உண்ணப் பாலையே*
*ஊட்டிக் கொடுத்தது யார் சொல்?*
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

*கண்ணே! மணியே! என்றுன்னைக்*
*கட்டிக் கொண்டது யார் சொல்?*
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

*பொன்னே! பூவே! என்றுன்னைப்*
*போற்றிப் புகழ்ந்தது யார் சொல்?*
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

*உன்னைக் காக்க மருந்துண்டே*
*உணவை வெறுத்தது யார் சொல்?*
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

மண்ணில் இன்றும் என்றும் நீ
மறவா திருப்பது யார் சொல்?
**அன்னை! அன்னை! அன்னை – என்**
**அன்னை! அன்னை! அன்னை!**

-1969

## 24 உள்ளத் தூய்மை!

நாளும் நாளும் குளிக்கிறோம்;
நாளும் நாளும் அழுக்கெலாம்
மேலும் மேலும் சேர்ந்ததே!
மீண்டும் மீண்டும் குளிக்கிறோம்!

உடலில் சேரும் அழுக்குப் போல்
உணவில் சேரும் அழுக்கெலாம்
குடலில் சேர, மருந்தினைக்
குடித்து நீக்கி விடுகிறோம்!

இவ்வா றாகத் தூய்மையாய்
இருத்தல் வேண்டும் என்றுமே!
அவ்வா றாக நெஞ்சிலும்
அழுக்கைப் போக்கல் நல்லதே!

பொய்யும், திருட்டும், ஒருவன்மேல்
பொறாமை கொள்ளும் அழுக்கெலாம்
வைத்தி ருக்கும் உள்ளத்தை
வந்து சேரும் தீமையே!

-1969

## 25 அறிவும் பயனும்!

இரும்புத் துண்டு கிடந்தது;
　　எடுத்து வீசி எறிந்தனர்!
கருமான் ஒருவன் கண்டனன்;
　　காய்ச்சிக் கத்தி செய்தனன்!

எலும்புத் துண்டு கிடந்தது;
　　எடுத் தெறிந்து சென்றனர்!
எலும்புக் காரன் கண்டனன்;
　　எடுத்துப் பிடிகள் செய்தனன்!

தகரம் ஒன்று கிடந்தது;
　　தூக்கி வீசி எறிந்தனர்!
தகரக் காரன் கண்டனன்;
　　தகரக் குவளை செய்தனன்!

துரும்பும் நமக்குப் பயன்படும்!
　　தோன்றும் பொருள்கள் யாவுமே,
அறிவுள் ளார்க்குப் பயன்படும்!
　　அறிவில் லார்க்குப் பயனில்லை!

-1969

## 26 பூனை!

*மியாவ் மியாவ் பூனை*
*மீசைக்காரப் பூனை!*

*கொட்டுக் காலுப் பூனை*
*கொள்ளிக் கண்ணுப் பூனை!*

*எட்டித்தாவி விரைவிலே*
*எலிபிடிக்கும் பூனை!*

*பண்டம் உருட்டும் பூனை!*
*பாலைக் குடிக்கும் பூனை!*

*உண்டு விட்டு அடுப்பிலே*
*உறக்கம் கொள்ளும் பூனை!*

*மியாவ் மியாவ் பூனை*
*மீசைக்காரப் பூனை!*

-1969

## 27 மின்சாரம்!

*விசையைத் தட்டி விட்டதும்*
*விளக்குப் பற்றிக் கொள்ளுமாம்!*
*விசையைத் திருப்பி வைத்ததும்*
*வாய்திறந்து பேசுமாம்!*

*விசையை முடுக்கி விட்டதும்*
*விசிறி நன்கு சுழலுமாம்!*
*விசையைக் காதில் வைத்ததும்*
*விளம்பும் பேச்சுக் கேட்குமாம்!*

*கம்பிக் குள்ளே செல்லுமாம்!*
*கையில் தொட்டால் கொல்லுமாம்!*
*தம்பி! அதுபேர் ‘மின்சாரம்’*
*தண்ணீர் தந்த விசையாகும்!*

-1969

## 28 மழையே ஓடி வா!

பிழைக்கும் உயிர்கள் மகிழவும்,
பூண்டு புற்கள் துளிர்க்கவும்,
அழைக்கின் றேனே உன்னையே
அருள் மழையே ஓடி வா!

வறண்ட ஏரி ஆறெல்லாம்
வழிய, வானி லிருந்துகீழ்
இறங்கி வந்து தேங்கிட
இன்ப மழையே ஓடி வா!

பயிர் விளைந்து குவியவும்,
பாரில் ஒழுங்கு நிலைக்கவும்,
உயிர்கள் தோன்றி வாழவும்
உதவும் மழையே ஓடி வா!

மழையே மழையே ஓடி வா!
மக்கள் இன்பம் நாடி வா!
உழைக்கும் உழவர்க் குதவ வா!
உலகம் செழிக்க ஓடி வா!

-1969

## 29 குடையும் செருப்பும்!

குடையும் செருப்பும் பேசின - பல
குறைகள் சொல்லி ஏசின.
நடையில் நடந்த நாடகம்! - இதை
நாமெல் லாரும் பாடுவோம்!

குடை : செத்த மாட்டின் உறுப்பே - தோல்
செருப்பே! உன்மேல் வெறுப்பே!

செருப்பு : முகத்தைப் பார்த்தால் கறுப்பே! - உடல்
முழுதும் கம்பி விரிப்பே!

குடை : காலில் கிடக்கும் எருமை! - உன்
கதையில் என்ன பெருமை?

செருப்பு : நெருப்பின் மீது நடப்பேன் - குத்தும்
நெருஞ்சி முள்ளில் படுப்பேன்!

குடை : நிழலை என்றும் கொடுப்பேன் - வந்து
நனைக்கும் மழையைத் தடுப்பேன்!

செருப்பு : காற்றால் உனக்கு நடுக்கம் - நல்ல
கடும் இருட்டில் ஒடுக்கம்!

குடை : நீரைக் கண்டு நெருங்கி - நீ
நனைவாய் உடலும் சுருங்கி!

செருப்பு : இரவும் பகலும் நண்பன் - யார்க்கும்
என்னால் இல்லை துன்பம்!

குடை : கையில் பிடித்து மதிப்பார் - உன்னைக்
காலில் போட்டு மிதிப்பார்!

செருப்பு : உனையும் நானே சுமப்பேன் - இதை
உணர்ந்து கொள்ளு வாயே!

குடை : உனக்கும் நிழலைக் கொடுப்பேன் - இதை
உணர்ந்து கொள்வாய் நீயும்!

செருப்பு : மேலே நின்று காப்பாய் - கீழ்
மண்ணில் தங்கிக் காப்பேன்;

குடை : நமக்குள் எதற்குப் பகையே - இனி
நண்ப ராகிப் போவோம்!

-1969

## 30 முயற்சி!

சிலந்தி வலையைப் பாருங்கள்!
சின்னஞ் சிறிய பூச்சியே!
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே!

தேனீக் கூட்டைப் பாருங்கள்!
திறமை யோடு ஒற்றுமை
பேணி, வீட்டைக் கட்டுமே!
பெரிய முயற்சி வேண்டுமே!

எறும்புப் புற்றைப் பாருங்கள்!
எள்ளைப் போன்ற எறும்புகள்
அருமை யான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன!

குருவிக் கூட்டைப் பாருங்கள்!
குடுக்கை போன்று பின்னியே,
விரைவில் கட்டி முடிக்குமே!
வேண்டும் முயற்சி என்றுமே!

-1969

## 31 மாட்டு வண்டி!

கட்டுச் சோற்றைக் கட்டினார்;
காளை மாட்டைப் பூட்டினார்;
எட்டுக் கற்கள் போகவே,
ஏழு மணியை ஓட்டினார்!

ஒற்றை மாட்டு வண்டியாம்!
ஊர்ந்து போகும் வண்டியாம்!
நத்தை போல மெல்லமாய்,
நகர்ந்து போகும் வண்டியாம்!

தாத்தா ஏறிப் போனதாம்;
'தடக்குப் புடக்கு' வண்டியாம்!
கூத்துப் பார்க்கப் போகவே
குடும்பம் போன வண்டியாம்!

கற்கள் நிறைந்த தடத்திலும்,
காட்டுப் பாதை, மணலிலும்,
முட்கள் சேர்ந்த வழியிலும்
முனைந்து போகும் வண்டியாம்!

அரிசி, உப்பு, மூட்டைகள்,
அடுக்குச் சட்டி, பானைகள்
உரசிக் கொண்டு இராப்பகல்
ஊர்ந்து போகும் வண்டியாம்!

இரும்புப் பட்டை சுற்றிய
இரண்டு பெரிய சக்கரம்!
பிரம்பு, மூங்கில் பின்னிய
பெரிய கூடு மேற்புறம்!

மொட்டை யான வண்டியாம்!
முடுக்க மான எருதுகள்!
கட்டை தூக்கிப் போய்வரும்!
கரும்புக் கட்டும் மேல்வரும்!

*வைக்கோல் போரும் ஏற்றிடும்!*
*வண்டல் மணலும் நிரப்பிடும்!*
*கைக்கோல் ஒன்று வேண்டுமே;*
*காளை தம்மை விரட்டவே!*

**-1969**

## 32 விளையாட்டு!

*பந்தைத் தூக்கிப் போடு!*
*பசிக்கப் பசிக்க ஆடு!*

*மூச்சைப் பிடித்துப் பழகு!*
*முகத்தில் தோன்றும் அழகு!*

*நீளம் உயரம் தாண்டு!*
*நீ வளர்வாய் நீண்டு!*

*நாளும் நீரில் நீந்து!*
*நல்ல மார்பை ஏந்து!*

*முன்னும் பின்னும் வளை!*
*முகத்தில் மிளிரும் களை!*

*மாலை வெய்யில் குளி!*
*மடிமை என்றும் ஒழி!*

**-1969**

## 33 புகைவண்டி விளையாட்டு!

புகையில் லாமல் கரியில் லாமல்
போகுது வண்டி குப் குப் குப்!
வகைவகை யான வண்டித் தொடர்கள்
வருமாம் பின்னே குப் குப் குப்!

கடைசிப் பெட்டி சின்னப் பெட்டி!
காலில் சிலம்பின் ஒலிகேட்கும்!
அட - அட - முன்னால் இழுபொறி ஒன்று
அந்தப் பிள்ளை மான் கன்று!

குச்சியில் கட்டிய செங்கொடி காட்டக்
குலுங்கி நின்றது தொடர்வண்டி.
பச்சைக் கொடியைக் காட்டினான் ஒருவன்!
பாம்பாய் நகர்ந்தது புகைவண்டி!

உரத்த குரலில் ஊதல் செய்தான்,
ஓங்கி வளர்ந்த ஒரு பையன்!
மரத்தைச் சுற்றிப் போனது வண்டி;
மணல் வெளி எங்கும் சுற்றிடுமாம்!

இடையில் இடையில் நின்றது வண்டி;
ஏறி இறங்கினர் பல பேர்கள்!
நடைதான்! இரும்புச் சக்கரம் இல்லை!
தண்ட வாளம் நடைபாதை!

கால்கள் வலித்தன; உடல்கள் சோர்ந்தன;
களைத்துப் போனது புகைவண்டி!
வாலைப் போலும் நீண்டிணைந் திருந்த
வண்டிகள் கழன்றன ஒவ்வொன்றாய்!

வெட்ட வெளியில் மாலைப் பொழுதில்
விளையா டுவமே புகைவண்டி!
கொட்டும் மழையில் கொளுத்தும் வெயிலில்
குப் குப் வண்டி செல்லாதே!

-1969

## 34 தூங்காயோ பாப்பா!

அழாதே பாப்பா அழாதே!
அம்மா வருவாள் அழாதே!
எழாமல் தூங்காய் கண்மணியே!
இனிக்கும் கன்னம் உண் கனியே!

இமைகள் மூடித் தூங்காயோ?
என்றும் நற்பேர் வாங்காயோ?
அமைதி யாகக் கண்ணயராய்
அழகுத் தமிழின் பெண்ணரசி!

தாலே லாலோ லாலேலோ
தனியாய்க் கறந்த 'பசு'ப்பாலோ?
சேலோ? விழியோ? குளிர் பூவோ?
சிறுமான் கன்றே! உறங்காயோ?

கனியோ கதுப்போ உன்கன்னம்?
கற்பனைக் கனவோ உன்எண்ணம்?
பனிதோய் தாமரை இதழோ - உன்
பவளச் செவ்வாய்? தேன்கிண்ணம்!

நெற்றித் துண்டோ? பிறைநுதலோ?
நெடுங்கூர் மூக்கோ? கிளியலகோ?
சுற்றிச் சுழலும் விழி, வண்டோ?
'சூரிய 'முகமோ? பூச்செண்டோ?

கத்தரிப் பிஞ்சோ? மணிக்கையோ?
கருணைக் கிழங்கோ? குதிகாலோ?
முத்தமிழ்த் தேனோ? முரல்யாழோ?
மூவேந் தர்தம் குலக்கொடியோ?

சந்தனப் பலகை உன்னுடலோ?
சங்கொளிர் அழகோ? மென்கழுத்தோ?
செந்தமிழ் இசையோ உன்மழலை?
சிறுமயில் குஞ்சே! உறங்காயோ?

மாதுளம் பூவோ? கொப்பூழோ?
மழைவான் வில்லோ? ஒளியுடலோ?
தீதிலா நெஞ்சின் பெருநினைவோ?
தென்றற் காற்றே! துயிலாயோ?

-1969

## 35 அப்பா!

கையிலே ஒரு குடை!
காலில் செருப்பு நடை!
மெய்யில் வெள்ளை உடை!
மெதுவாய்ப் போவார் கடை!

'அப்பா' அதற்கு விடை;
அம்மா சொல்வாள் தடை!
தப்பாமல் ஓர் வடை
தருவாள் முதுகில்; துடை;

பாடஞ் சொல்லச் செய்வார்!
படிக்கா விட்டால் வைவார்!
ஆடல் பாடல் சொல்வார்!
அன்பைக் காட்டி வெல்வார்!

வேண்டும் பொருளைச் சேர்ப்பார்!
வீட்டை என்றும் காப்பார்!
நீண்ட மீசைக் காரர்!
நம்மேல் ஆசைக் காரர்!

-1969

## 36 ஆசை!

பாப்பா வுக்குப் பால் குடிக்கக்
கொள்ளை ஆசை! - எங்கள்
பாட்டிக் கென்றும் கதை சொல்லக்
கொள்ளை ஆசை!

அம்மா வுக்குப் புடவை மேலே
கொள்ளை ஆசை! - எங்கள்
அப்பா வுக்கு மீசை மேலே
கொள்ளை ஆசை!

தாத்தா வுக்குப் பேரன் மேலே
கொள்ளை ஆசை! - இந்தத்
தங்கைக் கென்றும் பாட்டுப் பாடக்
கொள்ளை ஆசை!

- 1969

## 37 பெட்டைக் கோழி!

முட்டைக்குக் கால் முளைத்ததைப் போல
மொட்டு மொட்டான குஞ்சுகள்! - அவை
பெட்டைக் கோழியின் பின்னால் சுற்றும்
பிரியாக் கோழிப் பிஞ்சுகள்!

உழுந்தைப் போலும் கண்கள்! கோதுமை
உமியைப் போலும் மூக்கு! - பூங்
கொழுந்துக் கால்கள்! குடுகுடு ஓட்டம்!
கொட்டைப் பாக்குத் தலைகள்!

வெள்ளை கறுப்பு சிவப்பு மஞ்சள்
வேறு வேறான வண்ணம்! - ஐயோ
கொள்ளை அழகு! இலவம் பஞ்சின்
குளிர்மை தோய்ந்த உடல்கள்!

பெட்டை சீய்ப்பது போலச் சீய்க்கும்!
பேசிக் கொண்டே தின்னும்! - கோழி
கட்டைக் குரலைக் கேட்டதும் ஓடும்;
கதவின் மூலையில் பதுங்கும்!

-1969

## 38 பாப்பா படி!

பாப்பா பாப்பா படி!
பாட்டும் கதையும் படி!

அம்மா சுட்டாள் தோசை!
அதன்மேல் இல்லை ஆசை!

பாட்டும் கதையும் வேண்டும்!
படிப்பே அறிவைத் தூண்டும்!

விளக்கே இருளைப் போக்கும்!
வெளிச்சம் எங்கும் சேர்க்கும்!

படிப்பே மடமை ஓட்டும்!
பரந்த அறிவைக் கூட்டும்!

பாப்பா பாப்பா படி!
பணிவும் அன்பும் படி!

-1970

## 39 யானை!

ஓடிவாடா! ஓடிவாடா!
யானை பார்க்கலாம்!
ஆடிவரும் அசைந்து வரும்
அழகைப் பார்க்கலாம்!

தம்பி வாடா! நம்மைப் பார்த்துத்
தலையை ஆட்டுமாம்!
தும்பிக் கையைத் தலைக்கு மேலே
தூக்கிக் காட்டுமாம்!

கரும்பு தந்தால் வாங்கிக் கொள்ளக்
கையை நீட்டுமாம்!
குறும்பு செய்தால் கூச்சல் போட்டு
நம்மை ஓட்டுமாம்!

-1970

## 40 விளையாட்டுப் பயிற்சி!

ஒன்று இரண்டு சொல்லுங்கள்!
ஓடி வந்து நில்லுங்கள்!

மூன்று நான்கு எண்ணுங்கள்!
முதுகை ஒட்டப் பண்ணுங்கள்!

ஐந்து ஆறு கூறுங்கள்!
அரசக் குதிரை ஏறுங்கள்!

எழு எட்டுக் கொட்டுங்கள்!
எல்லாம் கையைத் தட்டுங்கள்!

ஒன்பது பத்துச் சொல்லுங்கள்!
உடலை நிமிர்த்தி நில்லுங்கள்!

கைகளை மேலே தூக்குங்கள்!
கால்களை அகற்றி வையுங்கள்!

பக்கவாட்டில் சாயுங்கள்!
பாதந் தொட்டுக் குனியுங்கள்!

முன்னும் பின்னும் சாயுங்கள்!
முதுகுப் பக்கம் வளையுங்கள்!

மூச்சை இழுத்து வாங்குங்கள்!
முப்பது வரையில் அடக்குங்கள்!

அடக்கிய மூச்சை அகற்றுங்கள்!
அகன்ற மார்பைச் சுருக்குங்கள்!

கழுத்துப் பயிற்சி செய்யுங்கள்!
கால்களை மாற்றிக் குதியுங்கள்!

விளையாட் டெல்லாம் முடிந்ததும்
வீட்டை நோக்கிச் செல்லுங்கள்!

-1970

## 41 பட்டினம்!

நீள மான வீதிகள்;
நெருக்க மான வீடுகள்;
வானை எட்டும் கட்டடம்;
வனப்பு மிகுந்த பட்டினம்!

பத்துப் பேருக் கோர் அறை!
பத்துக் குடிகள் ஒருமனை!
பத்து வீட்டுக் கொருமரம்!
பத்து வீதிக் கொருகுழாய்!

தொத்து நோய்கள் எளிதிலே
தொத்திக் கொள்ளும் பட்டினம்!
கற்றுக் கொள்ளப் பள்ளிகள்
கணக்கி லாத பட்டினம்!

போக்கு வரத்து வண்டிகள்,
புகைகள், தூசு, தும்புகள்,
ஈக்கள், கொசுக்கள் யாவுமே
எங்கும் நிறைந்த பட்டினம்!

கூட்டம் நிரம்பி வழிந்திடும்;
கொள்ளை கொலைகள் மிகுந்திடும்;
ஆட்டம் கூத்து இராப்பகல்!
ஆர வாரப் பட்டினம்!

-1970

## 42 குருவி!

குருவி! குருவி! அருகில்வா!
குறுநெய் தருவேன் வாங்கிப்போ!
நெல்லைப் போன்ற உன்மூக்கும்,
நெல்லிக் காய்போல் உன்தலையும்,
கொய்யாப் பிஞ்சைப் போல் உடலும்,
குழந்தை இடத்தில் காட்டவா!

சுறு சுறுப்புப் பிள்ளைநீ!
சோம்பல் என்றும் இல்லையே!
பறந்து பறந்து செல்லுவாய்!
பாட்டு ஒன்று சொல்லுவாய்!

-1970

## 43 கடல்!

தம்பி, தம்பி கடலைப் பார்!
துள்ளிக் குதிக்கும் அழகைப் பார்!

வெள்ளைக் குதிரை போலவே
விழுந்து புரளும் அழகைப் பார்!

நீலப் பாயின் மேலேறி
நீட்டிப் படுக்கும் அலையைப் பார்!

கோலக் கடலின் மடிமீதில்
குதித்து விழுகும் அலையைப் பார்!

நீர்க்குள் புரண்டே களைத்துப் போய்
நிலத்தைத் தாவும் அலையைப் பார்!

கரையின் மடியில் புரள்வதைப் பார்!
கடலுள் மீண்டும் உருள்வதைப் பார்!

தம்பி, தம்பி கடலைப்பார்!
துள்ளிக் குதிக்கும் அழகைப்பார்!

-1970

## 44 நல்ல பழக்கங்கள்!

வெளியில் விற்கும் பண்டங்களை
நல்ல பாப்பா - நீ
விரும்பித் தின்னல் கேடு செய்யும்,
நல்ல பாப்பா!

அழுகிப் போன காய் கனிகள்
நல்ல பாப்பா - நீ
அருந்துவதால் வருந்திடுவாய்
நல்ல பாப்பா!

வளர்ந்து வரும் உகிர்களையே
நல்ல பாப்பா - நீ
வாயிலிட்டுக் கடித்திடாதே
நல்ல பாப்பா!

களைந்த வற்றை நீக்கி விடு,
நல்ல பாப்பா - நாளும்
கழுவி அதைத் தூய்மை செய்வாய்,
நல்ல பாப்பா!

நோய் வருமுன் காத்திடலே
நல்ல பாப்பா! - தீய
நோய் தடுக்கும் நல்லமுறை
நல்ல பாப்பா!

பாய்ந்து வரும் நீரை, முன்பே
நல்ல பாப்பா! - கரை
போட்டுத் தடுத்து விடு
நல்ல பாப்பா!

பசிக்கு முன்னே புசித்து விடல்
நல்ல பாப்பா! - நல்ல
பாலெனினும் நஞ்சே ஆகும்
நல்ல பாப்பா!

புசிக்கை யிலும் அளவு வேண்டும்;
நல்ல பாப்பா! - இதைப்
போற்றி நடப்பாய் என்றும்
நல்ல பாப்பா!

-1970

## 45 இழுவை வண்டி!

கொள்ளைத் தின்னும் குதிரை - வண்டி
இழுக்கும் போது- தம்பி
கொடுமையன்றோ இழுவை வண்டி
நினைக்கும் போது!

புல்லைத் தின்னும் எருது - வண்டி
இழுக்கும் போது - தம்பி
புன்மை யன்றோ இழுவை வண்டி
நினைக்கும் போது!

எந்தி ரத்தால் ஓடும் - வண்டி
இருக்கும் போது - தம்பி
இழுத்துப் போக மாந்தனை நாம்
ஏவ லாகுமோ?

உயர்ந்த தடா உலகம் - என்றே
ஓங்கிப் பேசுவாய்! - தம்பி
ஒருவன் இழுக்க உயர ஏறி
ஓட ஏசுவாய்!

மக்கள் தம்மை மாடு - குதிரை
என நினை யாதே! - தம்பி
மழையில் வெயிலில் அவரை வாட்டி
மனம் இழியாதே!

தக்க வற்றைச் செய்வதுதான்
தனிச் சிறப்பாகும் - தம்பி
தகாத வற்றைத் தவிர்ப்பதுவே
தமிழ்ச் சிறப்பாகும்!

-1971

## 46 ஒலிகள்!

‘க, கா’ என்றே காகம் கரையும்!
‘கி, கீ’ என்றே கிளிகள் சொல்லும்!
‘கு, கூ’ என்றே குயில்கள் கூவும்!
‘கெ, கே’ என்றே கோழிகள் கேவும்!
‘கொ, கோ’ என்றே சேவல் கூவும்!
‘கை, கௌக்’ என்னும் வானங் கோழி’

-1972

## 47 அணிபொருள்!

மண்ணில் விளைவது தங்கம்!
மங்கை வளையல் தங்கம்!

கடலில் விளைவது முத்து!
கண்ணகி மாலை முத்து!

நிலத்தில் கிடைப்பது வெள்ளி!
நிலாவின் காப்பும் வெள்ளி!

கடலில் இருப்பது பவளம்!
கயல்விழி கழுத்தில் பவளம்!

கரியில் முதிர்வது வயிரம்!
கனிமொழி கம்மல் வயிரம்!

-1972

## 48 எலிகள்!

குடியிருக்கும் வீட்டை, எலிகள்
குடைந்து வளையைக் கட்டுமாம்!
அடியி லிருக்கும் கல்லும் மண்ணும்
அள்ளி மேலே கொட்டுமாம்!

திருட்டுத் தனமாய் இரவில் வந்து
தின்பண் டத்தை உருட்டுமாம்!
உருட்டி வைத்த அப்ப ளத்தை
உதறி மண்ணில் புரட்டுமாம்!

வெண்ணெய், பருப்பு, வெல்லம், புளியை
வேறு வேறாய் மாற்றுமாம்!
எண்ணெய்க் குப்பியை இழுத்துத் தள்ளி,
எங்கும் வழிய ஊற்றுமாம்!

சீயற் காயைக் கடித்துக் குதறிச்
சீரகத்தை இறைக்குமாம்!
காய வைத்த வற்றல், வடகக்
கணக்கைக் கொஞ்சம் குறைக்குமாம்!

தேங்காய்க் கீற்றைத் தேடிப் பிடித்துத்
தின்று துணுக்கைச் சிதறுமாம்!
பாங்காய் வைத்த புதிய துணியைப்
பார்த்துக் கடித்துக் குதறுமாம்!

சீப்பின் பல்லை வளைத்துக் கொறித்துச்
சிவப்புச் சாந்தைக் குழப்புமாம்!
பாப்பா வின்மேல் இரவில் விழுந்து
பதறி யடித்தே எழுப்புமாம்!

சவர்க்கா ரத்தைக் கடித்துத் தின்னும்!
சுவடிக் கட்டை உண்ணுமாம்!
சுவர்க்கு மேலும் கதவின் மேலும்
சுட்டி நடனம் பண்ணுமாம்!

விட்ட செருப்பைத் தொட்டுக் கொண்டு
வெளியிற் போக எண்ணினால்,
பட்டை பிய்ந்து தொங்கும்; எலியின்
பற்கள் தெரியும்; எண்ணலாம்!

குஞ்சு பொறிக்கும்; குடும்பம் பெருக்கும்!
கூத்தும் பாட்டும் இரவுதான்!
மிஞ்ச விட்டால் எலிகள் தொல்லை
மேலும் மேலும் வரவுதான்!

-1973

## 49 நிலா!

பொட்டு நிலா! பொட்டு நிலா!
போவ தெங்கே? சொல்வாய்!
வட்ட நிலா! வட்ட நிலா!
வருவேன் கொஞ்சம் நிற்பாய்!

துணையில் லாமல் விண்மீன் காட்டில்
தனியாய்ப் போவது எங்கே?
அணையில் லாதவானக் கடலில்
அலைந்து போகும் சங்கே!

பள்ளிக் கூடம் போகின் றாயோ?
பையை எங்கே காணோம்?
வெள்ளிக் குடமே! மிதந்து செல்வாய்!
விரைவேன், துணையாய் நானும்!

-1973

## 50 ஆவே! ஆவே!

ஆவே! ஆவே! ஆவின்பால்
அருந்தக் கொடுப்பாய்; தருவேன், புல்!
தாவும் கன்றுக் குட்டிக்குத்
தந்தே மிகுந்ததைத் தருவாயே!

பசும்புல் வெளியில் மேய்ப்பேனே!
பால்போல் கழுநீர் வைப்பேனே!
கொசு, ஈ மொய்க்கா வகையாகக்
கொட்டிலைத் தூய்மை செய்வேனே!

உடலைத் தடவிக் கொடுப்பேனே!
உண்ணிகள் கிள்ளி எடுப்பேனே!
கடலைப் பிண்ணாக் கிடுவேனே!
கயிற்றைத் தளர்த்தி விடுவேனே!

இரைந்து கூவி அழைப்பாய், நீ!
என்னை எழுப்பி விடுவாய், நீ!
பரந்த வாயில் தெளிப்பதற்குப்
பச்சைச் சாணம் இடுவாய், நீ!

அம்மா தந்த தின்பண்டம்,
அனைத்தும் கன்றுக் குட்டிக்கே!
அம்மா பெற்ற குழந்தைகளை
அன்பாய் வளர்க்கும் தாயே, நீ!

-1973

## 51 அம்மா! பிடித்துக்கொள்!

அம்மா! என்னைப்
பிடித்துக் கொள்!
அழகாய் நடப்பேன்
பிடித்துக் கொள்!
சும்மா திரும்பிப்
பார்க்காதே!
சுட்டு விரலை
மடக்காதே!

விரலைப் பிடித்தே
நடந்திடு வேன்!
விரைவாய்க் காலை
வைத்திடுவேன்!
குரலை மட்டும்
தாழ்த்தாதே!
குடுகுடு வென்றே
வருவேன், நான்!

மண்ணில் நடந்தும்
நான்வரு வேன்!
மாடிப் படியும்
ஏறிடுவேன்!
கண்ணில் எனக்கும்
ஒளியுண்டு!
காலில் எனக்கும்
வலிவுண்டு!

கையை வீசி
நடந்திடுவேன்!
கடைக்குக் கூடப்
போய் வருவேன்!
பையைத் தோளில்
மாட்டி விடு!
பழங்கள் மட்டும்
தந்து விடு!

-1974

## 52 குயிலே கூவாயோ?

குயிலே குயிலே கூவாயோ?
கூகூ வென்றே கூவாயோ?
பயிலும் இசைக்கே
பழங்கள் தருவேன்;
பைந்தமிழ் மணக்கக் கூவாயோ?

கருமைக் குயிலே கூவாயோ?
காதுகள் குளிரக் கூவாயோ?
அருமை இசைக்கே
அப்பம் தருவேன்;
அருந்தமிழ் வாழக் கூவாயோ?

சின்னக் குயிலே கூவாயோ?
செவிகள் குளிரக் கூவாயோ?
பன்னும் இசைக்கே
பாலடை தருவேன்;
பழந்தமிழ் சிறக்கக் கூவாயோ

சோலைக் குயிலே கூவாயோ?
சோர்வும் விலகக் கூவாயோ?
காலை இசைக்கே
கனிச்சுளை தருவேன்;
கன்னித் தமிழிசை கூவாயோ?

தனிமைக் குயிலே கூவாயோ?
தாளம் பயிலக் கூவாயோ?
இனிமை இசைக்கே
இளமுகை தருவேன்;
இன்றமிழ் வழங்கக் கூவாயோ?

பாடற் குயிலே கூவாயோ?
பண்கள் சிறக்கக் கூவாயோ?
நாடும் இசைக்கே
நளிதயிர் தருவேன்;
நற்றமிழ் மிளிரக் கூவாயோ?

-1975

## 53 பந்தாடு!

பச்சைக் கிளியே!
பாடுங் குயிலே!
பந்தை எடுத்தாடு! - என்
அச்சுப் படிவே!
அசையும் விளக்கே!
அடித்துப் பிடித்தாடு!

செவந்திப் பூவே!
செந்தா மரையே!
செவ்வடி சிவப்பேற - என்
குவளை விழியே!
கோவைப் பழமே!
குதித்துக் குதித்தாடு!

மல்லிகை மொக்கே!
மடமான் கன்றே!
மணிக்கை அடித்தாடு! - என்
முல்லைச் சரமே!
முத்துச் சிரிப்பே!
முன்பின் வளைந்தாடு!

பாலொளி நிலவே!
பன்னிற மயிலே!
பந்துடன் நீயாடு! - என்
வாலைத் திருவே!
வாடா மலரே!
வானில் எறிந்தாடு!

-1977

## 54 உடல் நலமே உள்ள நலம்!

அண்ணன் தாண்டு கின்றான்!
அழகாய்த் தாண்டு கின்றான்!
திண்ணென் றாம் உடலும்!
திரளும் தோளும் காலும்!

ஓடித் தாண்டு கின்றான்;
உயரத் தாண்டுகின்றான்;
நாடி நரம்பும் தசையும்
நன்றாய் வலிவாய் வளரும்!

உடலம் நன்றாய் இருந்தால்
உளமும் நன்றாய்த் திகழும்!
கெடல்செய் நோய்கள் அணுகா;
கீழ்மை நினைவுகள் தோன்றா!

பயிற்சிகள் உடலைக் காக்கும்;
பண்புகள் உளத்தை ஊக்கும்!
அயர்ச்சிகள் வாழ்வைக் கெடுக்கா!
அனைத்தும் நலமே சேர்க்கும்!

-1978

## 55 அழகு காட்டு பாப்பா!

அழகு காட்டு பாப்பா - அப்பா
அழகைக் காட்டு பாப்பா!
பழகு மழலைச் சொல்லில் - அவரைப்
பழித்துக் காட்டு பாப்பா!

உதட்டைப் பிதுக்கிக் காட்டி - இரண்டு
விழியை உருட்டி நோக்கி,
அதட்டி உரக்கப் பேசி - அவர்க்கு
அச்சங் காட்டு பாப்பா!

விரலை நீட்டிக் காட்டு; - தமிழ்
வீரப் பெண்ணைப் போல!
குரலை உயர்த்தி மிரட்டு! - ஒரு
கோணை காட்டு பாப்பா!

அப்பா நடையைப் போல - கையை
ஆட்டி நடந்து காட்டு!
உப்பு மூட்டை சுமப்பார் - அம்மா
உன்னை வாங்கிக் கொள்வார்!

-1978

56

## அம்முமா கண்ணாடி! அம்முப்பா பொத்தகம்!

அம்மும்மா கண்ணாடி!
அம்முப்பா பொத்தகம்!
எம்மாம் பெரியவள்
ஆகிவிட்டேன்!
இங்கே பாருடா செம்மல்! - அடி
அங்கே பாரடி கயல்!

ஆசிரியை நானாவேன்!
அனைவருமே கேளுங்கள்!
காசு ஒன்றும்
தரவேண்டாம்!
கருத்தாய்க் கேளடா செம்மல்! - இங்கே
காதைத் திருப்படி கயல்!

நாற்காலிமேல் அமருவேன்!
மொட்டானில் கால் நீட்டுவேன்!
நேராய்ப் பார்த்தால்
வெட்கம் வரும்!
நிமிர்ந்து கேளடா செம்மல்! - இதை
நீயும் கேளடி கயல்!

-1978

## 57 கண்ணாம் பூச்சி பாட்டு!

அங்கயற் கண்ணி வந்தாளாம்;
அப்பா துண்டைக் கண்டாளாம்!
இடுப்பு நிறையக் கொசுவம் வச்சே
எடுத்துக் கட்டிக் கொண்டாளாம்!

பட்டுப் பூச்சி, சேலை கட்டிப்
பார்த்துப் பார்த்துச் சிரிக்குதாம்!
சிட்டுக்குருவி, கொண்டை போட்டுச்
சிரித்துச் சிரித்து மகிழுதாம்!

எல்லோரும் வாருங்க!
இந்தப் பொண்ணைப் பாருங்க!
பல்லோரம் தெரிகின்ற
பழச்சிரிப்பைக் காணுங்க!

எங்க பொண்ணு அரசி;
எந்த அரசன் வருவான்?
சிங்கப்பூரு போயி வந்த
சிற்றரசன் வருவான்!

வரட்டும்; வரட்டும்!
வட்ட வட்டப் பொன்னைத்
தரட்டும் தரட்டும்
தாவிப் பிடிக்கட்டும்!

கண்ணாம் கண்ணாம் பூச்சி!
காட்டு மரப் பூச்சி!
பொண்ணுக் கேத்த மாப்பிளையைப்
போய்ப் பிடிச்சுக் கூட்டிவா!

-1979

## 58 கண்கட்டு ஆட்டம்!

பையன் : கண்ணைக் கண்ணைக் கட்டி வா!
காரிருளில் நடந்து வா!
மண்ணை விண்ணை அளித்து வா!
மாப்பிள்ளையைத் தேடி வா!

பெண் : எங்கள் வீட்டுப் பெண்ணாம்;
இழந்து விட்டாள் கண்ணாம்!
திங்கள் முகம் மூடி;
தேடி இங்கே வாடி!

பையன் : பிள்ளை நல்ல பிள்ளை!
பிள்ளை அழகு கொள்ளை!
பள்ளி செல்லும் பருவத்திலே
பார்வை இரண்டும் நொள்ளை!

பெண் : வாடி இங்கே வாடி,
வண்ணத் தமிழ் பாடி!
ஓடித் தூணைத் தொட்டாயோ?
ஓ! ஓ! என்றே விட்டாயோ?

பையன் : மின்னல் கொடி ஆடுமாம்!
மேலும் கீழும் தேடுமாம்!
பின்னால் உள்ளேன் பிடித்துக்கொள்!
பேசா தென்னைக் கட்டிக்கொள்!

பெண் : கையைக் கையை நீட்டாதே!
கட்டை யவிழ்த்துப் பார்க்காதே!
பையப் பைய நடந்து வா!
பள்ளம் உள்ளது விலகி வா!

பையன் : கப்பல் போல அசைந்து வா!
காற்றுக் கடலில் நீத்தி வா!
அப்பன் பெயரைச் சொல்லி வா!
அரும்புப் பல்லைக் காட்டி வா!

பெண் : பின்னால் இருப்பவன் கன்னல்.
பேகன் பாரடி முன்னால்!
உன்னால் தொடவும் முடியாது;
உனக்கே இருளும் விடியாது!

எல்லாரும் : பொய்யாய்த் தூக்கம் போடாதே!
பொழுது விடிந்திடும் வாடாதே!
ஐயோ! கோதை அகப்பட்டாள்!
அவிழ்த்துக் கட்டுங்கள் கண்கட்டை!

-1980

## 59 நாய்க்குட்டி!

நாய்க்குட்டி நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி!
தாய்க்கு நல்ல நாய்க்குட்டி!
தவறு செய்யா நாய்க்குட்டி!

எங்களோடு விளையாடும்;
இனிமையாகப் பழகிடும்!
அங்கும் மிங்கும் ஓடிடும்;
அழகு மிகுந்த நாய்க்குட்டி!

மொசுமொசுவென் றுடலிலே
முடிகள் தோய்ந்த நாய்க்குட்டி
கிசுகிசுக்கும் காதிலே!
கீழும் மேலும் பாய்ந்திடும்!

பாப்பா வோடு பழகிடும்!
பந்து போட்டால் பிடித்திடும்!
காப்பாய் எங்கட் கிருந்திடும்!
காதுநீண்ட நாய்க்குட்டி!

-1980

## 60 சிரிப்பாய் இருக்குதடி!

**எடுப்பு**

*சிரிப்பாய் இருக்குதடி! - என்*
*சின்னப்பெண் செய்கின்ற*
*சுட்டித்தனம் - எண்ணச்*
*சிரிப்பாய் இருக்குதடி!*

**தொடுப்பு**

நெருப்படி வேலையில்
இருக்கையில் அவள் - ஒரு
நிமையமும் அமையாமல்
எமையிடர் செய்வது (சிரிப்பாய்)

**முடிப்பு**

கிடைக்கின்ற பொருள்களோ எறிபந்து நிலைதான்!
கிழிபடும் பொத்தகத் தாள்களோ கொலைதான்!
உடைக்கின்ற பொம்மைகள் கிளுகிளுப் பைகள்
ஒவ்வொன்றாய்த் தீர்ந்தாலும் ஓயாது கைகள்! (சிரிப்பாய்)

எழுந்ததும் சிணுங்குவாள்! பாலுக்கோ அழுவாள்!
இரண்டுவாய் குடித்ததும் எழுந்தோடி விழுவாள்!
கொழுந்துடல் பசுவெண்ணெய்! கொஞ்சினால் மிஞ்சும்!
கோவைவாய் விழிவண்டு இருள்கண்டால் அஞ்சும்!
(சிரிப்பாய்)

முகமாவைப் பூசினால், விழிக்குமை யிட்டால்
முன்னுற்ற முடிநீவிக் கரும்பொட்டு வைத்தால்
நகையாடும் மலர்முகம்! நொடியினில் மீண்டும்
நலிந்திடும் சிதைந்திடும்; நகைத்திடத் தூண்டும்! (சிரிப்பாய்)

மூத்தவன் '**தமிழ் அரிமா**' மிக அமைதி!
முதலவள் **குழலியோ** முகங்கோணும் சிணுங்கி!
ஆத்தாடி! கடைக்குட்டி மிகப்படு சுட்டி!
ஆனாலும் அவள்தானென் கற்கண்டுக் கட்டி! (சிரிப்பாய்)

-1980

## 61 அவள் இசை அமுது!

அவள் 'இசை அமுது'!
அகவை மூன்றரை!
துவளா நெஞ்சினள்!
துடிதுடிப் புள்ளவன்!

அழகிய ஓவியம்,
அவள் திருவுருவம்!
பழகிய செந்தமிழ்
பயிலும் நாவினள்!

கருவண்டு விழிகள்
கவின்நிலா ஒளிமுகம்!
திருவளர் செல்வி
தீதின்றி வாழ்கவே!

-1980

## 62 ஊஞ்சல் ஆடு!

ஆடு ஊஞ்சல் ஆடு!
அன்னைத் தமிழ் பாடு!
பாடுபவள்; காதிரண்டில்
பச்சை மணித் தோடு!

காற்றில் முடி ஆடி,
கைவளைகள் பாட,
ஆற்றில் அலை பாய்வதுபோல்
அங்கு மிங்கும் ஓட,
ஆடு ஊஞ்சல் ஆடு!

-1981

## 63 அண்ணன் பட்டம் விடுகின்றான்!

அண்ணன் பட்டம் விடுகின்றான்!
அழகுப் பட்டம் விடுகின்றான்!
வண்ணத் தாளில் செய்ததுவாம்!
வாலை யாட்டிப் பறப்பதுவாம்!

விண்ணின் மேலே பாய்வதுவாம்!
'விர் விர்' என்றே ஒலிப்பதுவாம்!
கண்ணில் கூசும் ஒளிப்புடனே
காற்றில் மிதந்து திரிவதுவாம்!

நூலைச் சுண்டி இழுக்கின்றான்!
நொடித்து நொடித்து வலிக்கின்றான்!
வாலைச் சுழற்றித் தலையாட்டி
வண்ணப் பட்டம் பறந்திடுமாம்!

இங்கும் அங்கும் ஓடுகிறான்!
இணைக்கும் நூலை விடுகின்றான்!
தங்கும், இறங்கும், தலையாட்டும்,
தரையில் பாயும் மேலேறும்!

முன்னும் பின்னும் நகர்கின்றான்!
முகத்தில் மகிழ்ச்சி கொள்கின்றான்!
என்னின் வேலை நூலையெல்லாம்
எடுத்தே சுற்றிக் கொடுப்பதுதான்!

-1981

## 64

## மிதமாய் உண்பது மிகுதியும் இன்பமே!

பயற்றங்காய்க் குழம்பு
பசிக்குமேல் உண்டேன்!
வயிற்றை வலித்தது
வாந்தியும் வந்தது!

மருத்துவர் வந்தார்
மருந்துகள் தந்தார்
பருத்த வயிறும்
பள்ளமாய்க் கழிந்தது!

அதிகமாய் உண்பதே
அனைவர்க்குந் துன்பம்!
மிதமாய் உண்பது
மிகுதியும் இன்பமே!

-1982

# பறவைளுக்கு

## 65 மலர்த் தோட்டம்!

தோட்டம் நல்ல தோட்டம்!
துலங்கு மலர்த் தோட்டம்!
கூட்டம் ஈக்கள் கூட்டம்!
கொம்புத் தேனீக் கூட்டம்!

வெள்ளை வண்ணப் பூக்கள்!
வான நீலப் பூக்கள்!
கொள்ளை வண்ணப் பூக்கள்!
கொத்தாய் மலர்ந்த பூக்கள்!

தோட்டம் எங்கும் சுற்றி,
தேன் குடித்த பின்னை,
கூட்டில் வந்து சேர்க்கும்,
கொம்புத் தேனீக் கூட்டம்!

பூக்கள் தேனைத் தேக்கும்!
புதிய நூலைப் போல!
ஈக்கள் மொய்த்துச் சேர்க்கும்;
பள்ளிப் பிள்ளை போல!

தோட்டம் நல்ல தோட்டம்;
துலங்கும் பள்ளிக் கூடம்!
கூட்டம் ஈக்கள் கூட்டம்;
கற்கும் சிறுவர் கூட்டம்! —1960

## 66 'பிச்சை'க்காரன்

நொண்டிப் ***பிச்சைக்*** காரன்;
நொள்ளைப் ***பிச்சைக்*** காரன்;
கண்டால் அன்பைக் காட்டு!
காசும் சோறும் போட்டு!

கேட்டு வாங்கித் தின்பான்;
***பிச்சைக்*** காரன் என்போன்!
பூட்டு உடைத்துத் தின்பான்;
திருட்டுப் ***பிச்சைக்*** காரன்!

'இல்லை' என்று கேட்டால்
'இந்தா' என்று போடு!
பல்லைக் காட்டிக் கேட்டாலே!
'போ போ' என்று ஓட்டாதே! **-1960**

## 67 காக்கும்!

உடலைக் காக்கும் சட்டை!
மரத்தைக் காக்கும் பட்டை!
குடிலைக் காக்கும் பூட்டு!
குரலைக் காக்கும் பாட்டு!

நாட்டைக் காக்கும் படை!
நடையைக் காக்கும் குடை!
ஆட்டைக் காக்கும் பட்டி!
அணியைக் காக்கும் பெட்டி!

உறவைக் காக்கும் அன்பு!
ஊரைக் காக்கும் பண்பு!
இரவில் காக்கும் நாயே!
என்னைக் காக்கும் தாயே! **-1960**

## 68 நல்ல செயலும் தீய செயலும்!

*கத்தி ஒன்றின் உதவியால்*
*காய் கறிகள் அறியலாம்!*
*கத்தி ஒன்றின் உதவியால்*
*எழுது கோலைச் சீவலாம்!*
*கத்தி ஒன்றின் உதவியால்*
*கனியை அறுத்துத் தின்னலாம்!*
*கத்தி ஒன்றின் உதவியால்*
*கொல்லும் பாம்பைக் கொல்லலாம்!*
*கத்தி ஒன்றின் உதவியால்*
*'கழுத்தை' வெட்டி மாள்வதா?*

-1960

## 69 உடல் தூய்மை!

*பல்லைத் தூய்மை செய்வதால்*
*பாதி நோயை நீக்கலாம்!*
*சொல்லைத் தூய்மை செய்வதால்*
*சண்டை வந்தால் போக்கலாம்!*

*மூக்கைத் தூய்மை செய்வதால்*
*மூச்சை நன்கு வாங்கலாம்!*
*நாக்கைத் தூய்மை செய்வதால்*
*நச்சு நோய்கள் நீங்கலாம்!*

*கண்ணைத் தூய்மை செய்வதால்*
*குருட்டுத் தனத்தை ஓட்டலாம்!*
*உன்னைத் தூய்மை செய்வதால்*
*ஒழுங்கை எங்கும் காட்டலாம்!*

-1960

## 70 ஆலமரம்!

ஆல மரத்தின் நிழலில் வந்தே
ஆயிரம் பேர் தங்கலாம்!
ஆல மரத்தின் விதையைப் பார்க்க
கடுகைப் பெரிய தென்னலாம்!

மிகவும் சிறிய விதையில் தோன்றும்
மிகவும் பெரிய மரத்தைப் போல்
மிகவும் சிறியர் ..... செயலை
மாநிலத்தில் ..... லாம்!

விரித்த கிளைகள் தாங்கி நிற்கும்
விழுதைப் போலும் உதவியைப்
புரிந்து வாழ வேண்டும் நம்மைப்
பெற்றவர்க்கு என்றுமே! -1960

## 71 செய்யலாமா?

பூக் கொடுக்கும் செடியினை
பிடுங்கி எறித லாகுமோ?
காய் கொடுக்கும் கொடியினைக்
கிள்ளிப் போட லாகுமோ?

வளர்ந்து பருக்கும் மரத்தினை
வெட்டிச் சாய்க்க லாகுமோ?
குளிர்ந்த ஊற்று நீரிலே
கல்லை அடைக்க லாகுமோ?

பால் கொடுக்கும் ஆட்டையும்
பலன் கொடுக்கும் பசுவையும்
வா ளெடுத்து வெட்டியே
வறுத்துத் தின்ன லாகுமோ? -1960

## 72 இல்லை!

சிற்றெறும்புக் கூட்டத் திலே
 சோம்பல் இல்லை இல்லையே!
கற்றுத் தேர்ந்த கூட்டத்திலே
 கயவர் இல்லை இல்லையே!

குலைக்கும் நாய்கள் என்றுமே
 கடிப்ப தில்லை இல்லையே!
அலைகள் என்றும் கடலிலே
 அடங்கல் இல்லை இல்லையே!

பொய்யை வைக்கும் நெஞ்சுள்ளார்
 பிழைப்ப தில்லை இல்லையே!
மெய்யைச் சொல்லும் நல்லவர்
 மாள்வ தில்லை! இல்லையே! -1960

## 73 உண்டு!

வேல் பிடிக்கும் கையிலே
 வீரம் உண்டு போரிட!
நூல் பிடிக்கும் கையினால்
 நன்மை உண்டு அறியவே!

மலர் இருக்கும் இடத்திலே
 மணமும் உண்டு நுகரவே!
உலர்ந்திருக்கும் காய்களில்
 ஓசை உண்டு கேட்கவே!

அன்பு இருக்கும் ஒருவர்க்கே
 அறிவு உண்டு தெரியவே!
தென்பு இருக்கும் உடலிலே
 திறமை உண்டு செய்யவே! -1960

## 74 அழிவு!

புழுவைக் கொல்ல பூச்சி!
பூச்சியைக் கொல்ல பாச்சை!
பாச்சையைக் கொல்ல பல்லி!
பல்லியைக் கொல்ல தேரை!
தேரையைக் கொல்ல பாம்பு!
பாம்பைக் கொல்ல கீரி!
கீரியைக் கொல்ல நரி!
நரியைக் கொல்ல ஓநாய்!
ஓநாயைக் கொல்ல கரடி!
கரடியைக் கொல்ல புலி!
புலியைக் கொல்ல யானை!
யானையைக் கொல்ல அரிமா!
அரியைக் கொல்ல மாந்தன்
மாந்தனைக் கொல்லும் எல்லாம்!

-1960

## 75 காரணம்!

தவ்வித் தவ்விப் போவதால்
'தவளை' என்று சொல்கிறோம்!
வெளவிக் கிளையைப் பிடித்தலால்
'வெளவால்' என்று சொல்கிறோம்!

குதித்துக் குதித்துச் செல்வதால்
'குதிரை' என்று சொல்கிறோம்!
தத்திச் செல்லும் கிளியினைத்
'தத்தை' என்று அழைக்கிறோம்!

வெட்ட வெட்ட வாழ்வதால்
'வாழை' என்று கூறுவோம்!
கட்டிச் செய்த சுவர்களைக்
'கட்டடம்' என்றியம் பிடுவோம்!

-1960

## 76 இரக்கம்!

காலொடிந்த காக்கையைக்
கண்டால் மற்ற காக்கைகள்
..........................................................
அதனைக் கொன்று போட்டிடும்!

நோய் பிடித்த நாயினை
நோக்கி மற்ற நாய்களோ,
பாய்ந்து வந்து துரத்துமே!
பாதி உயிரைக் கொல்லுமே!

விலங்கு, பறவை இனத்திலே
வெறுப்பும் பகையும் நிலவும்!
விலங்கு போல மாந்தரும்
வெறுப்புக் கொள்ளல் நல்லதோ?

இரக்கம் வேண்டும்! மற்றவர்க்(கு)
இரங்க வேண்டும்! அஃதிலார்
அரக்கர் ஆவர்! அன்புளார்
*அகிலம்* வணங்கத் தக்கவர்!

-1960

## 77 குயிலும் பாம்பும்!

பாடிக் கொண்டே எங்கெங்கும்
பறந்து போகும் கருங்குயிலோ
கூடு கட்டி முட்டையிட
கொஞ்சமும் அறியா தென்றைக்கும்!

காக்கைக் கூட்டைக் கண்டதிலே
குயிலும் முட்டை வைத்துவிடும்
ஊக்கத் தோடதை அடைகாக்கும்
உண்மை உணரா காக்கையுமே!

புற்றைச் செய்து குடிவாழ
பாம்போ அறியா ததனாலே
சிற்றெ றும்பு முயற்சியினால்
செய்த புற்றில் குடியேறும்!

குயிலும் பாம்பும் போலிருக்கக்
கூடா தென்றும் சிறுவர்களே!
பயிலும் கல்வி முயற்சியினால்
பலரும் போற்ற வாழ்ந்திடுவீர்!

-1960

## 78 காந்தித் தாத்தா!

ஊருக் கெல்லாம் ஒரே தாத்தா
காந்தித் தாத்தா - இந்த
உலகுக் கெல்லாம் நல்லத் தாத்தா
காந்தித் தாத்தா!

பாருக்குள்ளே ஒற்றுமைக்குப்
பாடுகள் பட்டே உள்ளப்
பாங்கினை உயர்த்திய
காந்தித் தாத்தா!

இன்பத் துள்ளும் எளிய முறை
வாழ்வைக் கொண்டவர்! - மற்ற
யாவரினும் உயர்ந்த வகை
இன்பம் கண்டவர்!

துன்பத் துள்ளும் கலங்கிடாமல்
துணிந்து நின்றவர் - பல
தீமை செய்யும் மாந்தர்களை
அன்பில் வென்றவர்!

-1960

## 79 சிற்றெறும்பு!

பையன் : சிற்றெறும்பே! சிற்றெறும்பே!
செல்வதெங்கே சொல்லுவாய்?

சிற்றெறும்பு : புற்றை நோக்கிப் போகிறோம்;
பொழுது வீழப் போவதால்!

பையன் : பற்றிக்கொண்டு செல்வதென்ன?
பாடுபட்ட செல்வமோ?

சிற்றெறும்பு : குற்றி வைத்த அரிசி மாவின்
குறுநொய் கொஞ்சம் கிடைத்ததே!

பையன் : கூட்டி வைக்கும் செல்வம் யாவும்
கொட்டிக் காப்ப தெங்கேயோ?

சிற்றெறும்பு : வீட்டை யொன்று கட்டி வைத்து
வேலி போட்ட புற்றிலே!

பையன் : மேட்டின் மீது புற்றை நீங்கள்
கட்டி வைத்த தென்னவோ?

சிற்றெறும்பு : ஈட்டி வைத்த கூலம் யாவும்
ஈரஞ் சேரா திருக்கவே!

பையன் : ஒன்று பின்னை ஒன்றாய்ப் போகும்
ஒழுக்கம் கற்ற தெங்ஙனம்?

சிற்றெறும்பு : நன்று கேட்டாய்! எவ்வுயிர்க்கும்
நல்லொழுங்கே வாழ்க்கையாம்!

பையன் : குன்று போலக் குவித்த செல்வம்
கூடி யுண்ப தெங்ஙனம்?

சிற்றெறும்பு : ஒன்று வாழ்வு! யாவும் வாழ
உண்டு செல்வம் உலகிலே!

பையன் : சேர்த்து யாவும் கூடியுண்டால்,
செல்வம் தீர்ந்து போகுமே?

சிற்றெறும்பு : தீர்ந்து போகில் யாவுங் கூடி
ஊர்ந்து சென்று சேர்ப்பமே!

பையன் : கூர்ந்து சொல்வாய்! உங்கள் வாழ்வில்
குத்து சண்டை தோன்றுமோ?

சிற்றெறும்பு : நேர்ந்ததில்லை! நேர்வதில்லை!!
நாங்கள் எல்லாம் ஓரினம்!

-1960

## 80 இருசொல் அழகு!

*பசுவை வீட்டில் வளர்ப்ப தேன்?*
*பச்சைக் குழந்தை அழுவ தேன்?*

*(பாலுக்கு)*

........................................................
........................................................

*(பாட்டால்)*

*மாட்டுக் கஞ்சி நிற்ப தேன்?*
*மடை மேடை யாவ தேன்?*

*(கொம்பால்)*

*மாடிக் கேற முடிவ தேன்?*
*மல்லி அளந்து காட்ட வேன்?*

*(படியிருப்பதால்)*

*நாடு **நரகம்** ஆவ தேன்?*
*நல்ல பேச்சு சிதைவ தேன்?*

*(குடியால்)*

*இரவில் வெளிச்சம் தெரிவ தேன்?*
*எல்லாம் உணர்ந்து சொல்வ தேன்?*

*(மதியால்)*

*ஏரி நிறைந்து வழிவ தேன்?*
*எருது பூட்டி உழுவ தேன்?*

*(மழை பெய்ததால்)*

-1960

## 81 நல்லதும் தீயதும்!

கனி இருக்கக் காயினைக்
கவர்ந்து தின்னல் நல்லதோ!
இனி திருக்கத் தீயதை
ஏற்றுச் செய்ய நினைப்பதோ?

நிழல் இருக்க வெயிலிலே
நடந்து செல்லு வார்களோ?
குழல் இருக்க இடியினைக்
கேட்டு மகிழு வார்களோ?

வீடிருக்க வெளியிலே
விழுந்து தூங்கப் போவரோ?
நாடிருக்கக் காட்டினை
நாடி வாழல் நல்லதோ?

கிளி இருக்கக் காக்கையைக்
கூட்டில் வைத்துக் காப்பரோ
உளி இருக்க விரலினால்
உருவம் செதுக்க முனைவரோ?

அன்பிருக்க நெஞ்சிலே
அழுக்கு எண்ணம் வைப்பரோ?
பண்பிருக்க விலங்குபோல்
பழகி வாழல் நல்லதோ?

உண்மை இருக்கப் பொய்யினை
உரைத்து வாழல் ஏற்றதோ?
நன்மை இருக்கத் தீமையை
நாடிச் செய்தல் நல்லதோ?

-1960

82

## எழு தம்பி!

தூங்கி இருந்தது போதும்; எழு; தமிழ்த்
தம்பியே! - இளந்
தும்பியே! - எழில்
துள்ளும் தமிழ் நலம் காத்திடு; என் சொல்லை
நம்பியே - பொற்
கம்பியே!

ஓங்கி உயர்ந்த நற் பல்கலை சேர்ந்ததுன்
நாட்டடா - தேன்
கூட்டடா! - உல
கோர்க்கெலாம் நல்லறம் தந்ததென்(று) அப்புகழ்
பாட்டடா! - அதைத்
தேட்டடா!

ஊனில் உயிரினில் தோய்வுறச் செந்தமிழ்ப்
பாடியே! - வானம்
பாடியே! - இங்கு
உள்ள பழந்தமிழ் நூல்களை நீ, படி
நாடியே - இணை
கூடியே!

வீணர் செயலிலும் பேச்சிலும் வாழ்வினை
வீழ்த்தினாய்; - தமை
வாழ்த்தினாய்! - ஒளி
விளக்க மிலாத இருள் வழியில் உனை
ஆழ்த்தினாய் - உயிர்
தாழ்த்தினாய்!

எல்லை யிலாத அறிவியல் விண்ணியல்
கூறுவாய் - அதில்
தேறுவாய் - எனில்
எத்தும் புரட்டும் இழிசெயல் யாவிலும்
ஊறுவாய் - உளம்
நாறுவாய்!

தொல்லை தரும்இழி சாதிப் புகைச்சலை
மூட்டினார் - வாய்
நீட்டினார் - உன்
தொல்தமிழ் மக்களை வேற்றுமைத் தீயினில்
வாட்டினார் - துயர்
கூட்டினார்!

பள்ளிப் பறவையே! ஒன்றுனக் கோதுவேன்;
கேட்டிடு - உளம்
நாட்டிடு! - கொடும்
பல்வழி போகுநின் மக்களை ஒன்றெனக்
கூட்டிடு - வழி
காட்டிடு!

உள்ளத் துயர்வே உயர்வெனக் கூறுக
பிள்ளையே - தமிழ்க்
கிள்ளையே! - நெஞ்சில்
உண்மையும், வாழ்வில் ஒழுங்கும் இலார் கண்கள்
நொள்ளையே - காது
தொள்ளையே!

-1966

## 83 சினம்!

சினத்தைப் பழகாதே தம்பி - நீ
சிறிதே என் பேச்சை உன்காதால் கேள் தம்பி! (சினத்தை)

மனத்தில் சினத்தை எண்ணாதே - உன்
மாண்பினை எப்போதும் இழக்க வொண்ணாதே!(சினத்தை)

கண்ணைச் சிவந்திட வைக்கும் - உனைக்
கண்ணிமைப் பொழுதில் குலைந்திட வைக்கும்;
மண்ணை இறைத்திட வைக்கும் - பெரும்
மானத்தை நொடியினில் இழந்திட வைக்கும்! (சினத்தை)

உன்னை மறந்திடச் செய்யும் - முன்
உள்ளதைத் தூக்கி அடித்திடச் செய்யும்;
அன்னைக்கும் தீங்கினைப் பண்ணும் - முன்
ஆரெதிர் வந்தாலும் அறைந்திடப் பண்ணும்! (சினத்தை)

சோற்றைக் கவிழ்த்திடச் செய்யும் - உளச்
சோர்வை எப்போதும் விளைந்திடச் செய்யும்;
கூற்றை வணங்கிடச் செய்யும் - பெருங்
கொலையாவும் எளிதில் புரிந்திடச் செய்யும்! (சினத்தை)

கடமை துறந்திடச் செய்யும்! - தீய
கயமைக்கே உன்னை வணங்கிடச் செய்யும்;
மடமை மிகுந்திட வைக்கும் - உன்
மகிழ்ச்சியை எப்போதும் விரட்டி உதைக்கும்! (சினத்தை)

ஏறிய வெஞ்சினம் கொள்வோன் - வாழ்வில்
ஏறாது தன்நிலை குலைந்திட மாள்வான்;
ஆறிய உள்ளத்தால் காண்பாய் - உன்னை
ஆட்கொண்ட கடுஞ்சினம் செய்திட்ட தீங்கை! (சினத்தை)

-1966

## 84 தொழில் !

எத்தொழில் செய்யினும் மேன்மையென் றெண்ணு!
எவருன்னை வெறுத்தாலும் வருந்தாதே கண்ணு!
(எத்தொழில்)

புத்தெழில் [1]ஓவம் கற்றாலும் - [2]கற்
படிமத்தில் உன்மனம் ஈடுபட்டாலும்,
பித்தளை இரும்பினைக் கொண்டு - வேலை
புரிந்திட ஓராவல் உனக்கு வந்தாலும்
(எத்தொழில்)

தச்சர் பணி புரிந்தாலும் - கொல்லர்
தட்டாரைப் போல் தொழில் செய்ய வந்தாலும்,
அச்சுத் தொழிலைக் கற்றாலும் - மற்ற
ஆலைத் தொழில்களை நாளுஞ் செய்தாலும்
(எத்தொழில்)

வாணிகஞ் செய்ய வந்தாலும் - பல
வண்டிகள் ஏறி நீ ஓட்ட வந்தாலும்,
காணி நிலங்கள் உழுது - மாடு
காளைகளோடு நீ வேலை செய்தாலும்
(எத்தொழில்)

கடல்தனைத் தாண்ட வந்தாலும் - வான்
கப்பல் வழியாய்ப் பறக்க வந்தாலும்,
உடல் வருந்தி மலை யேறி - நீ
ஓயாது பணியாற்றும் நிலைக்கு வந்தாலும்
(எத்தொழில்)

உறுதியை உள்ளத்திற் கொள்ளு - அதற்
கொண்ணாத சோம்பலை உடனே நீ தள்ளு!
இறுதிவரை யுழைத்தாலும் - மன
இடர்ப்பாடு நீக்கி உழைத்தலே மேலாம்!
(எத்தொழில்)

-1967

(1. ஓவம் – ஓவியம், 2. கற்படிமம் – சிற்பம்)

## 85 பழகிக்கொள்!

விடியலில் எழநீ பழகிக் கொள்,
விளங்காப் பாடங் கற்றுக் கொள்,
மடியினை நீக்கப் பழகிக்கொள்,
மதித்து நடப்பதைக் கற்றுக்கொள்!

படித்ததை நினைக்கப் பழகிக்கொள்,
பணிவொடு பேசக் கற்றுக் கொள்!
துடித்தெதை யுஞ் செய ஒண்ணாதே!
துன்ப மிழைக்க எண்ணாதே!

பொய்சொல நெஞ்சில் நினையாதே;
பொறுமையை இழக்க விழையாதே!
ஐயம் வருங்கால் தீர்க்க முனை!
அதனை வளர்த்தல் தொல்லை வினை!

அன்னை, தந்தை, பெரியோர்கள்,
ஆரெவர் சொற்கும் கீழ்ப்படிய,
உன்னைப் பழக்கிக் கொண்டாலே,
உன்போற் சிறுவர் நடப்பாரே!

சினத்தை அடக்கப் பழகிக் கொள்,
சிரிப்பதை என்றும் மறவாதே!
பணத்தைப் பெரியதாய் எண்ணாமல்
பண்பினை எண்ணக் கற்றுக்கொள்!

அச்சம் உன்னை மாய்த்து விடும்,
அயலார் அஞ்சவும் செய்யாதே!
வஞ்சனை செய்ய எண்ணாதே;
வாயா டுதலை நினைக்காதே!

மற்றவர் தொழிலைப் பழிக்காதே!
மண்மேல் எவரும் ஓரினமே!
கற்றவர் பேச்சைக் கேட்க விழை!
கல்லார் பேச்சைத் தள்ள முனை!

பழகிக் கொள் நீ! பழகிக் கொள்,
பாட்டும் கூத்தும், ஓவியமும்!
பழகிக் கொள் நீ! பழகிக் கொள்!
படிக்கவும் ஆடவும் பழகிக் கொள்!

-1966

## 86 மலர்!

செடியில், கொடியில்
மரத்தில் பூப்பாய்
மலரே! மலரே! மலரே! - உன்
சிரிப்பில் உள்ளம்
மகிழா தவர்கள்
இலரே! இலரே! இலரே!

விடியற் காலை
வீதிகள் எங்கும்
மணமே! மணமே! மணமே! - நீ
வீசு கின்றாய்!
என்னே உன்றன்
குணமே! குணமே! குணமே!

புவியில் உன்னைப்!
போற்றி மகிழ்ந்தார்!
பூவே! பூவே! பூவே! - உன்னைப்
புலவர் யாரும்
பாடி மகிழ்ந்தார்
பாவே! பாவே! பாவே!

குவியல் குவிய
லாகப் பூத்தாய்,
கோடி! கோடி! கோடி! - உன்னைக்
குலவிக் கொஞ்சத்
தும்பிகள் வருமே
நாடி! நாடி! நாடி!

வெள்ளை, மஞ்சள்
நீலம், சிவப்பு
வண்ணம்! வண்ணம்! வண்ணம்! - உன்னை
விரும்பிச் சூடாப்
பெண்கள் இல்லை;
திண்ணம்! திண்ணம் திண்ணம்!

பிள்ளைகள் முதலாப்
பெரியோர் வரையில்
உன்னை, உன்னை, உன்னை - என்றும்
பேணி மகிழ்வார்!
பறிக்கச் செய்தாய்
என்னை! என்னை! என்னை!

1966

## 87

## சிட்டு!

மணியுடல் சிறிய சிட்டு!
மேலெலாம் மென்மைப் பட்டு!
துணிவுடன் விரிந்த வானில்
தொலைவெலாம் பறந்து செல்லும்!
பணிவுடன் அமரும்! நெஞ்சப்
பதட்டத்தில் உடல் நடுங்கும்!
அணிகுரல் முழக்கும்! கையை
ஆட்டிலும் பறந்து போகும்.

பெண்சிட்டு ஆணைக் கண்டு
பிணங்கிடும்! குலவும்! கூடும்!
பண்ணொடு பாடும்; ஆடும்!
பழகிடில் அச்சம் நீக்கும்!
பெண்ணொடே ஆணும் சேர்ந்து
பழந்தாள்கள் சருகு சேர்த்துப்
பண்ணிடும் கூடு! கூட்டுப்
பணியினால் அமைந்த வீடு!

கூட்டினுள் முட்டை வைத்தே
அடைகாக்கும் பெண்! மற் றொன் று
வீட்டினைக் காவல் செய்யும்!
விடியலில் பறந்து சென்றே,
ஈட்டிடும் உணவு! வீட்டை
இலக்கிடும் பெண்ணைக் காக்கும்!
ஏட்டினிற் படித்த தில்லை!
இயற்கையாம் வாழ்க்கை கண்டீர்!

குஞ்சுகள் தோன்ற, ஆணும்
குறுவுடல் தாயும் சேர்ந்து,
பஞ்சுடற் பிள்ளை கட்குப்
பணிசெய்யும்! உணவை ஊட்டும்!
அஞ்சிடும் குஞ்சு கட்கே,
ஆறுதல் கூறும்! நாளும்
கொஞ்சிடும்! இறக்கை வந்தால்
கூட்டைவிட் டேகும் குஞ்சே!

சிற்றுடல் சிட்டு, நல்ல
சுறுசுறுப் போடு வாழும்!
சுற்றிலும் வலிய புட்கள்
சூழ்ந்திட அஞ்சி வாழும்!
கற்றறி வறிந்த தில்லை!
என்னினும் கற்றார் போல,
ஒற்றுமை, முயற்சி, வாழ்க்கை,
ஒழுங்கெலாம் அதன்பால் உண்டே!

-1967

## 88 புகை வண்டி!

இரும்பு வண்டி ஒன்று வந்தே
எட்டுப் பெட்டியை இழுக்குதாம்!
கறுப்புப் புகையைக் கக்கிக் கொண்டு
காடும் மலையும் தாண்டுதாம்!

பச்சைக் கொடியைக் காட்ட, வண்டி
பறந்து கொண்டு செல்லுதாம்!
உச்சி கிழியக் கூவிக் கூவி
ஊரை நோக்கி ஓடுதாம்!

கையில் உள்ள சிவப்புக் கொடியைக்
கண்டால் அஞ்சி நிற்குதாம்!
மெய் குலுங்கக் கோடிப் பேரை
மேற்கும் கிழக்கும் சேர்க்குதாம்!

குன்றின் மேலே, காட்டுக் குள்ளே
குரல் கொடுத்துப் போகுதாம்!
தண்ணீர் குடித்துக், கரியைத் தின்று
தாவிக் குதித்துப் போகுதாம்!

-1967

## 89 உடலுறுப்புகளின் சண்டை!

கால்: "உடலைத் தூக்கி நிற்கின்றேன்!
ஓடி ஆடிச் செல்கின்றேன்!
நடைஇல் லாமல் உழைப்பேது?
நானே பெரியவன்" - என்றது கால்!

கை: "ஓடி ஆடிப் பயன் என்ன?
உழைப்பது நானே! என்றைக்கும்
பாடில்லாமல் வாழ்வேது?
பெரியவன் நானே!" - என்றது கை!

கண்: "உழைப்பது மட்டும் யாராலே?
ஒளியைப் பெறுவது யாராலே?
பிழைக்கும் உயிர்க்கே நானேதான்
பெரியவன் என்றே அறிவீரே!"

வாய்: "உள்ளம் நினைப்பதைச் சொல்கின்றேன்
உலகில் பேசி வெல்கின்றேன்!
மெல்லல், குடித்தல், செய்கின்றேன்;
மேலோன் நானே யாவர்க்கும்!"

மூக்கு: "பேச்சுப் பேசிப் பயன் என்ன?
பார்வை காட்டிப் பயன் என்ன?
மூச்சை இழுத்துத் தருவது யார்?
மூக்கே என்பதை உணர்வீரே!"

மூளை: "நல்ல மூச்சும், சுவைப் பேச்சும்,
நன்மை தீமை நோக்குவதும்,
நல்ல பிழைப்பும், நல் உழைப்பும்,
நானே அமைப்பேன் அறிவீரே!"

காலும், கையும், வாய், மூக்கும்,
கண்ணும், மூளையும் இவ்வாறாய்
மேலும் மேலும் பேசிடவே
மிகுவாய்க் களைப்பை அடைந்தனவே!

கால் கை தளர்ந்தது! வறண்டது வாய்!
கண் இருண்டது! உயிர் திணறியது!
மூளை கலங்கும் வகையாக
மூண்டது தீப்பசி வயிற்றுள்ளே!

பசியால் வயிறு பேசியது:
"பசி" எனக்கேட்டால் அன்போடு
"புசி" என் பானே பெரியவனாம்!
"போ" என் பானே சிறியவனாம்!

-1967

## 90 துன்பத்திற்குத் துவளாதே!

துன்பம் வரும்போழ்தில் - நீ
துவண்டு விடவேண்டா!
இன்பம் வரும் பின்னே - என
எண்ணியிரு தம்பி!

சூழ்ச்சி பிறர் செய்வார் - நீ
சோர்ந்து விடல் தீது!
தாழ்ச்சி வரும் முன்னே - நீ
தப்பி விடல் நன்று!

வாய்மைஉளம் கொண்டே - உன்
வாழ்வில் நலம் தேடு!
தூய்மைமனம் கொண்டோர் - ஒரு
தோல்வி பெறல் இல்லை!

செல்வ வளம் எல்லாம் - நிலை
தேய்ந்து விடல் நேரும்!
கல்வி வளம் என்றும் உனைக்
காத்து வரும் தம்பி!

-1968

## 91 தமிழ்க் கும்மி!

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி - இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி - நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்பி கொட்டுங்கடி!

வையம் பிறந்த முது மொழியாம், இங்கு
வாழ்பவர்க் கெல்லாம் அது விழியாம் - உயர்
மெய்யில் விளைந்த உயிர்க் கலையாம்; அருள்
மேன்மை பழுத்த பழக் குலையாம்!

ஊழி பலநூறு கண்டதுவாம், அறி
வூற்றெனும் நூல் பல கொண்டதுவாம் - பெரும்
ஆழிப் பெருக்கிற்கும் காலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!

பாண்டியன் வேல்கொண்டு காத்ததடி - உயர்
பாவியம் பற்பல பூத்ததடி, கடல்
தாண்டி மரக்கலம் ஏறி உலகெலாம்
தாவிப் பறந்தெழில் சேர்த்ததடி!

பாருக்கெல்லாம் அறம் சொன்னதடி - உயர்
பாவலர் பாச்சோறு தின்னதடி - உயிர்
வேருக்குள் நல்லறம் வார்த்ததடி; பல
வேந்தர்கள் தம் அவை பார்த்ததடி!

ஆன்ற மொழியில் தனித்ததுவாம் - உயர்
ஆங்கிலர்க்கும் நன்கினித்ததுவாம்! - மண்
தோன்றி வளர்ந்த உயிரினத்தின் வெற்றி
தோல்வியை எண்ணிக் கணித்ததுவாம்!

கழகம் வளர்த்தநற் செல்வியடி - தொல்
காப்பியர் ஊட்டிய கல்வியடி! - அறம்
பழகுசெந் நாப்புல வோர்பலர் பேணியே
பாங்குறக் காத்த புதல்வியடி!

வள்ளுவரின் அறப் பால்குடித்தாள் - ஒலி
 வார்க்கும் சிலம்பினைக் காலணிந்தாள் - எழில்
துள்ளுந் தமிழ்மணி மேகலையை மின்னல்
 தோன்றிடும் தன்னிடை நூலணிந்தாள்

மண்டலப் பேரர சாண்டவளாம் - இந்த
 மண்ணெலாந் தம்புகழ் நீண்டவளாம் - சுடர்க்
குண்டலச் செவியினள்! வளையொலி கையினள்!
 கூத்திசை நல்லயல் பூண்டவளாம்!

சொல்லுக்குச் சொல் வெல்லக் கட்டியடி, அதில்
 தோய்ந்திடும் நூல்கள்தேன் தொட்டியடி! - பொருள்
வெல்லப் பயின்றவர் தம்மினுக்கே - அதில்
 வீறும் அறிவு பொன் பெட்டியடி!

பொய்யகற்றும்; உள்ளப் பூட்டறுக்கும் - அன்பு
 பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் - உயிர்
மெய்புகட்டும்; அற மேன்மைகிட்டும்; இந்த
 மேதினி வாழ்வழி காட்டிருக்கும்!

கன்னியரே! கும்மி கொட்டுங்கடி - இது
 கன்னித் தமிழ் எனக் கொட்டுங்கடி! - இங்கு
முன்னர் பிறந்ததும் பின்னர் சிறப்பதும்
 முத்தமிழே என்று கொட்டுங்கடி!

சேயிழையீர்! கும்மி கொட்டுங்கடி - இது
 செந்தமிழே எனக் கொட்டுங்கடி - நறும்
பாயிழை யோடுஞ்சொல் பல்கோடி கொண்டது
 பைந்தமிழே எனக் கொட்டுங்கடி!

ஏந்திழையீர்! கும்மி கொட்டுங்கடி - என்றும்
 இருந்தமிழே எனக் கொட்டுங்கடி; - உல
கேந்துபண் பாட்டினை ஏற்பதும் சேர்ப்பதும்
 இளந்தமிழே என்று கொட்டுங்கடி!

கயல்விழியீர்! கும்மி கொட்டுங்கடி! - உயிர்
காந்தத் தமிழ் என்று கொட்டுங்கடி! - நெஞ்ச
மயலறுத் துலகம் மலர்த்துவ தெங்கள்
மணித்தமிழே என்று கொட்டுங்கடி!

தாழ்குழலீர்! கும்மி கொட்டுங்கடி - இது
தனித்தமிழே எனக் கொட்டுங்கடி! - மாந்த
வாழ்வழி முற்றும் வகைபடக் கூறுதல்
வளர்தமிழே எனக் கொட்டுங்கடி!

கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி, - தமிழ்க்
கோதையரே கும்மி கொட்டுங்கடி! - நிலம்
எட்டுத் திசையிலும் செந்தமிழின் சுடர்
ஏற்றிடவே கும்மி கொட்டுங்கடி!

-1968

## 92

## பள்ளிக்குத் தாழ்ப்பாள் உண்டு! கல்விக்குத் தாழ்ப்பாள் இல்லை!

*பள்ளிப் பிள்ளையே! பள்ளிப் பிள்ளையே!*
*பள்ளி திறந்தது; பள்ளிப் பிள்ளையே!*
*திறந்த பள்ளிக்குச் சிட்டுக் குருவிபோல்*
*பறந்து செல்லும் பள்ளிப் பிள்ளையே!*
*உனக்கொன்று சொல்வேன்; உற்றுக் கேட்பாய்!*

*உனக்கென விழிகள் உள்ளன; அவைமேல்*
*துருதுரு வென, இரண்டு இமைகள் உள்ளன.*
*விருப்ப மில்லாப் பொழுதில்உன் இமைகள்*
*விழிப்பல கணிகளை மூடிக் கொள் கின்றன!*
*காட்சி அறிவுக்குக் கதவிடு கின்றன!*
*ஆனால் உன்றன், மனமும் மூளையும்*
*சும்மா இருக்குமா சொல்லுக தம்பி!*

*இம்மா பெரிய உலக உருண்டையில்*
*எத்தனைப் பொருள்கள்! எத்தனை அறிவு!*
*எத்தனை மலைகள்! எத்தனைக் கடல்கள்!*
*தோற்றங்கள் எத்தனை! மாற்றங்கள் எத்தனை!*

*ஊற்றுகள், ஆறுகள், உழுதநன் னிலங்கள்,*
*நிலத்திணை வகைகள், பறவைகள், விலங்குகள்,*
*அலைந்து திரியும் மக்கள் கூட் டங்கள் -*
*அத்தனைப் பொருள்களும் அவற்றின் கதைகளும்*
*எத்தனைப் பெரிய அறிவுப் பொத்தகம்!*

*இயற்கை என்பதோ இணையிலாக் கல்வி நூல்!*
*உலகம் என்பதோ விரிந்த சுவடி!*

*உலகைச் சுற்றிலும் பெருவிரி வானம்!*
*விரிந்த வானில் எண்ணிலா விண்மீன்!*
*பரிதிகள், கோள்கள், பாழ்வெளி மண்டிலம்!*
*அடடா! தம்பி எங்கணும் அறிவே!*

*செயற்கைப் பொத்தகம் மூடிக்கிடக்கும்!*
*இயற்கைப் பொத்தகம் மூடுவ தில்லை!*
*செயற்கைப் பொத்தகம் நாம்எழு தியது!*

இயற்கைப் பொத்தகம் இறைவன் வரைந்தது!
இல்லத்து வாயிற்கு இடுகின்றோம் கதவு!
கல்வி வானிற்குக் கதவேது தம்பி?

அடித்துக் கொண்டே இருக்கும் காற்றுப் போல்
படித்துக் கொண்டே இருக்கும் உள்ளம்!
வெள்ளப் பெருக்குப் போல் அறிவுப் பெருக்கு!
உள்ளம் என்பதோ இமையிலா ஒளிவிழி!
மூடுதல் இல்லா உள்ளத்து விழிகள்
ஏடு ஏடாக இயற்கையைப் படிக்கும்
பள்ளிக் கூடம், இப் பரந்த உலகம்!
கல்வி என்பதோ மக்களின் வாழ்க்கை!
செயற்கைப் பள்ளிக்கு விடுமுறை உண்டு!
இயற்கைப் பள்ளிக்கு விடுமுறை இல்லை!

காலையும் மாலையும் கதிரவன் காணலாம்!
சோலையில் ஆற்றில் ஊர்ந்து திரியலாம்!
பட்டுப் பூச்சிபோல் மின்னிப் பறக்கலாம்!
சிட்டுக் குருவிபோல் வானை அளாவலாம்!
கடலுள் மூழ்கலாம்! மலைமேல் ஏறலாம்!
உடல் அயர்ந் தாலும் உளம் அய ராது!

படிப்பு; படிப்பு; அயர்விலாப் படிப்பு!
துடிக்கும் உலகத்திற்கு ஓய்வேது தம்பி!
விழிகளைத் திறந்துவை! செவிகளை நீட்டு!
வழியில் கிடைக்கும் அறிவெலாம் வாரிஉண்!
மனத்தை மூடாதே! அறிவெனும் சிறகால்
மனத்தைத் தூக்கி வானெலாம் திரிந்துவா!
நிலவுக்குப் போய்வா! விண்மீன்கள் எண்ணு!
உலகத் தரைமேல் உருண்டு புரண்டுவா!
வெண்முகில் படுக்கை எப்படித் தெரியுமா?
பஞ்சுப் படுக்கை தோற்றது போயேன்!

வெயிலில் காய்ந்த சருகென உலர்வாய்!
புயலில் மழையில் புழுதியாய் நனைவாய்!
அடடா தம்பி அயர்வில் லாத
இயற்கையின் படிப்பை என்னென்று சொல்வேன்?

பள்ளிக்குத் தாழ்ப்பாள் உண்டு!
கல்விக்குத் தாழ்ப்பாள் இல்லை! கண்மணியே!

-1968

## 93 தமிழும் ஆங்கிலமும் தவறாது கற்பாய்!

அருமைத் தம்பியே! அழகுத் தங்கையே!
பெருமைக் கல்வியைப் பிழையறக் கற்றுவா!

இமிழ்கடல் உலகில் இருக்கும் மொழிகளுள்
தமிழ்மொழி உனக்குத் தாய்மொழி அன்றோ?

இன்பத் தமிழே எல்லா மொழிக்கும்
முன்பு பிறந்த முதுமொழி யாகும்!
செம்மையும் நுண்மையும் செறிந்த மொழியிது!
நம்மையும் பிறரையும் நயந்த மொழியிது
பண்பும் பயனும் பயக்கும் மொழிதமிழ்!
இன்பமும் அறமும் ஈயும் மொழிதமிழ்!
நம்மின் உளத்தையும் நடப்பையும் வாழ்வையும்
செம்மைப் படுத்தும் சிறந்த மொழியிதே!
'ஒளிதரும் வாழ்க்கைக்கு உகந்த மொழி' - என
வெளிநாட் டறிஞரும் வியந்த மொழியிதே!

தமிழரின் பெருமை தமிழினால் வந்தது!
தமிழரின் சிறுமை தமிழ் கெட வந்தது!

ஆகவே தம்பி, அன்றன் றைக்கும்
அறிவும் உணர்வும் தமிழினால் அடைக!
நெறிகளும் முறைகளும் நிறைந்துள, தமிழில்!

தமிழ்மொழி அறிவைக் தவறாது பெறுக,நீ!
தமிழில் உள்ள நூல்களைக் கற்றுவா!
தமிழ்வர லாறும் தமிழரின் வாழ்வும்
கமழக் கமழக் கற்றுவா தம்பி!

ஆங்கில மொழியையும் அதனோடு கற்பாய்!
ஈங்கிவை இரண்டையும் இருவிழி எனநினை!
ஆங்கில மொழியினால் அறிவியல் தேறலாம்!
வீங்குநீர் உலகில் யாங்கணும் உலவலாம்!

ஆங்கிலம் நம்மின் அடிமையை மீட்டது!
தீங்குசெய் 'சாதி'யின் இழிவைத் தீய்த்தது!
உலக ஒற்றுமை உணர்வை வளர்த்தது!
கலக மாந்தரின் கயமையைப் புதைத்தது!

இலகு நூல்கள் பற்பல இயல்வது!
உலகத் தொடர்புக் கென்றும் உகந்தது!
அறிவை மதிப்பவர் அறிவு மொழி,அது!
அறிஞரை மதிக்கும் அறிஞர் மொழி,அது;
பாலில் கலந்த நஞ்சினைப் போலக்
காலப் போக்கில் தமிழில், தமிழரில்
கலந்து விட்ட கயமையை உணர்த்தி
நலந்தரும் வழியை நமக்கறி விப்பது!

எனவே, தம்பி இனிமைத் தமிழுடன்
ஆங்கில மொழியிலும் அறிவைப் பெறுக,நீ!
'அகம்' - தமிழ் மொழியெனில், ஆங்கிலம் 'புற'மாம்!

புகப்புக இன்பம் புகுத்தும் தமிழ்மொழி!
தொகத்தொக வாழ்வைத் துலக்கிடும் ஆங்கிலம்!
தகுமிவ் விரண்டையும் தவறாது கற்றுவா!

பன்மொழி யறிவதும் தவறிலை; எனினும்
இன்புறு வாழ்விற் கிருமொழி போதுமே!
கல்வி என்பது கருத்தை அறிவது;
பலவாம் மொழிகளைப் பயிலுதல் அன்று!

-1968

## 94 பள்ளித் தொடக்கப் பாட்டு!

கண்கள் விழித்தன; செவிகள் திறந்தன;
கருத்துகள் முளைத்தன உள்ளத்திலே!
பண்கள் பிறந்தன; பாக்கள் எழுந்தன;
பாய்ந்திடுவோம் கல்வி வெள்ளத்திலே!

இளம்புது நெஞ்சம்; இளம்புது மூளை;
இணைந்தன ஒன்றாய்க் கூடத்திலே!
வளம்பெறும் அறிவே வாழ்க்கையின் பூக்கள்!
வந்தமர் வீர் கல்வி ஓடத்திலே!

கைகள் புதியன; கால்கள் புதியன;
காண்பன முற்றும் விளைநிலங்கள்!
பைகள் முழுதும் புதுப்புது நூல்கள்!
பாய்வதால் நிரம்பும் உளக்குளங்கள்!

புத்தம் புதிய சிறுமலர் நெஞ்சம்!
புகுவிழா நடத்தும் அறிவுமனை!
தொத்திப் படரும் இளம்பசுங் கொடிகள்!
துருதுரு வென்னும் உணர்வுமுனை!

பெரியதோர் உலகம்! பெரிதகல் வானம்!
பேசிடப் பேசிடப் புதுப்பெருமை!
அரிதாய் முளைத்த மாந்தரின் முளைகள்!
அடடா! காண்போம் பெரும்புதுமை!

-1969

## 95 ஊனையும், உயிரையும் வளர்ப்பது கல்வியே!

வேனில் கழிந்தது; கார் தொடங் கிற்று!
வீணில் திரிந்த நாள்கள் கழிந்தன!
தொடங்கிற்று பள்ளி! துள்ளிச் சென்றாய்!
முடங்கிய கல்வியை முடுக்கி விட்டாய்!

உன்னுடன் பயின்ற சிறுவரில் ஒருசிலர்
முன்னைய வகுப்பிலே முடங்கியும் இருப்பார்!
பலர் உன் போலவே தேறியும் இருப்பார்!
தேறியோர் யாவரும் திறலோர் அல்லர்;
தோற்றார் யாவரும் அறிவிலார் அல்லர்;
வெற்றியும் தோல்வியும் விளைவைப் பொறுத்தது!

கதையறி வாயா? காணி நிலத்தில்
விதைத்த கை நிறைந்தது! விதையாக் கை வெறுங்கை!
கல்வி நிலத்தின் கதையிலும் முடிவதே!
சொல்வதைக் கேட்டவன் கேட்டதை எழுதினான்;
கேளாக் காதன் கேள்வியை விட்டான்.
விடியப் படித்தவன் வெற்றியைப் பெற்றான்;
விடிந்துந் தூங்கியோன் தேர்வினில் விழித்தான்.
போனவை எல்லாம் போகட்டும் தம்பி!
வென்றார் யாவரும் செருக்கவும் வேண்டா;
தோற்றார் யாவரும் துவளவும் வேண்டா!
துணிவு கொள்க தோற்றவர் யாவரும்!
இனிவரும் ஆண்டில் என்ன செய்வது?

புத்தம் புதிய பொத்தக வரிசை!
எத்தனை அறிவு! எத்துணை மகிழ்ச்சி!
பொத்தக முழுதும் தேன்துளி எழுத்துகள்!
முத்தெனக் கோத்த கருத்து மாலைகள்!
ஒவ்வொரு வரியும் ஒவ்வோர் அறிவு!
ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு தேன்குடம்!
ஒவ்வொரு நூலும் ஒவ்வோர் அறிஞர்!
எத்தனை அறிஞர்உன் பக்கலில் என்றுபார்!
அடடா! அவர்தரும் அறிவுக் கீடெது?

தொடக்கத் திருந்தே அவர்பின் தொடர்க!
கடக்க லாகாக் கல்விக் கடலைக்
கடப்பதும் எளிது; கற்றலும் எளிதே!
படிக்கப் படிக்கப் படிவதே படிப்பு!
குடிக்கக் குடிக்கத் தேனும் தெவிட்டும்!
ஆனால் கல்வியோ ஆவலைப் பெருக்கும்!
கற்றவர் என்றும் கற்கிலோம் என்பார்;
கல்லா தவரோ கற்றோம் என்பார்;
முற்றக் கற்றவர் எங்கணும் இல்லர்;
கல்லா மூடரோ எங்கணும் இருப்பர்!

கல்விப் பெருமை கழறொணாப் பெருமை!
செல்வப் பெருமை சிதடரும் பெறுவர்,

எனவே தம்பி, இன்றே தொடங்கு!
மனமொரு தும்பி! கல்வியோ மணமலர்!
தேனெனும் அறிவைத் திரட்டுக தம்பி!
ஊனையும் உயிரையும் வளர்ப்பது கல்வியே!

-1969

## 96 எச்சரிக்கையாயிரு தம்பி!

எவர் பேச்சைக் கேட்பது?
எவர் நூலைப் படிப்பது?
எச்சரிக்கை யாயிரு தம்பி! - குட்டிச்
சுவராக உனையாக்கும்
நூலுண்டு; பேச்சுண்டு;
தெளிய வேண்டும் நீ கண்டு!

கைக்குக் கிடைப்பன
எலாம்படிக் காதே!
காலத்தை வீணடிக்காதே! - தம்பி
பொய்க்கும் புரட்டுக்கும்
பளபளப் புண்டு; நீ
புரிய வேண்டும் அதைக்கண்டு!

பாலுக்கும் வெண்மை!
பழங்கள்ளும் வெண்மை!
பார்வையில் புரியாதோ உண்மை! - தம்பி
மேலுக்கு நல்லவரைப்
போன்றார் மிகவிருப்பார்!
மெச்சினால் கழுத்தையே அறுப்பார்!

இனிப்புள்ள சொற்களை
எவர்பேசி னாலும்
தனிப்புளு கென்றுநீ தள்ளு! - தம்பி
பனிக்கட்டி குளிர்ச்சியே!
பருகினால் மிகு சூடு!
பயன் என்ன என்பதையே தேடு!

நேருக்கு நேர் நின்று
சுடச்சுடச் சொல்லுஞ்சொல்
தேருக்கு அச்சாணி போல - வாழ்க்கைப்
போருக்குக் கேடயமாகும்!
புகழ்ச்சிக்கு மயங்காதே!
புரிந்துகொள்! நீ தயங்காதே!

கண்ணுக்குப் புறஞ்சொல்வான்
கழுத்துக்குக் கருக்கரிவாள்!
களையவேண்டும் அவன்நட்பு - துன்பப்
புண்ணுக்கு மருந்திடுவான்
பொய்மைக்கா விருந்திடுவான்?
புன்னகையால் பிறகு வருந்திடுவாய்!

ஏழ்மைக்குத் துணைநிற்பான்;
இழிவுக்குக் காப்பிடுவான்;
தாழ்ச்சியில் புறம்போகான் நண்பன் - அவன்
தள்ளினும் விலகாதே!
தவிர்ப்பினும் பிரியாதே!
எள்ளினும் இகழ்ந்துதிரியாதே!

-1969

97

## அறிவுப் புரட்சி!

பள்ளியிற் குறும்பு செய்யாதே - உளப்
பான்மையை எப்போதும் குறைக்க எண்ணாதே!
பிள்ளைக ளோடொரு பிள்ளை - பின்
பிழைகள் நீ செய்வதில் நேர்மையொன் றில்லை!

தாழ்வும் உயர்வும் எண்ணாதே! - கல்வி
தரும் உயர் வொன்றைவிட் டெதையும் எண்ணாதே!
ஆழி நடுவினைப் போலக் - கற்று
அமைதிகொள்! இரையாதே கரைநீரைப் போல!

கணக்காயர் சொல்லை மதிப்பாய் - அவர்
கட்டளை கேட்(டு) அதைப்போல நடப்பாய்!
குணக்குன் றெனப்புகழ் நீசேர்! - பெருங்
குறும்பன் எனும்பெயர், கீழ்மைக்குச் சரிநேர்!

மற்றவர் பொருளை வவ்வாதே - உனை
மாளவைத் தாலும் பொய் சொல்ல ஒவ்வாதே!
கற்றவர் முன்னில் பேசாதே! - எனில்
கல்லாதார் தமைவிட்டு விலகக் கூசாதே!

'சாதி'யொன் றில்லையென் றெண்ணு - அதைச்
'சாத்திரம்' சொன்னாலும் நம்பாதே கண்ணு!
வீதிகள் கோணைகள் ஆயின் - அங்கு
வாழ்பவர் யாவரும் மாந்தரே என்பாய்!

ஏழையர்க் கென்றும் இரங்கு - அவர்
ஏழ்மைக்குக் காரணம் செல்வர் செருக்கு!
பிழையன் றோஏற்றத் தாழ்வு - மாந்தப்
பிள்ளைகள் யாவர்க்கும் பொதுவன்றோ வாழ்வு!

உடுப்பதும் உண்பதும் கொண்டே - நல்
உயர்வென்றும் தாழ்வென்றும் கற்பித்தார் பண்டே!
கொடுப்பதல் லால்உயர் வில்லை - செல்வக்
கூறுகள் சிலருக்கே உரிமையென் றில்லை!

பொதுமை நினைவை வளர்ப்பாய் - அதைப்
பூவுல கெங்கணும் பரப்ப முனைவாய்!
புதுமை விளைவுகள் செய்வாய் - உள்ளப்
புரட்சிக்கு அறிவென்னும் நன்னீரைப் பெய்வாய்!

நீர்பொது; நிலம்பொது தம்பி! - இந்த
நெறிமுறை பிழைபடல் பெருந்தீது தம்பி!
பார்பொது; பயன்பொது தம்பி! - நலம்
பாடு படுவோர்க்கே உரியது தம்பி!

பழங்கதை பேசிடு வோர்கள் - குலப்
பகுப்புகள் தம்மைப் புகுத்திடு வோர்கள்
விழுங்கிடும் செல்வத் திருடர் - இன்ன
வீணர்எல் லாரையும் வீழ்த்துக தம்பி!

-1969

98

## முன்னேறு!

முன்னேறு முன்னேறு ஏறுமுன் னேறு!
முழுமூச்சி னோடிறுதி வரையில் முன் னேறு!
எந்நாளும் குறையாத தளராத ஊக்கம்,
ஏறுநடை கொண்டுமுன் னேறுமுன்னேறு!

பன்னூலைக் கற்றுமுன் னேறுமுன் னேறு!
பலதொழிலைக் கற்றுமுன் னேறுமுன் னேறு!
தன்னுணர்வு கொண்டுமுன் னேறுமுன் ஏறு;
தளராத உள்ளத்தி னோடுமுன் னேறு!

வருகின்ற எதிர்ப்புக்கஞ் சாதுமுன் னேறு!
வாய்மையினை உள்ளத்திற் கொண்டுமுன் னேறு!
பெறுகின்ற தோல்விக்கஞ் சாதுமுன் னேறு;
பேருயர்வை எண்ணிமுன் னேறுமுன் னேறு!

நடையில்முன் னேறு;முன் னேறுசெந் தமிழில்!
நட்பில்முன் னேறு;முன் னேறுதாய் அன்பில்;
கொடையில்முன் னேறுமுன் னேறுவிருந் தோம்பில்;
குறுகுமனப் பான்மைவிட் டேறுமுன் னேறு!
அறிவில்முன் னேறுநல் வினையில்முன் னேறு!
அழகில்முன் னேறுநற் கலையில்முன் னேறு;
பொறையில்முன் னேறு, கைத் தொழிலில்முன் னேறு!
போக்கில்முன் னேறு,நல் நோக்கில்முன் னேறு!

உண்மையைப் பற்றிமுன் னேறு;முன் னேறு!
உழைப்பினைக் கொண்டுமுன் னேறு;முன் னேறு!
பெண்மையைப் போற்றிமுன் னேறு;முன் னேறு!
பேய்மையை வீழ்த்திமுன் னேறு;முன் னேறு!

-1969

## 99 ஓய்வும் பயனும்!

ஓய்வாக இருக்கையில் தம்பி - நீ
ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோ டமைதி சேரும்! - நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு - நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும் - இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்!

கதைகளும் எழுதிப் பழகு - பூங்
காவினில் உலவி வருவாய்!
புதைந்திடும் அறிவு வளரும் - மனம்
புதுக்கிடும் வாழ்வு பெறுவாய்!

அறிவியல் ஆய்வு செய்வாய் - நீ
அன்றாடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு - உளச்
செழுமையும் வலிவும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய் - உடன்
மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் - வருந்
தீமையும் பொய்யும் களைவாய்!

-1969

## 100 மழை!

வானம் கருத்தது;
முகிலும் பொழிந்தது;
மழை! மழை! மழை!
மேனி நனைந்தது!
குளங்கள் நிறைந்தன!
மழை! மழை! மழை!

மின்னல் கீற்றுகள்!
இடிமுழக் கங்கள்!
மழை! மழை! மழை!
இன்னல் தீர்ந்தது!
எங்கும் குளிர்ந்தது!
மழை! மழை! மழை!

மப்பு! மந் தாரம்!
மஞ்சின் மூட்டம்!
மழை! மழை! மழை!
தொப்பரை யாய்உடை
முற்றும் நனைந்தது!
மழை! மழை! மழை!

உரித்த நுங்குபோல்
ஒளிமழுங் கியது;
மழை! மழை! மழை!
பொரித்திடு கறிபோல்
சளசள ஓசை!
மழை! மழை! மழை!

இறங்கிய நீர்ச்சரம்
ஏழையின் கண்ணீர்!
மழை! மழை! மழை!
உறங்கிய உலகம்
உயிர்த்தொளி பெற்றது;
மழை! மழை! மழை!

-1969

## 101 நூலகம்!

நூலகம் இலாதது பாழகம் ஆகும்!
நல்லறிவு அன்பு அங்கு சாகும்;
உடல் வேகும்!
ஒளி போகும்!
இருள் ஆகும்!

நூற்களைக் கண்டாலே அறிவு சிலிர்க்கும்!
நுகர்ந்திடா இன்பம் துளிர்க்கும்!
உயிர் களிக்கும்!
உளம் குளிக்கும்!
பிற புளிக்கும்!

அறிஞரின் உளமோ, அருந்துநீர்க் குளமாம்!
அன்றன்று நிறைந்திடும் உளமாம்!
முப் பழமாம்;
பெரு நலமாம்;
பின் வளமாம்!

செறிந்திடும் நூல்களால் சிறந்திடும் நாடும்!
செரித்திட உள்ளொளி கூடும்;
மெய் தேடும்;
கூத்தாடும்;
உயிர் பாடும்!

சுவடிச் சாலைகள் உளமலர்க் காடு!
சூழ்நெஞ்சம் கட்டுதேன் கூடு!
அறிவோடு;
நலந் தேடு;
தனி நாடு!

உவகைப் பெருங்கடல்! உலகச் சுருக்கம்!
உணர்வு பொழிந்தநீர்ப் பெருக்கம்!
மெய்த் தருக்கம்!
உள நெருக்கம்;
வாழ்வுச் சுருக்கம்!

வாடை நெஞ்சிற்கு வருத்திடாத் தீந் தழல்!
வாழ்க்கை வெயிற்கது குளிர்நிழல்!
இசைக்குழல்;
மேல் எழல்
ஒண் கழல்!

கூடை நினைவுகள் கொட்டிய கொப்பரை!
கூடாச் செயற்கது தப்பறை!
காவல் செப்பறை!
உயிர் துப்பறை;
குளிர் வெப்பறை!

-1969

## 102 நிலவில் மாந்தர்!

மாந்தர் மூவர் பறந்தனர்;
வானம் நோக்கிச் சென்றனர்
காந்தப் பரப்பைக் கடந்தனர்;
கவின் நிலாவில் குதித்தனர்!

வியப்பு! வியப்பு!! வியப்படா!!!
வெண்ணி லாவின் கதையடா!
அயர்வி லாத முயற்சிகள்!
அறிவு கண்ட வெற்றிகள்!

எண்ணற் கரிய உடுக்களும்
எல்லையற்ற வானமும்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தன!
கண்டு பிடிக்கத் தூண்டின!

வருந்தி வருந்தி உழைத்தனர்!
வானை அளக்க முனைந்தனர்!
பொருந்தி வந்த அறிவியல்
போட்ட கணக்கும் வென்றதே!

மக்கள் வாழும் உலகம்போல்
மற்ற உலகம் தேடினர்!
தக்க வாறு நிலவினைத்
தாவிக் கண்டு மீண்டனர்!

மானொன் றிருக்கும் காட்சிபோல்
மக்கள் பார்த்த நிலவிலே
ஆனை விழுந்த பள்ளம்போல்
அகன்ற குழிகள் கண்டனர்!

குதித்து நடந்து சென்றனர்;
குனிந்து நிமிர்ந்து பார்த்தனர்;
புதிய தரையில் உலவினர்!
புகைப் படங்கள் பிடித்தனர்!

காற்றி லாத பைகளில்
கல்லும் மண்ணும் நிரப்பினர்!
வேற்றோர் உலகத் தரையிலே
வெற்றிக் கொடியை நாட்டினர்!

நிலவுத் தரையில் நின்று, நாம்
நிற்கும் உலகைப் பார்த்தனர்!
குலவும் அழகைச் சுவைத்தனர்!
கோடி விண்மீன் கண்டனர்!

பாட்டன் கால நிலவுதான்!
பாட்டி சொன்ன கதைகள்தாம்!
வீட்டு வாயிற் படியிலே
வெளிச்சம் தந்த நிலவுதான்!

ஆற்று மணலில் நாமெல்லாம்
ஆடிக் களித்த நிலவுதான்!
சோற்றை ஊட்டும் அன்னையார்
சொல்லி அழைத்த நிலவுதான்!

காற்றும் நீரும் அங்கிலை!
கடலும் மலையும் அங்கிலை!
பீற்றைப் புல்லும் அங்கிலை!
பிழைக்கும் உயிரும் அங்கிலை!

வானில் பறந்த மூவரும்
வந்து கடலில் குதித்தனர்!
நானும் நீயும் இருக்கிறோம்;
நாட்டுக் கென்ன செய்கிறோம்?

-1969

103

## மூட ஆமை!

குளம் ஒன்றில் ஆமையும்
கொக்கு இரண்டும் வாழ்ந்தன!
குளத்தில் தண்ணீர் வற்றவே
கூடி மூன்றும் வருந்தின.

அண்டை ஊரில் உள்ளதோர்
அழகுக் குளத்தை நாடியே
இரண்டு கொக்கும் போகவே
எண்ணி முடிவு செய்தன.

அதனைக் கண்ட ஆமையும்
அழுதே, "அண்ணன் மார்களே
இதனை விட்டுப் போகவே
எனக்கும் உதவி செய்யுங்கள்;

நன்மைக் கால முற்றிலும்
நட்புச் செய்து வாழ்ந்தவர்,
துன்பம் கண்ட போதிலே
துறந்து போதல் இல்லையே!"

என்று கூறி வேண்டவே
இரண்டு கொக்கும் அதனிடம்
"நன்று நன்று; தம்பியே!
நாங்கள் பறந்து செல்லுவோம்!

நீயும் வருவ தெப்படி?
நெடுந்தொலைவும் ஆனதே!
காயும் வெய்யில் கருக்குமே!
கால்கள் சோர்ந்து போகுமே!"

என்று கூறிக் கொக்குகள்
இரண்டும் வருந்தி நாளெல்லாம்
ஒன்று கூடி ஆய்ந்தன!
உளவும் ஒன்று கண்டன!

“ஆமைத் தம்பி! உன்னையே
அழைத்துப் போவ தென்னிலோ,
ஊமை போல், இக் குச்சியை
உன்றன் வாயால் பற்றிக்கொள்!

குச்சி முனைகள் இரண்டையும்
கௌவிப் பறந்து செல்லுவோம்!
உச்சி வானில் செல்கையில்
உன்றன் வாயைத் திறப்பையேல்

தரையில் வந்து வீழுவாய்
தவிடுபொடி ஆகுவாய்;
மறந்தி டாதே” என்றன.
“மறவேன்” என்ற(து) ஆமையே!

குச்சி ஒன்றைக் கொணர்ந்தன;
கௌவிக் கொண்ட(து) ஆமையும்!
உச்சி வானில் பறந்தன!
ஊரார் நின்று பார்த்தனர்!

சிறுவர் கைகள் கொட்டியே,
சிரித்துக் கூச்சல் போட்டனர்.
துறுதுறுத்த ஆமையும்
தூக்கிச் செல்லும் நண்பரைக்

“கீழே இரைச்சல் ஏன்”எனக்
கேட்க வாயைத் திறந்ததும்,
வீழ்ந்து நொறுங்கிப் போனதே!
வீணில் உயிரைத் துறந்ததே!

மூத்தோர் சொல்லைக் கேட்டிடா
மூட அமை இறந்ததே!
காத்துக் கொள்ளல் வேண்டுமே,
கடமை, அடக்கம் இரண்டையே!

-1969

## 104 கலைஞர்கள்!

**சிற்பிகள்:**

கருங்கல் லாலும்
களிமண் ணாலும்
கற்பனை யோடெழில் பாவை - பல
கண்ணுக்கும் கருத்துக்கும் தேவை - இது
கவின்கலைச் சிற்பிகள் பார்வை! - அவர்
கலையுணர் வுள்ளம்,
காட்சியின் வெள்ளம்!
கண்டிட நெஞ்சினை அள்ளும்!

**ஓவியர்:**

தூரிகை எடுப்பார்!
வண்ணந் தோய்ப்பார்;
சுறுசுறுப் போடே விரைவார் - பல
சித்திர உருவங்கள் வரைவார்! - அதன்
சீரினில் நெஞ்சமும் கரைவார்! - இதன்
சிறப்பினைக் காண்போம்!
செவ்வையைக் காண்போம்!
செறிவுடன் உளத்தால் உண்போம்!

**கூத்தர்:**

விழியால் விரலால்
விரிபொரு ளுணர்த்தி
வேய்ங்குழல் இசையினுக் காடி - எழில்
விறலியர் தம்முடன் கூடி - கலை
விளைவுகள் எனும்பயன் நாடி - கல்வி
விளையா தார்க்கும்
விளைப்பார் பொருளை
நாடகக் கூத்தர்கள் பாடி!

**இசைவாணர்:**

குரலால், குழலால்,
முரலும் யாழால்
குடமொடு முழிவால் இசைய - நறுங்
குளிர்தமிழ் உள்ளம் அசைய - அதில்
கூடிடும் இன்பமும் பிசைய - நின்று
கேட்போர் கேட்கக்
கேளார் வேட்கக்
கிளர்ந்திடும் வாணர்கள் இசையே!

-1974

## 105 ஆடுக ஊஞ்சல்!

அன்புப் பாப்பா
அழகுப் பாப்பா
ஆடுக ஊஞ்சல்!

அசையும் காற்றின்
திசையில் நீந்தி
ஆடுக ஊஞ்சல்!

இன்பத் தமிழே
எழிலோ வியமே
ஆடுக ஊஞ்சல்!

இளமைக் கால்கள்
வளமை பொலியும்
ஆடுக ஊஞ்சல்!

வானில் அலையும்
வட்ட நிலாவே
ஆடுக ஊஞ்சல்!

வனப்பும் உரமும்
நினைவும் பெருகும்
ஆடுக ஊஞ்சல்!

மானின் கன்றே
மகிழும் பூவே
ஆடுக ஊஞ்சல்!

துள்ளும் அலையே
துடிக்கும் விழியே
ஆடுக ஊஞ்சல்!

தோன்றும் இன்பம்
ஊன்றும் எழிலும்
ஆடுக ஊஞ்சல்!

எள்ளின் பூவே
இசைக்கும் குயிலே
ஆடுக ஊஞ்சல்!

இடையும் சிறுக்கும்
இருவிழி குளிரும்
ஆடுக ஊஞ்சல்!

-1974

106

# ஆடுக தமிழ் ஊஞ்சல்!

இன்பத் தமிழ் மொழிக்கே
ஏற்றம் பிறந்ததென
அன்புத் தமிழ்க்கிளியே!
ஆடுக ஊஞ்சல்! - இந்த
ஆலங் கிளைகுலுங்க
ஆடுக ஊஞ்சல்!

அற்றைத் தமிழ்மொழிக்கே
ஆக்கம் பிறந்ததெனக்
கற்றைக் குழல்பரக்க
ஆடுக ஊஞ்சல்! - உன்
காதோரந் தென்றல்வர
ஆடுக ஊஞ்சல்!

முத்துத் தமிழ்மொழிக்கே
மொய்ம்பு பிறந்ததெனக்
குத்து விளக்கே, நீ
ஆடுக ஊஞ்சல்! - உன்
குவளை விழிமலர
ஆடுக ஊஞ்சல்!

அன்னைத் தமிழ்மொழிக்கே
அரசு கிடைத்ததெனக்
கன்னித் தமிழ்மகளே
ஆடுக ஊஞ்சல்! - உன்
கன்னம் சிலிர்சிலிர்க்க
ஆடுக ஊஞ்சல்!

கழகத் தமிழ்மொழிக்கே
காலம் மலர்ந்ததெனக்
குழகத் திருமயிலே
ஆடுக ஊஞ்சல்! - உன்
கொம்மை மதர்ந்தெழவே
ஆடுக ஊஞ்சல்!

-1974

## 107 பொன்னன் கதை!

பொன்னன் ஒருநாள் தெருவழியே
போய்க்கொண் டிருந்தான்; அவன்முன்னே
நன்னன் வந்தான்; அவன் இவனை
நாடகம் பார்க்கக் கூப்பிட்டான்!

இருவரும் நாடகம் பார்த்தார்கள்!
இரவில் வீடு திரும்புகையில்
ஒருவன் வந்தான்; "பொன்னா! உன்
உறவினர் ஒருவர் இறந்தாராம்;

செய்தியைக் கேட்டே உன்பெற்றோர்
செங்கற் பட்டு சென்றுள்ளார்;
பொய்யில்லை; உன்னை என்னோடு
புறப்பட் டங்கே வரச்சொன்னார்;

எடு;எடு; போவோம்" என்றழைத்தான்!
இவனைத் தெரியான் அவனெனினும்
விடுவிடு என்றே நன்னனையும்
வீட்டிற் கனுப்பிப் புறப்பட்டான்!

பெற்றோர் பொன்னனைக் காணாமல்
பெரிதும் வருந்தினர்; அங்கங்கே
உற்றார் உறவினர் ஊரிலெல்லாம்
ஓடினர்; தேடினர்; பயனில்லை!

நாட்கள் மூன்று நடந்தனவே!
நன்னனும் செய்தியை அவர்க் குரைத்தான்!
ஆட்கள் பலரும் திசைக் கொருவர்
அவனைத் தேடி அலைந்தனரே!

இப்படி யிருக்கையில் ஒருநாளில்
எங்கிருந் தோஒரு மடல்வரவே
அப்பா அம்மா பிரித்தார்கள்!
அதில் பொன்னன் வரைந்திருந்தான்!

"அப்பா என்னை உயிரோடே
அழைத்துப் போக வேண்டுமெனில்
தப்பா மல்ஆ யிரம்உருபா
தரங்கம் பாடிக் கடற்கரையில்

வரும்ஞா யிற்றுக் கிழமையிலே
வைத்திட வேண்டும்; இச்செய்தி
ஒருவரும் அறிந்திடக் கூடாதே!
அறிந்தால் உயிரும் இருக்காதே"

என்றே எழுதி விடுத்திருந்தான்!
இதனை படித்த பெற்றோர்கள்,
அன்றே நகைகளை விற்றார்கள்;
அந்தத் தொகையைச் சேர்த்தார்கள்!

பொன்னன் குறித்த அந்நாளில்
போனார் தந்தை தொகையோடு!
பொன்னன் வந்தான்; ஆயிரமும்
போனது போனது வீணாக!

பொன்னனைப் போலப் பிள்ளைகளும்
போவதும் எவர்பின், எங்கென்றே
முன்னறி வின்றிப் போவார்கள்!
முடிவில் தொல்லையும் வைப்பார்கள்!

வந்தவன் பின்னே சென்றதனால்
வந்தது தீங்கு! பெற்றோரும்
நொந்தனர்! ஆயிரம் உருபாவும்
நொடியில் பறந்து போனதன்றோ?

படிப்பறி விருந்தால் போதாது;
பட்டறி வோடே உலகறிவும்
படிப்பறி வோடு பயன்படுமாம்
பாடம் பொன்னன் கதையாகும்!

-1974

## 108 படிப்படியாக...!

படிப்படி யாகத் துடிதுடிப் போடு,
அடியை எடுத்துவை, பாப்பா! - நீ
முடிவு வரைக்கும் நட, பாப்பா! - ஒரு
முன்னேற்றம் கண்டுபிடி, பாப்பா!

அடிப்படி யில், நடை தடைப்படி னும்,உன்
அடிப்படை விடாதே, பாப்பா! - உளப்
பிடிப்பினை விடாதே, பாப்பா - இந்தப்
படிப்பினை மறவாதே, பாப்பா!

இடைப்படு வார்,சிலர்; எதிர்ப்படு வார்,சிலர்
முடைப்பட நில்லாதே, பாப்பா! - உன்
முன்காலை வாங்காதே, பாப்பா! - உள
முனைப்பில் தளராதே, பாப்பா!

குடைபிடிப் பார்,சிலர்; குழிபறிப் பார்,சிலர்;
கொள்கை மயங்காதே, பாப்பா! - நீ
கூர்த்தவிழி தாழ்த்தாதே பாப்பா - உளங்
குலைந்து வருந்தாதே, பாப்பா!

-1974

## 109 உழைக்காமல் பயன் இல்லை !

பள்ளியை நோக்கி
நாளும் ஓடுவாய்!
பையினுள் சுவடிகள்
பொத்தகம் தூக்குவாய்!
அள்ளி,உண் ணாமலே
பசியும் அடங்குமா?
ஆவலாய்க் கற்காமல்
அறிவூறுமா?

உழுகின்ற நோக்கோடு
கலப்பையை ஏந்தினாய்!
உழைக்காமல் விதைக்காமல்
பயன்எதிர் பார்க்கிறாய்!
நிழலென்று சொன்னாலே
உடலும் குளிருமா?
நெருப்பென்று சொன்னாலே
குளிர் போகுமா?

உண்மையை உணராமல்
உழைப்பை இகழ்கிறாய்;
ஊமையாய் இருந்தே
துறவி என்கிறாய்!
அண்மையில் இருப்பதே
சேய்மை ஆகுமா?
ஆழப் படுத்தாமல்
நீர் ஊறுமா?

-1975

## 110 நன்றிக்கு நாய்!

நாயி னிடத்தும்
நற்குணம் உண்டு;
நன்மையைச் செய்தால்
நன்றியைக் காட்டும்!
வாயில் லாத
உயிர்களைப் போல
தம்பி, தங்கைகளே - நாம்
வாழ்ந்து காட்ட
வேண்டு மன்றோ?
முயன்று பாருங்களே!
அன்பு செய்தால்
அணைந்து மகிழும்!
அடிக்க வந்தால்
கடிக்க முயலும்!
முன்பு செய்த
நன்மை நினைந்து
தம்பி, தங்கைகளே - நம்
முகத்தை முகரும்
நாயின் அறிவை
நினைந்து பாருங்களே!

கவளச் சோற்றின்
கடனைக் கழிக்கக்
காவல் செய்து
கடமை தீர்க்கும்!
அவலம் போக்க
உதவி னோர்க்குத்
தம்பி, தங்கைகளே! - நம்மில்
ஆர்தான் இப்படி
நன்மை செய்வார்?
அறிந்து கூறுங்களே!

-1975

## 111 நாய்!

விருந்தினர் வந்தால் முன்னர்
வரவேற்கும் உரிமை யாளன்!
தெரிந்தவ ரன்றி முற்றும்
தெரியாதார் வந்து விட்டால்
எரிந்தவர் முன்னர் வீழ்ந்தே
எதிர்த்திடும், காவற் காரன்!
பரிந்தவர் தடவி விட்டால்
பணிந்திடும் அடிமை யாளன்!

தொலைவழி, தனி வழிக்குத்
துணையான அன்பன்! காட்டு
மலைவழிச் செல்லு வோர்க்கு
மறவனாம் ஆனால் தன்போல்
நிலையுள்ள நாய்கட் கெல்லாம்,
நிலையான வைரி! உண்ட
இலைவிழும் எச்சில் தொட்டி,
இடுகளம் வெல்லும் வீரன்!

பிள்ளைக்குப் பள்ளித் தோழன்!
பூனைக்கோர் எதிரி! கூண்டுக்
கிள்ளைக்குக் கூட்டாள்! எங்கள்
கிழவிக்குக் கைக்கோல்! சுற்றும்
கள்ளர்க்குத் *'தாணா'*க் காரன்!
காத்தலில் அரசன்! நாயின்
பிள்ளைக்குத் தந்தை! பெற்ற
நாயுக்குக் கணவன் கண்டீர்!

-1976

## 112 நெறிமுறைகள்!

பசித்திடும் ஒருவன் தனக்கென ஒருபிடி
புசித்திடக் கேட்பான்; அது 'நீதி'!
புசித்திட ஒருபிடிச் சோறிருந் தாலும்
பசித்தவனுக் கிடு;அதிற் பாதி!

வகுத்துக் கொடுத்ததை வாங்கி யருந்தியும்
மிகுத்திட வேண்டுவான் அதுதீது!
தொகுத்ததைத் தானே திருடியும் எடுப்பான்,
தகுசெயல் அல்ல அதுசூது!

வீடில்லாதவன் தனக்கென வீட்டைத்
தேடுதல் தான் மிகச் சரி!
வீடொன் றிருந்தும் மறுவீ டொன்றைத்
தேடுதல் கேடென அறி!

தனக்குள தொன்றைப், பிறரிட மிருந்து
காத்தல் தான் நன் நெறி!
தனக்குள் உடைமையைப் பெருக்கிடப் பிறரின்
உடைமையை மாய்ப்பது வெறி!

தன்மகள் வாழ நோய்நொடி நாடா(து)
அவளைக் காப்பது நெறி!
தன்மகள் வாழத் தமக்கை மகளது
வாழ்வைக் கெடுப்பது வெறி!

தன்மொழி வாழ விரும்புவான் ஒருவன்
தன்மொழி காப்பான் அது நெறி!
தன்மொழி வாழ விரும்பிப் பிறரின்
இன்மொழி மாய்ப்பான்அது வெறி!

-1976

## 113 உண்மையும் பொய்யும் உருவம் புரியாமல் உலவி வருகுது தம்பி!

உண்மையும் பொய்யும்
உருவம் புரியாமல்
உலவி வருகுது தம்பி! - ஒன்றாய்க்
குலவி மகிழுது தம்பி! - ஒரு
கண்ணிமை மறைவில்,
கவனம் குறைந்தால்
கைப்பொருள் மறைந்திடும் தம்பி! - நல்
கருத்தாய் இருந்திடு, தம்பி!

பெண்மையும் ஆண்மையும்
பிரிவு விளங்காமல்
பிணைந்து கிடக்குது தம்பி! - ஒன்றாய்
இணைந்து நடக்குது தம்பி! - அதால்
நன்மையும் தீமையும்
நடப்பு விளங்காத
நாடக மாயின தம்பி! - பல
நலிவுகள் சூழ்ந்தன தம்பி!

மூடரும் அறிஞரும்
மேடையில் ஏறி
முழக்கம் இடுகிறார் தம்பி! - மனக்
குழப்பம் பெருகுது தம்பி! - கொடுங்
காடரும் கயவரும்
கண்ணிய உடையில்
காட்சி தருகிறார் தம்பி! - அர
சாட்சி புரிகிறார் தம்பி!

பேச்சில் விளங்காது;
மூச்சில் விளங்காது;
பெருமையும் சிறுமையும் தம்பி! - மனக்
கருமையும் வெளுமையும் தம்பி! - வாய்
ஏய்ச்சில் மயங்காமல்
எதிர்ப்பில் தயங்காமல்
எண்ணித் தொடங்கிடு தம்பி! - செயல்
பண்ணி முடித்திடு தம்பி!

-1978

## 114 விளையாட்டும் வேடிக்கையும்!

*விளையாட் டென்றும்*
*வேடிக்கை யென்றும்*
*வீணாய்ப் பொழுதைக் கழிக்காதே! - உன்*
*இளமைக் காலம்*
*இனிமைக் காலம்!*
*இழிவாய் அதனை இழக்காதே!*

*களியாட் டென்றும்*
*கவறாட் டென்றும்*
*காசை வீணாய்த் தொலைக்காதே!*
*ஒளியாய் உள்ளத்*
*துணர்வும் அறிவும்*
*ஒருங்கே இழந்து மலைக்காதே!*

*உளத்தை பயிற்று;*
*உடலைப் பயிற்று;*
*ஓய்வை வீணாய்ப் போக்காதே! - மனக்*
*களத்தை உழுது*
*கருத்தைப் பயிர்செய்;*
*கறம்பாய் அதனை ஆக்காதே!*

-1979

## 115 கையைப் பிடித்துக்கொள் அண்ணா!

கையைப் பிடித்துக்கொள் அண்ணா - என்னைக்
கண்போலக் காத்திடு அண்ணா!
வெய்யிலில் காயவிடாமல் - என்னை
வீட்டுக்குக் கூட்டிச்செல் அண்ணா!

மிதிவண்டி யின்பின்னால் ஏற்றி - என்னை
மெதுவாகக் கொண்டுசெல் அண்ணா!
அதிராமல் அசையாமல் ஓட்டு! - அப்பா
அம்மாவுக் குன்திறம் காட்டு!

-1979

## 116 சீராடுவது ஏன்?

தலைவாராமல் பூச்சூடாமல்
தனியே நின்றேன் சிணுங்குகிறாய்? - பொற்
சிலையே நீஏன் பள்ளிசெல் லாமல்
சீராடிக் கண் கலங்குகிறாய்?

வண்ணப் பட்டை இருபுறம் கட்டித்
தலையை வாரிப் பின்னிடுவேன்! - உன்
எண்ணப் படியே பட்டுச்சட்டை
எடுத்துத் தருவேன்; பூவைப்பேன்!

தோளில் பையைத் தொங்கப் போட்டுத்
துள்ளிப் போவாய் மான்போல! - ஒரு
நாளில் உனக்குப் பூக்குடை வாங்கி
நாட்டித் தருவேன் வான்போல்!

காலில் செருப்பை அணிந்துகொள்வாய்!
கையை வீசிச் சென்றிடுவாய்! - பைம்
பீலி விரித்த மயிலின்குஞ்சே!
பிள்ளைக் கிளியே! மான்கன்றே!

-1979

## 117 எழுதுக குழந்தாய்!

எழுதுக குழந்தாய்! எழுதுக குழந்தாய்!
பழுதறப் பைந்தமிழ் எழுதுக குழந்தாய்!

முழுதுமே தூய தனித்தமிழ் எழுது;
முத்தமிழ் மொழியில் முத்தென எழுது!
விழுது, நீ தமிழ்க்கு! வீழாது காப்பாய்!
வீணர்கள் உணர்ந்திட வெற்றியைச் சேர்ப்பாய்!

அற்றைநாள் தமிழில் அழகுற எழுது!
அறிவியல், அரசியல், அறவியல் எழுது!
எற்றைநாள் வரினும் எந்தமிழ் மொழியே
ஏற்றம் அவைக்கென எழுது, நீ குழந்தாய்!

வானியல் எழுது; வாழ்வியல் எழுது!
வல்லதாம் கலைகளும் வளர்ந்திட எழுது!
தேனிகர் தமிழ்மொழி திசையெலாம் கொடுபோய்த்
தென்னவர் அறிவினைத் தெளித்திட எழுது

எழுதுக குழந்தாய்! எழுதுக குழந்தாய்
பழுதறப் பைந்தமிழ் எழுதுக குழந்தாய்!

-1979

## 118 மருளாதே தம்பி மருளாதே!

மருளாதே தம்பி மருளாதே!
மயக்கம் கொண்டே மருளாதே!

இருளைக் கண்டோ
இழிவைக் கண்டோ
எதனைக் கண்டும் மருளாதே!
பொருளைக் கண்டோ
பொய்யைக் கண்டோ
போலியைக் கண்டோ வெருளாதே!

இழப்பை நினைத்தோ
இகழ்வை நினைத்தோ
எழிலை நினைத்தோ மயங்காதே!
உழைப்பை நினைத்தோ
உருவை நினைத்தோ
ஓய்வை நினைத்தோ தயங்காதே!

புகழைப் பார்த்தோ
புன்மையைப் பார்த்தோ
புரட்டரைப் பார்த்தோ கெஞ்சாதே!
இகழைப் பார்த்தோ
எதிர்ப்பைப் பார்த்தோ
இன்னலைப் பார்த்தோ அஞ்சாதே!

மருளாதே தம்பி மருளாதே!
மயக்கம் கொண்டே மருளாதே!

-1979

## 119 யார் என்ன செய்தார்கள்?

**(எடுப்பு)**

*அம்மா உங்களை என்ன செய்தார்? - அன்பு*
*அப்பா உங்களை என்ன சொன்னார்? - ஏன்*
*உம்மென முகங்களை வைத்துக் கொண்டீர்?*
*ஒன்றும் பேசாமல் நின்று கொண்டீர்?*

**(தொடுப்பு)**

*பள்ளிப் படிப்பினில் தேர்விலே ஒவ்வொரு*
*பாடத்தும் எண்கள் குறைந்ததா? - இல்லை*
*பிள்ளைகள் எவரிட மாகிலும் சண்டையில்*
*பிணக்குகள் வந்திட நேர்ந்ததா? (அம்மா)*

*செய்துவைத்த,'பலகார'த்தைத் தின்றதால்*
*சீற்றமும் அன்னைக் கெழுந்ததா? - இல்லை*
*கொய்துவைத் த,முல்லைப் பூக்களை நூலிலே*
*கோக்கையில் திட்டு விழுந்ததா? (அம்மா)*

*கடைநோக்கிப் போகையில் வேடிக்கை பார்த்ததால்*
*கைதந்த காசும் தொலைந்ததா? - இல்லை*
*நடையும்கொண் டாட்டமாய் வருகையில் கையுள்ள*
*நல்லெண்ணெய்ச் செப்பும் கவிழ்ந்ததா? (அம்மா)*

*அப்பாவின் மிசையினில் இழுவையில் அவர்வைத்த*
*அடிக்கோலும் காணாமல் போனதா? - இல்லை*
*தப்பாக வீட்டுக் கணக்குகள் செய்ததால்*
*தந்தையார்க் குச்சினம் ஆனதா? (அம்மா)*

*புதிதாக வாங்கிய பொத்தகத் தில்ஏதும்*
*போக்கடித் தீர்களா பள்ளியில் - இல்லை*
*எதிராகப் பேசிட முதுகினில் அப்பளம்*
*ஏற்றீர்களா சினக் கொள்ளியில்! (அம்மா)*

*பொங்கல் விழாவுக்குப் புதுச்சட்டை தைத்திடப்*
*போதாது வருமானம் என்றாரா? - இல்லை*
*தொங்கல் தொடரிக்குப் போராட்டங் கட்டியே*
*தொப்புதிப் பென்றுதை தின்றீரா? (அம்மா)*

எதற்காக இத்தனைச் சிண்டு சிணுக்கங்கள்?
ஏனிந்தக் கோணல் அழுமுகம்? - ஒரு
கதைசொல்வேன் வாருங்கள்! பாட்டும்சொல்வேன்;அதைக்
காதாரக் கேட்டு மகிழுங்கள்! (அம்மா)

-1980

120

## நல்லவர் இடத்தில் நீயும் ஓர் இடம்பெறு!

தம்பி, நீ ஒரு தமிழ்மகன்! உன்னை
நம்பி இந்த நாடும் மக்களும்
உள்ளனர் என்றே உணர்ந்து கொள்வாய்!

குள்ள மனத்தவன் இல்லை, நீ! மற்று, ஒரு
கொடுமை நெஞ்சின னும்,நீ இல்லை!
கடுமையாய்ப் படித்துக் கருத்தொடு வளரும்
நல்ல உளத்தவன்; நல்லவை நினைப்பவன்!
வல்ல செயலினன்; வகுத்த கடமையன்!

படித்து வளர்ந்து பட்டம் பெற்றே
இடித்த புளியாய் இருந்த இடத்திலே
அமர்ந்து, தின் னாமல் அலைந்து திரிந்து
நிமிர்ந்து குனிந்து, நேர்மை குலையாது,

நாட்டுத் தலைவனோ, நல்அதி காரியோ,
கேட்டை அகற்றும் அறிஞனோ, வணிகனோ
எந்த நிலைக்கு நீ வளர்ந் தாலும்
அந்த நிலையால் அனைவர்க்கும் உதவும்
தொண்டு நினைவைத் தொலையா நினைவாய்க்
கொண்டு வாழ்வைக் கொள்கை வாழ்வாய்
நடத்திப் புகழ்பெறு! நல்லவர் பெற்ற
இடத்தில் நீயும் ஓர் இடம்பெற்று உய்கவே!

-1981

## 121 துள்ளுவாய்! ஆடுவாய்! தூய்தமிழ்ப் பாடுவாய்!

தலைமாலை சூட்டித் - தமிழ்த்தாயைப் போற்றி
வளைவாக ஆடி - வணங்குவாய் வாடி!

வெள்ளுடை மேனியில்
வெய்யில் ஒளிகிளரும்!
உள்ளெழும் உவகை
முகத்தில் களிஉமிழும்!
கள்ளவிழ் மலர்வாய்!
கருவிழி வண்டு!
துள்ளுவாய்! ஆடுவாய்!
தூய்தமிழ் பாடுவாய்! (தலைமாலை)

மாணிக்கக் கன்னம்!
மகிழம்பூ பின்னல்
கோணிக்கொள் கழுத்து,
கொண்டையில் மயில்தான்!
ஆனிப்பொன் முத்து,
அழகுப்பல் வரிசை!
நாணிக்கொள் இடைதான்
நறவே! நீ ஆடு! (தலைமாலை)

-1982

## 122 நம்பிக்கைகள் பல உண்டு!

நம்பிக்கைகள் பல உண்டு! - அவை
நம்பிக் கெடுதற்கும் ஆட்கள்இங் குண்டு!
தம்பி, எது எதனாலே - ஒன்று
தாழ்வுறும் வாழ்வுறும் - தேர்க முன்னாலே!

முந்தி நடப்பதனாலே - ஒன்று
முன்னேறும் என்பது முயற்கதை போல!
பிந்தி நடப்பதும் வெல்லும் - ஆனால்
பிந்துவ தெல்லாமே வெல்லுமோ? சொல்லும்!

சொந்த முயற்சிகள் வேண்டும் - இடைச்
சோம்பலும் மயங்கலும் தயங்கவே தூண்டும்!
வந்தவழி திரும்பாதே! - எனில்
வருகின்ற வழியெல்லாம் செலவிரும் பாதே!

ஆடுபோல் அங்குமிங் காகத் - தேடி
அலையாதே; குலையாதே; மனஞ்சிதறாதே!
நாடுமொழி இனம் நாடு! - ஒன்றை
நாடிய பின்கையை எதற்கும்உத றாதே!

தந்தன தோம்தரி கிடதோம்,எதும்
தாழ்ந்தபின் உயர்வது பெரும்இட ராய்ப்போம்!
சிந்தனை செய்! ஒன்று தேர்வாய்! - பின்னர்
செயலொன்றை செயல் - என மனம்,வினை நேர்வாய்!

திந்திமி தோம்திமி தோம் தோம் - அட
தேவையி லாத நினைவுகள் போம் போம்!
நம்பிக் கைகள் பல உண்டு.

-1982

## 123

## பள்ளிக்குச் செல்லும் பயனுள்ள தம்பி, கேள்!

பள்ளிக்குச் செல்லும்
பயனுள்ள தம்பி, நீ!
எள்ளி நகைக்காமல்
இவ்வுரையை எண்ணிப்பார்!

வீரத் திருமகன், நீ!
வீணான புன்செயல்கள்
ஆரத் தழுவி
அழிந்தொழிந்து போவதுவோ?

மன்னுந் தமிழ்மகன், நீ!
மக்கள்தொண் டாற்றாமல்
தின்னுந் தொழில்செய்தே
தீர்ந்துவிட எண்ணுவதோ?

ஆறறிவு பெற்ற
அருமாந்தச் சேயோன், நீ!
சோறுடைக்கே வாழ்ந்து
சொந்தவுயிர் மாய்வதுவோ?

தேய்ந்துவரும் எங்கள்
திருவினத்துக் கால்முளை,நீ!
ஏய்ந்துநில்! நின்றியங்கு!
எந்தமிழ்க்குத் தொண்டுசெய்!

சாய்ந்த தமிழினத்தைச்
சாகாமல் காத்துநில்!
வாய்ந்த தமிழ்க்கதிரே!
வந்தஇருள் சீய்ப்பாயே!

-1982

124

## மென்னீர்க் குமிழிகள்!

வழலை நீரில் குழலைத் தோய்த்து
வாயால் அண்ணன் ஊதினான்! - அட!
சுழல் சுழலாக மென்னீர்க் குமிழிகள்
சுழன்றன! மிதந்தன! மின்னின!

சிறிதும் பெரிதுமாய்ப் பன்னிறக் குமிழிகள்
சீர்த்தன! பூத்தன! பொங்கின! - அட!
வறிதே தோன்றின! வறிதே மறைந்தன!
'வாழ்க்கையும் இதுதான்' என்றன!

கையில் நனைந்தன! தலையில் வெடித்தன!
கன்னம் தீண்டி உடைந்தன! - அட!
பொய்யில் பூத்த புகழுரை போலப்
பொங்கின! மங்கின! காய்ந்தன!

காற்றில் தோன்றின! காற்றில் மிதந்தன!
காற்றில் கரைந்தன, குமிழிகள்! - அட!
தோற்றமும் வாழ்வும் மறைவும் எல்லாம்
துல்லிய மாகவே விளங்கின!

-1982

## 125 மூடர்கள் வாழ்கின்ற காலமிது!

*மூடர்கள் வாழ்கின்ற காலமிது! - தம்பி*
*முழுவிழிப் பாயிரு வாழ்க்கையிலே! - பெருங்*
*கேடர்கள் மேன்மேலும் ஏறுகின்றார்! - கொடுங்*
*கீழ்மையை உயர்வென்று கூறுகின்றார்!*

*தீமைகள் நல்லவை போலிருக்கும்! - பெருந்*
*திருடர்கள் கையிலும் நூலிருக்கும்! - வெறும்*
*ஊமையர் போல உலாவருவார்! - பல*
*ஊறுகள் செய்து துயர்தருவார்!*

*ஆரவா ரங்கள் பலகோடி! - வெறும்*
*ஆர்ப்புரை வீண்செயல் ஊர்முழுதும்! - பகல்*
*நேரம் இரவென்று பார்ப்பதில்லை! - உரை*
*நேர்மையில்லை; செயல் கூர்மையில்லை!*

*இப்படி அப்படிப் பொருள்குவிப்பார்! - அதற்*
*கிழிவுகள் தாழ்வுகள் பார்ப்பதில்லை! - பல*
*செப்படி வேலைகள் செய்திடுவார்! - அவை*
*சிறப்பெனப் பகட்டாய்ப் பெயரிடுவார்!*

**-1982**

## 126 எவர்க்கும் பயனாய் இரு!

*உன்னால் உலகம்*
*பெறுவதொன் றுண்டாம்!*
*உணர்வாய் என்றும்*
*தம்பி! - உனக்கு*
*முன்னால் பிறந்தோர்*
*இறந்தோர் பலபேர்!*
*முகவரி இல்லை, தம்பி!*

*பிறந்தோர் எல்லாம்*
*சிறந்தோர் ஆகார்!*
*பெரும்பயன் உடையது*
*பிறவி! - உலகில்*
*இறந்தோர் தம்மில்*
*இருப்போர் பலபேர்!*
*எவர்க்கும் பயனாய் இருப்பாய்!*

**-1983**

## 127 புரட்டர் உலகம் இதுவடா!

பொய்யும் புளுகும்
புனைவும் நிரம்பிய
புரட்டர் உலகம் இதுவடா! - இதில்
மெய்யும் ஒழுங்கும்
மேன்மை உறுவது
மிகவும் கடினம் உணரடா!

கையும் களவும்
காழ்ப்பும் உடைய
கழிசடை மாந்தர் வாழ்கிறார்! - இவர்
செய்யும் வினையும்
செருக்கும் நிறைந்தே
சீர்மை மாந்தர் தாழ்கிறார்!

-1983

## 128 பிறப்பினை வரலாறாக்கிடுவாய்!

ஊரில் உலகில் ஆயிரம் நடக்கும்!
ஒன்றையும் பெரிதாய் எண்ணாதே! - உன்
உளத்தைச் சேறாய்ப் பண்ணாதே! - முன்
பாரினில் வாழ்ந்த பயனுடை யோரின்
பாதையில் நீயும் நடையிடுவாய்! - உளப்
பதைப்புக் கென்றும் தடையிடுவாய்!

நெஞ்சில் நினைவுகள் ஆயிரம் மலரும்!
நிலைப்பன எண்ணி எடையிடுவாய்! - உள
நேர்மையை என்றும் கடைப்பிடிப்பாய்!
பிஞ்சில் பழுத்தே உதிர்ந்து போகாதே!
பிழையெனக் கண்டதை நீக்கிடுவாய்! - உன்
பிறப்பினை வரலா றாக்கிடுவாய்!

-1983

## 129 பழியன்றோ மிஞ்சும்!

ஆங்கிலத்தைக் கற்பதுதான்
உயர்வா? - பாப்பா
அழகுதமிழ் கற்றுவரல்
அனைத்துக்கும் தாழ்வா?

தாங்கிலையே உன்முடிவை,
பாப்பா - தமிழ்த்
தாய்மொழியைத் தள்ளிவிடல்
இனத்திற்குக் காப்பா?

கொச்சைத்தமிழ் பேசுவது
நன்றா? - பாப்பா
கொஞ்சுதமிழ் பிழையின்றிப்
பேசுவது நன்றா?

பச்சைத்தமிழ்ப் பாலினிலே
நஞ்சைப் - பாப்பா
பாய்ச்சுவதும் கேடன்றோ?
பழியன்றோ மிஞ்சும்!

-1984

## 130 ஒப்புவித்திடுவாய், உன்னை!

ஒப்புவித் திடுவாய், உன்னை - தம்பி
ஒப்புவித் திடுவாய், உன்னை!

தப்பித்துக் கொள்ள,நீ நினையினும் ஒளியினும்
தவறாமல், உன்றனை அழித்திடும் காலம்! (ஒப்பு)

எப்பொழு தும்,நீ இருந்திட விரும்பு!
இலையெனில் மறைந்திடும் உலகில்,நீ துரும்பு!
ஒப்புயர் வில்லாத அறிவில், நீ அரும்பு!
உனக்குண்டு மலர்ந்திடும் வாழ்க்கையின் வரம்பு! (ஒப்பு)

தொண்டுசெய் மக்கட்(கு); உன் தோள்களோ இரும்பு!
தொழிலாளர், உழவர்கள் உறவை, நீ விரும்பு!
மண்டிடும் துயர்துடை, அவர்பக்கம் திரும்பு!
மனத்தினில் இனித்திடும் தொண்டெனும் கரும்பு! (ஒப்பு)

தாய்மொழி, தாயினம், தாய்நாட்டு நினைவே
தன்நினை வாக்கிடு; மற்றெல்லாம் கனவே!
ஓய்வின்றி உழை!மக்கட் குடை,மனை, உணவே
ஒப்பவே கிடைக்கச்செய், அழிகிலாய்! எனவே, (ஒப்பு)

-1984

131

## உலகக் கடமைகள் உடனே தொடங்குக!

இன்னுமேன் உறக்கம்?
இன்னுமேன் தயக்கம்?
எழுக,நீ தம்பி! எழுகவே!
உன்னுடைப் பங்கின்
உலகக் கடமைகள்
உடனே தொடங்கிட முயல்கவே!

உள்ளமும் உடலும்
ஒன்றினை ஒன்றாய்
ஊக்கிட வேண்டும்; உணர்கவே!
எள்ளலும் பகையும்
இருக்கவே செய்யும்;
எதிர்த்திடத் துணிவும் பெறுகவே!

உலகமே மாறி,நீ
ஒருவனாய் நிற்பினும்
உன்னுளம் சரியென நினைப்பதை
இலகு முன் அறிவுடன்
எடையிடு தம்பி!
ஏற்றதென் றால்,உடன் தொடர்கவே!

-1984

## தாத்தா பாருங்கள் தமிழ்ச்சிட்டு!

*தாத்தா பாருங்கள் தமிழ்ச்சிட்டு!*
*தமிழ்மொழிக் கிதுவொரு மலர்த்தட்டு!*
*பார்த்தால் பக்கம் பதினாறு!*
*படித்தால் முழுவதும் தேனாறு!*

*சிறுகதை, பாட்டுகள் பலவுண்டு!*
*சிறுவர்க் கினித்திடும் கற்கண்டு!*
*குறுநடைக் குழந்தையும் பாடிடலாம்!*
*கூனற் கிழவியும் ஆடிடலாம்!*

*கட்டுரை, துணுக்குகள் மணம் கொழிக்கும்!*
*கருத்தால் நடையால் மனம் செழிக்கும்!*
*தெட்டுரை தீதுரை இருக்காது!*
*தெளிவுரை உண்டு;(உ)ளம் வெறுக்காது!*

*அறிவியல் வாழ்வியல் செய்திதரும்!*
*அவற்றைப் படித்தால் அறிவுவரும்!*
*நெறிதரும் வாழ்க்கை வழிகாட்டும்!*
*நீங்கா இன்பம் எழில்கூட்டும்!*

**-1984**

## 133

## தமிழ்நாட்டில் பொதுமை நலம் தழைத்திடச் செய்வோமே!

தமிழ்ச்சிட்டுக் குழந்தைகளே!
உமக்கொன்று சொல்வேன்;
தமிழ்த்தேசம் நம்தேசம்!
தமிழ்மக்கள் நாமே!

தமிழர்கள்நாம் ஒற்றுமையை
மறந்துவிட்ட தாலே,
தமிழ், இனம், நா(டு) அத்தனையும்
தாழ்ந்தடிமைப் பட்டோம்!

தமிழ்விளைவைத் தம்விளைவாய்த்
தமிழ்ப்பகைவர் கொண்டார்!
தமிழ்நலிவை உண்டாக்கித்
தமிழ்வரலா றழித்தார்!

தமிழ்மொழியைத் தமிழினத்தை
நாம்மீட்க வேண்டும்!
தமிழ்நாட்டைத் தனிநாடாய்
நாம்சமைக்க வேண்டும்!

தமிழ்மொழியைப் பேணுங்கள்!
தமிழ்மொழிபே சுங்கள்!
தமிழ்மொழியில் பிறமொழியைக்
கலந்துரையா தீர்கள்!

தமிழரெனச் சொல்லுங்கள்!
தவிர்த்திடுங்கள் சாதி!
தமிழ்நாட்டில் பொதுமைநலம்
தழைத்திடச்செய் வோமே!

-1984

## 134 பொருள்களை வாங்குவது...!

கடைத்தெருவில் கண்டதெல்லாம்
விற்றிருக்கும்; காசிருக்கும்;
கணக்குப்பண்ணித் தேவையெண்ணி
வாங்கவேண்டும்! - தம்பி,
எடைத்திருத்தம், பொருள்சிறப்பு
ஏற்றஅள வோடு,விலை
எல்லாவற்றும் பொருத்தமுண்டா
பார்க்க வேண்டும்!

ஒன்றுபத்தாய்க் கூறிடுவார்;
ஊசியதை நல்லதென்பார்;
ஒன்றிரண்டு கடைகள்ஏறி
இறங்க வேண்டும்! - தம்பி,
நன்றுபார்த்துத் தேறவேண்டும்;
நாள்படவும் காக்கவேண்டும்!
நம்மறிவே எவ்விடத்தும்
விளங்க வேண்டும்!

-1985

## 135 அறிவுக் கூறுகள் பல நூறு!

அறிவுக் கூறுகள் பலநூறு! - இங்(கு)
அவற்றுள் நீ ஒரு சிறுகூறு!
செறிவித் துள்ளஉன் உணர்வறி - ,நீ
சிறப்பாய் வளர்,உனை அவ்வாறு!

வாழ்க்கைப் பாதைகள் பலவேறு - நீ
வந்து நடப்பதோ ஓர்ஆறு!
வீழ்க்கும் தடைகள் நிலையறிந்து - நீ
விரைவாய் மேன்மேல் நடைதேறு!

உள்ளத் துணர்வுகள் பலகோடி - அவற்
றுண்மை காண்பாய் நீ, தேடி
வெள்ளத் தூறும் குமிழ்வாழ்க்கை! - நல்
விளைவுகள் செய்வாய் புகழ்சூடி!

பேச்சை வீணாய் இறையாதே! - வீண்
பெருமை பேசிக் கரையாதே!
மூச்சொவ் வொன்றும் பயன்தரல்போல் - நீ
முனை;விளை; நலன்வரும்; குறையாதே!

-1986

## 136 அன்றாடம் உடற்பயிற்சி செய்குவீர்!

அன்புத் தம்பியே
அருமைத் தங்கையே
அன்றாடம் உடற்பயிற்சி செய்குவீர்!
என்பு வலுப்பெருகும்;
தசைகள் இறுகலுறும்;
எண்ணம் தூய்மையுறும் உய்குவீர்!

ஆடி ஓடி விளை
யாடி அலைந்து வரின்
அரத்த ஓட்டமிகும் உடலிலே!
நாடி நரம்புகளில்
நச்சு வெயர்வை வெளி
யேற உணர்வுமிகும் குடலிலே!

கால்கை மூட்டிணைப்பு
கடுகும் பிடிப்பகலும்!
கண்கள் ஒளிமிகுக்கும் காட்சியில்!
மேனி மினுமினுக்கும்;
மேன்மைக் குணங்கள் மிகும்;
மிடிகள் அகலும்இன்ப மாட்சியில்!

-1987

## 137 அம்மா என்னை அழைத்துச் செல்!

அம்மா என்னை அழைத்துச் செல்!
அம்மா என்னை அழைத்துச் செல்!

சும்மா இல்லை, பெரியவன் ஆவேன்;
சோறு போடுவேன்; அழைத்துச் செல்!
இம்மாம் பெரிய உலகினில் தனியாய்
என்னை விடாதே; அழைத்துச் செல்!

ஊருக் கெல்லாம் உழைப்பேன்; மக்களுக்
குற்றது செய்வேன் அழைத்துச் செல்!
பேருக்குக் களங்கம் விளைத்திட மாட்டேன்!
பெருமை செய்வேன் அழைத்துச் செல்!

கருத்தாய்க் கற்பேன்; கற்பதில் நிற்பேன்;
கையைப் பிடித்தே அழைத்துச் செல்!
குருத்துச் செடிநான்; பெருமரம் ஆவேன்!
குளிர்நிழல் தருவேன்; அழைத்துச் செல்!

-1987

138

## நீந்திப் பழகு!

கோடை வெயிலில் குளத்தில் விழுந்து
குளித்து மகிழ்க தம்பி - உடல்
வாடி டாமல் ஊக்கம் பிறக்கும்;
வளர்ந்து நீளும் தம்பி!

மூச்சைப் பிடித்து நீருக் குள்ளே
முங்கி முங்கி எழுவாய்! - நாளும்
நீச்சுப் பழக்கம் நாடி நரம்பை
நீட்டி முறுக்கும் அறிவாய்!

தொடைகள் இறுகும்; மார்பு விரியும்;
தோன்றும் உறுதி காலில்! - உடல்
எடையும் குறையும்; எழிலும் பெருகும்!
இரைப்பை வலிவு கூடும்!

குளத்தில் நீந்து; கடலில் நீந்து;
குடலும் வன்மை யாகும்! - தம்பி
உளத்தில் தோன்றும் உவகை யெல்லாம்
உடலில் பொங்கி வழியும்!

-1987

## 139 எங்கள் வீட்டுச் சுட்டிப் பையன்!

*எங்களது வீட்டில்ஒரு*
*சுட்டிப் பையன்!*
*எங்கள் மகள் செந்தாழை*
*பெற்றெடுத்தாள்!*
*திங்கள் முகம்! 'மேக' முடி!*
*அகன்ற கண்கள்!*
*திருதிருக்கும் இருவிழிகள்!*
*துடிப்புப் பேச்சு!*

*தங்காத இருகால்கள்!*
*தை தை ஆட்டம்!*
*துருதுருக்கும் இரு கைகள்!*
*துள்ளுடம்பு!*
*மங்காத சுறுசுறுப்பு!*
*மாய்வதில்லை!*
*மற்றதெல்லாம் நேரில் வந்து*
*பார்க்க வேண்டும்!*

*சிறுகால்கள் தெருவோடும்!*
*அம்மும்மா கால் -*
*சித்தியின் கால் - அத்தனையும்*
*சேர்ந்தே ஓடும்!*
*அறுகைகள் தூக்கி வரும்!*
*படுக்க வைக்கும்!*
*அடுத்த நொடி சடக்கென்று*
*வெளியே பாயும்!*

*தடாலெனவே நீர்ச்செம்பு*
*தலைவீழ்ந் தோடும்!*
*தலைதெறிக்கப் பாய்ந்தோடும்*
*குவளை, கிண்ணம்!*
*மிடா, தவலை நீரெல்லாம்*
*தளதளக்கும்!*
*மெத்தை,தலை யணைகளெல்லாம்*
*மிதிபட் டேங்கும்!*

அம்முப்பா அறைக்கதவு
படாரென் றோடும்!
அங்குமிசைத் தொலைபேசி
'அலோ' ஒலிக்கும்!
செம்மையுறும் பொத்தகங்கள்
சிதறி யோடும்!
சிக்கிவிட்ட பொருள்களெல்லாம்
பறந்து போகும்!

சதிராட்டம் கூடத்தில்
நடக்கும்! பாய்ந்தால்
தொலைக்காட்சி நடுநடுங்கும்!
திடுமென் றங்கே
எதிர்வீட்டுத் தேவி தலை
கையில் சிக்கும்;
இளங்கையில் கொத்துமுடி
இழுபட் டேங்கும்!

கடாமுடா வென் றுள்ளறையில்
ஒலிகள் கேட்கும்!
காற்றெனவே இருகால்கள்
வெளிப்பாய்ந் தோடும்!
அடா! அடா!என் சொல்வேன்?இங்(கு)
ஆடும் ஆட்டம்!
அத்தனைக்கும் தாங்கா(து)இச்
சிறுவீ(டு) அய்யா!

-1987

## 140 பத்துக் கட்டளைகள்!

உண்மைக்குப் புறம்பாய்
உரைகள்செய் யாதே!
ஊக்கத்தை என்றும்
குறைத்து விடாதே!
திண்மையாய் எதனையும்
தேர்ந்திட முயற்சிசெய்!
தேர்ந்ததை என்றும்
செய்திடப் பழகு!

நல்லவர் நட்பையே
நயந்து பெற்றிடு!
நம்பிடும் முன்னர்
நால்வழி எண்ணு!
வல்லவர் துணையை
வலிந்து போற்றிடு!
வறுமையால் உள்ளம்
வாடி விடாதே!

எவரையும் அன்பால்
இன்புறச் செய்வாய்!
எதனையும் அறிவால்
எண்ணிமேற் கொள்வாய்!
இவற்றை நினைவில் வை!
என்றும்மற வாதே!
எதிர்ந்த நாளெலாம்
இன்புறும் நாள்களே!

-1987

141

## மண்டையைக் குழப்பும் மதமும் சாதியும்!

சிட்டுக் குருவியே!
சிட்டுக் குருவியே!
எட்டுத் திசையிலும்
ஏறியும் இறங்கியும்
சுற்றித் திரியும்
சிட்டுக் குருவியே!

உற்றவுன் இனத்தில்
உறவினில் - பிறப்பில், எம்
மண்டையைக் குழப்பும்
மதமும் சாதியும்
உண்டோ உரைப்பாய்,
சிட்டுக் குருவியே!

-1988

## 142 அண்டை அயலை அறிதல்!

அண்டை அயலில் உள்ள - நாம்
அறிய வேண்டும் செய்தி,
கண்டு தெளிய வேண்டும்! - அதைக்
கருத்தில் வைக்க வேண்டும்!

வாழும் ஊரைப் பற்றி - அதன்
வளங்கள், மக்கள் பற்றி,
ஆழம் அகலம் அறிதல் - நல்
அறிவென் றெண்ணல் வேண்டும்!

உடலைப் பேணும் முறையை - நாம்
உண்ணும் பொருளின் வகையைக்,
கடலைக் காற்றை வானை - பருவ
காலம் அறிதல் வேண்டும்!

கதிரை நிலவை மீனை - நிலக்
கனிமப் பொருளை எல்லாம்
புதிரை நீக்கி அறிதல் - நல்ல
பொழுது போக்கும் முயற்சி!

பிறப்பை இறப்பை அறிதல் - வாழ்வில்
பிழையைத் தவிர்க்க உதவும்!
சிறப்பை இழிவைக் கூட - ஒரு
சேரத் தெரிதல் நன்றாம்!

-1988

143

# பெறுவதுரிமை!
# பெறுவதுடைமை!

கூட்டம் கூடிக் கொட்டி முழக்கிக்
கொள்கையைப் பரப்புங்கள் - தமிழ்க்
கொள்கையைப் பரப்புங்கள்!
ஆட்டம் ஆடிப் பாட்டுப் பாடி
ஆண்ட கதை சொல்லுங்கள்! - நாம்
ஆண்ட கதை சொல்லுங்கள்!

நாட்டம் இன்றி இருந்ததனால்
நலமிழந்து போய்விட்டோம்! - நாம்
நாடோடியாய் ஆய்விட்டோம்!
பாட்டன் அப்பன் உரிமையெல்லாம்
பறிகொடுத்து நின்றிட்டோம்! - தமிழ்ப்
பண்பாட்டிலும் குன்றிட்டோம்!

சிறுவர்களே! சிறுமியரே!
சேர்ந்துவந்து முனையுங்கள்! - ஒரு
சிவப்புப் புரட்சி விளையுங்கள்!
பெறுவதுரிமை! பெறுவதுடைமை!
பெறுவோம் நில எல்லையே! - இதில்
பின்னடைவ தில்லையே!

-1989

## 144 தமிழ்த்தாய் பெருமை!

ஆடிப் பாடுவீர் குழந்தைகளே! - நம்
அன்னை தமிழ்த்தாய் மகிழ்வுறவே!
தேடிப் பிடித்தவள் பெரும்புகழை - இத்
தேயம் உணரப் புகழ்வீரே!

பாடிக் களைத்த திருநாவும் - அவள்
பண்பில் திளைத்த வரலாறும்,
சூடிக் களித்த பெரும்புகழும் - உம்
சொத்தாய் மகிழ்ந்து போற்றுவீரே!

தன்னந் தனியாள்; மூத்துயர்ந்தாள்!, இத்
தரைநிலம் எங்கும் மொழிபயந்தாள்!
தென்னன் தடந்தோள் வளர்ந்தவளாம், இத்
திக்குகள் எட்டும் பரந்தவளாம்!

முன்னம் பெருமை தானிழந்தாள், அவள்
முகத்தில் கவலை தோய்ந்தயர்ந்தாள்!
இன்னம் அறியா திருக்கின்றோம்!, அவள்
ஏற்றம் உணர்ந்தே வாழ்த்துவீரே!

-1989

## 145 மாணவர் எழுச்சிகள், புரட்சிகள் மாந்தரின் நலம்பெற எழுகவே!

மாணவர் மனங்களோ புதுவயல்!
மற்று,அவர் செயல்களோ புதுப்பயிர்!
வீணான நினைவுகள் களைகளாம்!
புதுப்புது விளைவுதாம் பெருமையாம்!

முன்னவர் கருத்தெலாம் உரங்களாம்!
முதியவர் சொல்பவை பாயும்நீர்!
பின்னவர் இவரினும் மேம்படப்
பேசுதல், எழுதுதல் தேவையாம்!

அடித்தளம் புதுமையாய் அமைத்தலும்,
அதன்மேல் இலக்கியம், அறிவியல்,
குடித்தன வாழ்வியல், குமுகியல்,
கூர்த்திடும் பொதுவியல், பொருளியல்,

எனுமிவை யாவினும் புதுமைகள்,
ஏறிடும் சிந்தனை, விளைவுகள்
முனுமுனுப் பிலாதநல் முயற்சிகள்
முழுமையாய்த் தருவதே கடமையாம்!

மாணவர் எழுச்சிகள், புரட்சிகள்
மாந்தரின் நலம்பெற எழுகவே!
தூண்அவர்! எதிர்வரும் உலகிலே
தோற்றுக, பெரும்பயன் நலன்களே!

-1991

மணிமொழி
மாலை

## 146 ஒழுங்கிலான்!

உற்ற கல்வியும் ஓர்ந்த கேள்வியும்,
பெற்றோ னாயினும் பெரியோ னாயினும்,
ஒழுங்கிலா தொருவனை விலங்கே என்க!

-1952

## 147 சில பண்பிலக்கணக் கூறுகள்!

1. வாழ்க்கை ஒன்றே! அதுதான் வழக்குற்று
வீழ்க்கை யில்லா விறலுடைத் தென்க!

2. மானம் ஒன்றே! அதுதான் மயலுற்றே
ஏனம் ஏந்தா ஏறுடைத் தென்க!

3. பெருமை ஒன்றே! அதுதான் பீடுற
அருமை காக்கும் ஆண்மைய தென்க!

4. நாணம் ஒன்றே! அதுதான் நலிவினும்
மாணழிந் துய்யா மறலுடைத் தென்க!

5. உயிரும் ஒன்றே! அதுதான் உடற்கென
வயிறும் பேணா வாயுடைத் தென்க!

6. ஒழுக்கம் ஒன்றே! அதுதான் உயிர்க்கே
இழுக்கந் தேடா இயல்புடைத் தென்க!

7. ஏற்றம் ஒன்றே! அதுதான் இழிவினும்
மாற்றங் கொள்ளா மாண்புடைத் தென்க!

8. கொள்கை ஒன்றே! அதுதான் குலைவினும்
எள்ளல் சேரா ஏற்புடைத் தென்க!

9. பூட்கை ஒன்றே! அதுதான் புகழ்க்கென
வேட்கை பேணும் விம்மிதம் என்க!

10. பண்பும் ஒன்றே! அதுதான் பழிக்கென
நண்புந் துறக்கும் நயமுடைத் தென்க!

11. குடிமை ஒன்றே! அதுதான் கொள்கையில்
மடிமை சேரா மாணுடைத் தென்க!

12. சால்பும் ஒன்றே! அதுதான் சழக்கெனும்
தோல்வி தழுவிடார் துலக்கம் என்க!

13. அடக்கம் ஒன்றே! அதுதான் அறிவிலர்
கடக்க நினையாக் காழ்ப்புடைத் தென்க!

14. தகைமை ஒன்றே! அதுதான் தாழ்வினும்
முகமை கூறா மொய்ம்புடைத் தென்க!

15. புகழும் ஒன்றே! அதுதான் புரையிலா
திகழும் உயிர்க்கொரு தோற்றம் என்க!

-1960

## 148 நற்பண்புகள்!

கூடி வாழ்தலே அன்பு;
கொடுமை இலாதது பண்பு.
பொய் சொல்லாததே அறம்;
பொறுத்துக் கொள்வது மறம்.
கற்று நடப்பது கல்வி;
கல்விக் கழகு பணிதல்!
ஈயார்க் கீவதே ஈகை;
ஏழ்மையில் செப்பமே வாழ்க்கை!

-1967

## 149 கனிந்து உதவுங்கள்!

காய் பருத் தென்ன,
　　கனியாது வெம்புமேல்?
தாய் 'இருந்தாய்' எனச்
　　சொல்வது போதுமோ?
நீ 'இருந் தாய்' என்று
　　உலகம் நினைக்கவே
ஏய நறும்பணி
　　என்றும் புரிகவே!

-1967

## 150 பெரும்பயன் பெறு!

உலகம் பெரிது; வானம் பெரிதே;
　　உன்னுயிர் அவற்றுள் ஓர் அணுவே!
உலகப் பொருள் ஒவ்வொன்றும் அறிவே!
　　உன்அறிவு அவற்றுள் ஒருதுளியே!
உலகின் அசைவில் உன்னுடை அசைவோ
　　ஒருசிறு இயக்கம்; எனவே, நீ
உலகத் துயிர்ப்பில் பெரும்பயன் பெறவே
　　ஒருநொடிப் பொழுதும் ஓயாதே!

-1968

## 151 உயர்வே கருதுக!

எண்ணிப் பேசுக! பேசிச் செய்க!
　　ஏற்றம் கருதி வாழ்ந்திடுக!
மண்ணின் உயிர்களை மதித்துப் போற்றுக!
　　மக்களுக் கென்றும் நலம் புரிக!
உண்ணல் சிறிதே ஆயினும் உன்றன்
　　உடல் நலம் கருதி உண்டிடுக!
கண்ணுள் ஒளியெனத் தாய்மொழி காக்க!
　　கடமை, ஒழுங்கைக் கைக்கொள்க!

-1968

## 152 செம்மை வாழ்வு!

பார்வையில் கூர்மை கொள்!
    பணிகளில் சீர்மை காண்!
பற்றற்ற தொண்டினில் நேர்மைநில்!
    ஆர்வமும் முயற்சியும்
அயர்வில் லாமையும்
    ஆக்கத்தில் ஊக்கமும் கொண்டிடு!
நேர்வதில் மகிழ்வுகொள்!
    நிகழ்வதில் முனைந்திரு!
நேரவிருப்பதில் கருத்துவை!
    சேர்வன சேரட்டும்!
சிறப்பன சிறக்கட்டும்!
    செம்மை வாழ்வு இதுவென நிறைவுகொள்!

-1968

## 153 வாழ்க்கை!

பதியவை மனத்தில்;
பண்பாடே செல்வம்!
புதிய உணர்வு கொள்;
புன்மை அகற்றுவாய்
முதியவர் உரைகேள்!
முழுமை அறிவுகொள்!
மதியை, உளத்தை
மலர்த்தலே வாழ்க்கை!

-1968

## 154 இழிந்தோரும், உயர்ந்தோரும்!

காக்கைக்கு 'வேம்பு' இனிக்கும்;
கழுதைக்குத் 'தாள்' இனிக்கும்;
கழிவுக் குப்பை,
ஈக்களுக்கோ மிக இனிப்பாம்!
இழிந்தவர்கள் இவை போல்வார்.
எனினும் வண்ணப்
பூக்களிலே தேனெடுக்கப்
போகின்ற தேனீப்போல்
பொறிவண் டைப்போல்
ஊக்கமொடு நல்லனவே
உவந்து, உண்டு மகிழ்ந்திடுவர்
உயர்ந்தோர் தாமே! -1968

## 155 நட்பும் பகையும் !

நகைப்பவர் யாவரும்
நண்பர்கள் ஆகார்!
தொகைப்பெருக் கென்பதும்
தோழமைக் கில்லை!
மிகைப்படப் பழகுதல்
மிகுதுயர் செய்யும்!
பகைப்பவர் என்பவர்
பழகி யிருந்தவர்!

-1968

## 156 கல்விக்கு அணிகலன்!

கல்விக் கணிகலன்
கடமையும் ஒழுக்கமும்!
செல்வம் விளைப்பன
செப்பமும் முயற்சியும்!
வெல்வ தென்பது
பொய்படா வினைத்திறம்!
அல்லல் தருவன
ஆவலும் சோம்பலும்

-1968

## 157 அறிவும் அறியாமையும்!

அறிவிலரும் சிற்சிலகால்
ஆர்ப்பரிப்பால் ஆன்ற
அறிவுளர்போல் வாய்ச்சொல்
அவிழ்ப்பர் - வறிதே
பெருமின்னல் ஆர்த்துப்
பெயல் துறக்கும் வானுண்(டு)!
அரும்பணியொன் றன்றோ அளவு!

-1968

## 158 அயர்வு கொள்ளாதே!

முழுவதும் அறிந்துகொள்!
முடிவு செய்யாதே!
தொழுவது நன்று; எனின்
அடிமையா காதே!
விழுவதும் இயல்பு; உடன்
விசும்பென நின்றுகொள்!
அழுவது கோழைமை!
அயர்வுகொள் ளாதே!

-1968

## 159 நீயும் பிறரும்!

பிறரைப் புகழ்கையில்
உனைத்தாழ்த் தாதே!
பிறரை ஆய்கையில்
உன்னையும் எடையிடு!
பிறரைப் பணிக்கையில்
நீயும் பணிபுரி!
பிறரை மகிழ்வுசெய்;
நீயும் மகிழ்ந்துகொள்!

-1969

## 160 உருவைப் பார்த்து வரை!

உருவைப் பார்த்து வரை! - பின்
உளத்தைப் பார்த்து நட!
மருவில் லாத வாழ்க்கை - என
வாழ்ந்த மக்கள் பெரியோர்!

உயர்வைக் கண்டு பழகு! - தூய
உள்ளம் உண்மை அழகு!
அயர்வு கொள்ளல் தாழ்ச்சி - மெய்
அன்பில் லாமை வீழ்ச்சி!

அறிவில் மிக்க பெரியோர் - நல்
ஆக்கம் செய்த மேலோர்
நெறியில் போதல் மகிழ்ச்சி! - தீய
நேயர் தொடர்பு இகழ்ச்சி!

-1979

## 161

## நன்கு எண்ணு!
## தெளிவாய்ச் சொல்! செப்பமாகச் செய்!

எண்ணத் தெரிந்துகொள்!-நன்றாய்
எண்ணத் தெரிந்து கொள்!
உண்ணும் உணவும் உடுக்கும் உடையும்
பண்ணும் செயலும் பழகும் முறையும்
எண்ணத் தெரிந்து கொள்! - நன்றாய்
எண்ணத் தெரிந்து கொள்!

சொல்லத் தெரிந்து கொள் - தெளிவாய்ச்
சொல்லத் தெரிந்து கொள்!
கல்லார் முன்னும் கற்றார் முன்னும்
வெல்லத் தமிழில் விளங்கு மாறு
சொல்லத் தெரிந்து கொள்! - தெளிவாய்ச்
சொல்லத் தெரிந்து கொள்!

செய்யத் தெரிந்து கொள்! - நன்கு
செய்யத் தெரிந்து கொள்!
கையால் செயலோ கருவிச் செயலோ,
துய்ய முறையில் செப்ப மாகச்
செய்யத் தெரிந்து கொள்! - நன்கு
செய்யத் தெரிந்து கொள்!

-1980

## 162 சொல்லினும் செயலே மேல்!

அறிவுரை மட்டிலும் போதாது - அதன்
ஆக்கச் செயலும் வேண்டும்! - வெறும்
செறிவுரை கூறிப் பயன்விளைமோ? - வினை
செய்யவும் தெரிந்திடல் வேண்டும்!

அன்புரை மட்டிலும் போதாது - அதில்
அரும்பிடும் வினைகளும் வேண்டும்! - நல்ல
தென்புரை மட்டிலும் பயன்தருமோ? - நிலை
தேற்றிடும் செயல்களும் வேண்டும்!

எழுத்துரை மட்டிலும் போதாது - அவ்
வெழுத்துகள் செயல்பெறல் வேண்டும்! - வாய்
வழுத்துரை மட்டிலும் நலந்தருமோ? - துணை
வாழவும் செய்திடல் வேண்டும்!

வழிசொலல் மட்டிலும் போதாது - நாம்
வழித்துணை ஆகவும் வேண்டும்! - பிறர்ப்
பழிசொலல் மட்டிலும் திறம்பெறுமோ? - அப்
பழியைநாம் தவிர்த்தலும் வேண்டும்!

சொல்லுதல் மட்டும் போதாது - நாம்
சொன்னதைச் செய்தலும் வேண்டும்! - வாய்
மெல்லுதல் பசியினை அடக்கிடுமோ? - உரை
மேலெனில் செயலையும் தூண்டும்!

-1982

## 163 உள்ளமும் உரையும் செயலும்!

உள்ளம்,நன் றானால்,
உரை,தெளிந் திருக்கும்!
கள்ளம் இருந்தால்
கருத்தெலாம் இருளே!

சீரிய சொற்களே
செயல்களுக் கடிப்படை!
கூரிய கருத்தே
குழப்பம் தவிர்க்கும்!

தெளிவான உள்ளமே
தெளிவான கருத்தை
நெளிவுசுழி வின்றி
நேர்மையாய் உணர்த்தும்!

கோணல் உள்ளமே
குழம்பிய உரைதரும்;
நாணுறு செயல்களை
நாட்டினில் விளைக்கும்!

-1982

## 164 நாள் ஒழுக்கம்!

கதிருக்கு முன்னெழு!
கடமைகள் வரிசை செய்!
நூலொடு தொடர்பு கொள்!
நோதவிர் பயிற்சி செய்!
மயக்கிலா உண்டி கொள்!
மாண்பொடு பள்ளி செல்!

ஆசிரியர்த் தழுவு!
அன்பரில் நண்பு தேர்!
கல் கேள் பட்டறி!
கரவிலா உறவு கொள்!
மாலை உடல் பயில்!
மறாமல் கல்வி தேர்!

இரவூண் குறைத்துண்!
எதிரிரா விழித்திரேல்!
என்றும் தனிப்படு!
இடக்கைப் புறந் துயில்!
பெரியோர் வழித்தொடர்!
பெற்றவர் மகிழ்வு செய்!

-1982

## 165 உழைப்புக்கு விளைவுண்டு!

உண்மைக் கென்றும்
மதிப்புண்டு, நல்ல
உழைப்புக் கென்றும்
விளைவுண்டு!
திண்மைக் கென்றும்
துணிவுண்டு, மனத்
தெளிவுக் கன்பின்
கனிவுண்டு!

பொறுமைக் கென்றும்
வழியுண்டு, உளப்
பொறாமைக் கென்றும்
நலிவுண்டு!
வெறுமைக் கென்றும்
இழிவுண்டு!, நல்ல
விளைவுக் கென்றும்
புகழுண்டு!

-1983

## 166 உண்மை உரம்பெறும்! வெண்மை அழிவுறும்!

உண்மைக்குப் புறம்பாய்
உரைப்பன யாவும்,
திண்மை பெறாமல்
தீமையுள் மூழ்கும்!

வெண்மை அறிவால்
தீமைகள் விளைப்போன்
மண்மேல் பழியுடன்
மாய்ந்தழி கின்றான்!

-1983

## 167 மூன்று நல்லுணர்வுகள்!

ஒருவன்உனை மேய்த்தாலும்,
ஒருவன்உனை ஏய்த்தாலும்,
தெருவழியில் நீ ஒருநாள்
இரவலனாய்த் திரிந்தாலும்,
கருவறையில் சிறையிருக்கக்
காலம் உனைச் செய்தாலும்,
திருவுளத்தில் 'பொய்'என்னும்
'தீங்குணர்வைக் கொள்ளாதே!'

பசித்திருந்து நீரின்றிப்
பட்டினியாய் நீ பலநாள்
விசித்தழவே நேர்ந்தாலும்,
விரலொடிய உழைத்தாலும்,
நசித்தழுகும் பொருள்நசையால்
நயமின்றிப் பிறரீட்டம்
புசித்திடவே 'திருட்'டென்னும்
'புன்செயலைச் செய்யாதே!'

பழியுரையால் பகைவருனைப்
பதைபதைக்கச் செய்தாலும்,
இழிவுரையுன் உள்ளத்தில்
ஈட்டியெனப் பாய்ந்தாலும்,
அழிவில்லாப் பொறையுளத்தால்
அவற்றையெலாம் நீ,தாங்கி
ஒழிவில்லா முயற்றுழைப்பால்
'உயர்கடமை மறவாதே'!

-1985

## 168 அனைத்திலும் உயர்ந்தது!

எத்தனை அணுக்கள்
இருக்கின் றனவோ,
அத்தனை நோய்கள்
மாந்தனுக் குண்டு!
அத்தனை நோயினும்
அழியா திருப்பது,
வித்தினைப் போன்ற
அவனுடை உள்ளமே!

எத்தனை நினைவுகள்
இயங்குகின் றனவோ,
அத்தனை விளைவுகள்
மாந்தனால் முடியும்!
அத்தனை விளைவிலும்
அருமைய(து), அவனால்
எத்தனைப் பேர், பயன்
எய்தினார் என்பதே!

-1985

## 169 உணர்வு, சொல், செயல், பயன்!

உள்ளத்தில் உணர்வாய்த் தோன்றி,
உருப்பெற்று வடிவம் எய்தி,
விள்ளருஞ் சொற்க ளாலே
வெளிப்பட்டுச் சூழல் சேர்ந்தே
எள்ளலும் இழிவும் இல்லா
எழிலுடன் செயலு மாகிக்
கொள்ளுமிவ் வுலகோர்க் கின்பம்
கொடுப்பதே பயனென் போமே!

-1986

## 170 காலத்தால் நிலைப்பதே எல்லை!

எத்தனை நினைக்கினும்,
　　எவ்வளவு உழைப்பினும்
இயன்றதே நாம்செய முடியும்!
　　அத்தனை நினைவிலும்
அத்துணை உழைப்பிலும்
　　ஆவதே விளைவென ஆகும்!

எண்ணமாய் உள்ளவை
　　உரைகளாய் வெளிப்பட
எத்துணை முயற்சிகள் தேவை!
　　திண்ணமாய் அவ்வுரை
செயலாய் விளைந்திடத்
　　திட்டம்,ஆள்,பொருள் - பல தேவை!

விளைந்திடும் செயலையே
　　அனைவரும் விரும்பி
வேண்டுவர் என்பதும் இல்லை!
　　களைந்திடும் சிலரால்;
கருகிடும் சிலரால்;
　　காலத்தால் நிலைப்பதே எல்லை.

-1987

## 171 எதிலும் சிறப்பு வேண்டும்!

கல்விக் குரிய நூல்களை மட்டும்
கற்றால் போதாது - அறிவுச்
செல்வம் பெருக்கும் நூல்கள் பிறவும்
தேர்ந்து பயிலல் வேண்டும்!

பொதுவாய் இயங்கும் இயக்கம் மட்டும்
உடலுக்குப் போதாது! - மேலும்
புதுப்புதுப் பயிற்சிகள் உடலுக்குத் தந்தே
உடலைப் பேணல் வேண்டும்!

இயல்பாய் உண்ணும் உணவுகள் மட்டும்
நலத்துக்குப் போதாது; - நாளும்
முயலும் உழைப்புக் கேற்ற உணவுகள்
முனைந்தே உண்ண வேண்டும்!

‘ஏதோ இருந்தோம் என்னவோ வாழ்ந்தோம்’
என்றே இருக்காமல் - எந்தத்
தீதும் இன்றித் தெளிவாய் வாழத்
திறனைப் பெறுதல்வேண்டும்!

-1987

## 172 பூப்பதெல்லாம் காய்ப்பதில்லை!

கண்டன வெல்லாம்
கற்றிடத் தோன்றும்;
காலமும் நேரமும் போதாவே!
உண்டன வெல்லாம்
செரித்திடும் என்றால்
உடம்பும் வயிறும் கொள்ளாவே!

நினைப்பன வெல்லாம்
நிகழ்த்துவ தென்றால்
நிலமும் வானும் என்னாகும்?
சினைப்பன வெல்லாம்
சிறப்பன வென்றால்
செடிகொடி மரங்கள் மண்ணாகும்!

பூப்பன வெல்லாம்
காய்ப்பன வென்றால்
புதுப்புது விளைவுக்கு நிலமேது?
வாய்ப்பன வற்றுள்
வளர்வன கொண்டு
வாழ்ந்திட விலையெனில் நலமேது?

-1987

## 173 சிறக்கும் வாழ்வே!

கல்விநலம் பெரி(து); அதிலும்
கருத்து நலம் மிகப்பெரிது;
கருத்தை முற்றும்
சொல் விளக்கம் தரல் பெரிது;
சொன்னபடி செயல்பெரிது;
சோர்வே இன்றிப்
பல்வகையாய் மக்களுக்குப்
பயன்தொண்டாற் றல் பெரிது!
படிக்கும் போதே
செல்வழியைத் தீர்மானம்
செய்துகொண்டு நடந்தால்தான்
சிறக்கும் வாழ்வே!

-1990


## 174 தீர்வு செய்! முனைந்து செல்!

உண்மையும் நேர்மையும்
ஊக்கமும் ஒழுக்கமும்
உன்றனை ஈடேற்றும் படிகள்!
அண்மையோ சேய்மையோ
ஆர்வமாய் உழைத்திடு!
ஆக்கமோ பழமரச் செடிகள்!

தீமையும் நன்மையும்
இலைகளும் பூக்களும்!
சிந்தனை செய்; அது விதைதான்!
ஆமையும் முயல்தனை
அன்றைக்கு வென்றது!
அன்றன்றும் நடக்கின்ற கதைதான்!

சோர்வும் சோம்பலும்
உனைமென்று தின்பன!
சுறுசுறுப் பேஉனை உயர்த்திடும்!
தீர்வுசெய்; முனைந்துசெல்;
திகைத்துநின் றிடாதே!
திசைதிசை வெற்றிகள் குவித்திடும்!

-1990



உண்மைக் கென்றும்
மதிப்புண்டு, நல்ல
உழைப்புக் கென்றும்
விளைவுண்டு!
திண்மைக் கென்றும்
துணிவுண்டு, மனத்
தெளிவுக் கன்பின்
கனிவுண்டு!

பொறுமைக் கென்றும்
வழியுண்டு, உளப்
பொறாமைக் கென்றும்
நலிவுண்டு!
வெறுமைக் கென்றும்
இழிவுண்டு!, நல்ல
விளைவுக் கென்றும்
புகழுண்டு!